விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com.

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்,உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2045 மார்கழி 13 ஞாயிற்றுக்கிழமை (28.12.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 009

## யாழ்.இந்து மாணவன் தேசிய ரீதியில் முதலிடம்


பா.டாருகீசன்


பா.கௌசனா


ரி.தயந்திகா

(யாழ்ப்பாணம்)

2014 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சையில் யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் கணிதப் பாடப்பிரிவில் ஆங்கில மொழியில் தேசிய ரீதியில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

பாக்கியராஜா டாருகீசன் என்ற

23 ஆம் பக்கம் பார்க்க....

## இராணுவத்தை வெளியேற்ற இடமளிக்கப் போவதில்லை

### —மைத்திரிபால தெரிவிப்பு—

(கொழும்பு)

வடக்கிலிருந்து இராணுவத்தை அகற்றுவதற்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இடமளிக்கப்போவதில்லை என எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

23 ஆம் பக்கம் பார்க்க....

## யாரை ஆதரிப்பது குறித்து கூட்டமைப்பு நேற்று ஆராய்வு

(வவுனியா)

ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராகக் களம் இறங்கியுள்ள மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்துப் பிரசாரங்களை மேற்கொள்வது தொடர்பில் கூட்டமைப்பு பிரதிநிதிகள் சிலர் நேற்று வவுனியாவில கலந்துரையாடியுள்ளனர்.

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் யாரை ஆதரிப்பது என கூட்டமைப்பு தெளிவாக அறிவிக்காத நிலையில் கூட்டமைப்பின் சில உறுப்பினர்கள் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவான கருத்துக்களை மக்கள் மத்தியில் தெரிவித்து வந்தனர்.

இந்த நிலையில் கூட்டமைப்பின

23 ஆம் பக்கம் பார்க்க....

## சீரற்ற காலநிலை அதிகரிக்கலாம்

(கொழும்பு)

பொத்துவில் தொடக்கம் காங்கேசன்துறை வரையான கடற்பகுதியைச் சூழவுள்ள கடற்தொழிலில் ஈடுபடுபவர்கள் சீரற்ற காலநிலை குறித்து அவதானத்துடன் இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் 150 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சிக்கான வாய்ப்புள்ளதாகவும் வானிலை அவதான நிலையம் குறிப்பிட்டுள்ளது.

24 ஆம் பக்கம் பார்க்க....

# மோசமான காலநிலை

## 24 பேர் பலி; 10 இலட்சம் பேர் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் கடந்த சில நாட்களாக நிலவும் மோசமான காலநிலை காரணமாக மழை வெள்ளம் மற்றும் மண்சரிவுகளில் சிக்கி இதுவரை குறைந்தது 24 பேர் உயிரிழந்துள்ளனர். 10 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

23 ஆம் பக்கம் பார்க்க....

## மு.காவின் முடிவு இன்று வெளியாகும்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு என்று இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அறிவிக்கப்படும் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

நேற்று சனிக்கிழமை அலரிமாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடிய பின்னரே இந்த அறிவிப்பை மு.கா.வெளியிட்டுள்ளது.

கரையோர மாவட்டப் பிரேரணை

23 ஆம் பக்கம் பார்க்க....

## மைத்திரி ஜனாதிபதியானால் பொதுபல சேனவுக்கு ஆபத்து

### முன்னாள் எம்.பி ஸுஹைர் தெரிவிப்பு

(கொழும்பு)

பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன ஆட்சி அமைத்ததும் முஸ்லிம் மக்களுக்கு எதிராக செயற்பட்டுவரும் பொது பல சேன போன்ற பேரினவாத சக்திகளைக் கட்டுப்படுத்துவார்.

அதற்கேற்றவாறு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை அவர் அமைத்துள்ளார். மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இது குறித்து எந்த வாக்குறுதிகளும் அளிக்கப்படவில்லை. இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தேசிய ஐக்கிய அமைப்பின் தலைவருமான ஜனாதிபதி சட்டத்தரணி ஸுஹைர் தெரிவித்தார்.

தனது ஏற்பாட்டில் இடம்பெற்ற கொழும்பு முஸ்லிம் சமூகத்துடனான பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன பங்கேற்ற விசேட கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு

24 ஆம் பக்கம் பார்க்க....

## பாப்பாண்டவருக்கு விசேட பாதுகாப்பு



(கொழும்பு)

பாப்பாண்டவர் முதலாம் பிரான்ஸிஸின் இலங்கை விஜயத்திற்காக

24 ஆம் பக்கம் பார்க்க....

## 155 அரசியல்வாதிகள் கட்சி தாவியுள்ளனர்

### - 25 நாட்களில் மட்டும் -

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டது முதல் 25 நாட்களில் 155 அரசியல்வாதிகள் கட்சி தாவியுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த சேனநாயக்க எதிர்க்கட்சியில் இணைந்து கொண்டு, இந்த கட்சி தாவல் நடவடிக்கையை ஆரம்பித்தார்.

இதுவரையில் 155 மக்கள் பிரதிநிதிகள் ஆளும் கட்சியுடனும் எதிர்க்கட்சியுடனும் இணைந்து கொண்டுள்ளனர்.

அதிகளவான ஆளும் கட்சி மக்கள் பிரதிநிதிகள், பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து கொண்டுள்ளனர்.

24 ஆம் பக்கம் பார்க்க....


SISIL WORLD
உங்கள் கண்களுக்கு விருந்தளிக்க 40% வரை மின்சார சேமிப்புடன் கூடிய
LED,3D LED
தொலைக்காட்சி பெட்டிகள்
இப்பொழுது எம்மிடமிருந்து!



- வட்டி இன்றிய கொடுப்பனவு
- விசேட விலைக் கழிவுகள்
- 3வருட நீடித்த உத்திரவாதம்
- பண்டமாற்று கொடுப்பனவு
- விசேட பரிசுப்பொருட்கள்


இல-106,கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம் 021-2219291.
இல-125,கே.கே.எஸ் வீதி,சுன்னாகம் 021-2242335
இல-17/3,கண்டி வீதி,கிளிநொச்சி 021-2283755
(சி-9622)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

## சாமியே சரணம் ஐயப்பா



மஹோற்சவ குருமணி
"பிரதிஷ்டா பிரதமகுரு", "பிரதிஷ்டா சக்கரவர்த்தி", "சர்வசாதகசிம்மம்"
அகோரசிவம் 18-ம் மலை குருஸ்வாமி அருள்ஜோதி
Dr.ஸ்கந்த சாம்பசிவ ஜெகதீஸ்வர சிவாச்சாரியார் J.P .அவர்களின்
"ஸ்ரீ பூதநாதகீதை", ஸ்ரீ சபரீசன் பஜனா மிருதம்" என்னும் நூல்கள்
"மிருக யாத்ரா விஜயம்" என்னும் DVD வெளியீடுகளின்

# "வெளியீட்டுப் பெருவிழா"

இடம்:-நல்லூர் நடராஜா பரமேஸ்வரி கல்யாண மண்டபம்
காலம்:-2014.12.28 ஞாயிற்றுக்கிழமை (இன்று)
நேரம்:-மாலை 3.00 மணி முதல் 7.00 மணி வரை

தலைமை
வாழ்நாள் பேராசிரியர் இலக்கிய கலாநிதி
ப.கோபாலகிருஷ்ண ஐயர்

## நிகழ்ச்சிகள்

-மங்கல இசை, தீபாராதனை
-மங்கல விளக்கேற்றல்
-வேத பாராயணம்
-திருமுறை பாராயணம்
-வரவேற்புரை:-பிரம்மஸ்ரீ.ச.பத்மநாப சர்மா
(விரிவுரையாளர்- சமஸ்கிருதத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
-அருளுரை:- நல்லை ஆதீன முதல்வர் சுவாமிகள்
சின்மயா மிஷன் சுவாமிகள்
-ஆசியுரை:-குரு சிரேஷ்டர்கள்
-வாழ்த்துரை:-சமயப் பெரியோர்கள்
-தலைமையுரை:-தலைவர் ப.கோபாலகிருஷ்ண ஐயர்
-சிறப்புரை:-சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள்
-மதிப்புரை:-சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக் குருக்கள்
ஸ்ரீ பூதநாத கீதை வெளியீடு DVD பஜனை புத்தகம் வெளியீடு
-கௌரவிப்பு -பதிலுரை:-விழாநாயகர்
-நன்றியுரை:-குருஸ்வாமி இ.அரிஹரசுத சிவாச்சாரியார்
-சிறப்பு பஜனை, தீபாராதனை

நிகழ்ச்சிகள் நெறியாள்கை: மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன் J.P
அனைவரையும் வருக வருக என அன்புடன் அழைக்கின்றோம்.
குருஸ்வாமியின் அருளாணைப்படி விழாக் குழுவினரும்
கோண்டாவில் ஈழத்து சபரிமலை ஐயப்ப தேவஸ்தானமும்

(சி-9632)


## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கந்தர்மடம், 6-ம் ஒழுங்கையில், நல்ல சூழலில் சகலவசதிகளையும் கொண்ட அழகான வீடு உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:-0779698942

(8883)


## நேரடி விவாதத்துக்கு அழைப்பு!

(கொழும்பு)

ஹெல உறுமயவுக்கும் அதில் இருந்து விலகிச்சென்றுள்ள மேல் மாகாணசபை உறுப்பினர் பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பிலவுக்கும் இடையில் நேரடி தொலைக்காட்சி விவாதத்தை நடத்த உள்ளூர் தொலைக்காட்சி சேவை ஒன்று முன்வந்துள்ளது.

ஹெல உறுமய ஏற்கெனவே சவால் விடுத்தமைக்கு அமைய இந்த விவாதத்தை எதிர்வரும் 29ஆம் திகதி நடத்த தொலைக்காட்சி நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது.

இந்த விவாதத்தில் ஜாதிக ஹெல உறுமயவின் சார்பில் அதன் முக்கிய உறுப்பினர் அநுருத்த பிரதீப் பங்கேற்கவுள்ளார்.

இந்தநிலையில் தாம் 29ஆம் திகதி நடைபெறவுள்ள நேரடி விவாதத்தில் வேறு பணிகள் காரணமாக பங்கேற்க முடியாது என்று தெரிவித்துள்ள உதய கம்மன்பில, தமது நிகழ்ச்சியை முன்கூட்டி பதிவு செய்து ஒளிபரப்புமாறு கோரியுள்ளார். (எ-11)


## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

(சி-9621)



## மலேசியாவில் உடனடி வேலை வாய்ப்புக்கள்



1)DHL உதவியாளர்(சம்பளம்)1500 Rm + ot SR-65000

2)DHL றைவர் (சம்பளம்) 2000 RM + ot SR-85000

3)5* ஹோட்டல்
சமையல் செய்பவர் - சம்பளம்-2000Rm - SR -85000
றூம் கிளீன் செய்பவர்- சம்பளம்-1500Rm - SR -65000
உதவியாளர்-சம்பளம்-1500Rm - SR -65000

4)பில்டிங் கேன்ஸ் செக்சன்
மேசன் -சம்பளம்-2800Rm - 110 000- SR
பிளம்பர்-சம்பளம்-2000Rm - 85000 - SR
வெல்டர் - சம்பளம்-2000Rm - 85000-SR
காப்பெண்டர்-சம்பளம்-2000Rm - 85000-SR
வயறிங்-சம்பளம்-2000Rm - 85000-SR
Unit company labours-900Rm+OT-45000SR
AirPort cleaners-900 Rm+OT-45000SR
Company labours-900Rm+OT-45000SR

கையடக்கத் தொலைபேசி:-0767729332
Thinesh Jeyakumar 2012@Gmail.com

(8880)





## மூலிகை மருத்துவத்தில் சாதனை
## தெய்வீக மூலிகை மருந்துகளால்



ஆண்மைக்குறைவு, குழந்தையில்லாமை, சர்க்கரை நோய், சொரியாசிஸ், ஆஸ்மா, மூலநோய், எடை கூட/ குறைய, மஞ்சள் காமாலை(B)(HBSAG), பாலியல் நோய் முழுமையாக குணமாகும் அதிசயம்

23 ஆயுர்வேத மருத்துவர்களின் ஆராய்ச்சியின் சாதனைகள்

உயிரணுக்கள் உற்பத்தியில் 100% சாதனை

### ஆண்மைக்குறைவு

ஆண்மைக்குறைவு ஏற்பட முக்கிய காரணங்கள் இரண்டு. தானாக வருவது முதல் காரணம். நாமாக வரவழைத்துக் கொள்வது இரண்டாவது காரணம். விஷக்காய்ச்சல், உடல் பலவீனம் போன்றவைகளின் காரணமாக ஆண்மைக்குறைவு இயல்பாக ஏற்படுகின்றது. அதையும் தவிர்த்து இளமைப்பருவத்தில் ஏற்படுகின்ற தீய பழக்கங்கள், போதைப்பொருட்கள் பயன்படுத்துதல், தனது சக்திக்கும் அதிகமான உடல் உழைப்பு, டென்ஷன், சர்க்கரை நோய், சரியாக சாப்பிடாமை, உடல்சூடு போன்றவைகளால் ஆண்மைக்குறைவு தானாக வரவழைத்துக்கொள்ளப்படுகிறது. இதன் காரணமாக நரம்புத்தளர்ச்சி, உடல் படபடப்பு, மயக்கம், சோர்வு, கை, கால் கடுக்கம், அசதி, கண் எரிச்சல், கன்னத்தில் குழி விழுந்து காணப்படுதல், ஞாபக சக்தியின்மை, தூக்கமின்மை, தனியாக சிந்தித்தல், திருமண பயம், இல்லறத்தில் முழுமையாக ஈடுபட முடியாமை, விரைவாக விந்து வெளியேறுதல், குழந்தையின்மை போன்றவைகள் ஏற்படுகின்றன. இதிலிருந்து விடுபட்டு இல்லற வாழ்வை இனிமையாக ஆரம்பிக்க பக்க விளைவுகளற்ற முறையில் சிகிச்சையளிக்கிறார்.

### குழந்தையின்மை

ஆண்களுக்கு ஏற்படும் உயிரணுக்கள் உற்பத்தியின்மை, உயிரணுக்கள் குறைவு மற்றும் பெண்களுக்கு ஏற்படும் மாதப்பிரச்சினை, கர்ப்பப்பை வளர்ச்சியின்மை, கர்ப்பப்பைச் சுருக்கம், கருமுட்டை உற்பத்தியின்மை, கருமுட்டை வளர்ச்சியின்மை மற்றும் வெள்ளைபடுதல் போன்ற பிரச்சனைகளிலிருந்து விடுபட்டு குழந்தைப்பாக்கியம் பெறலாம்.

செல்: 0091 9842457673, 0091 9600336009

மேலும் சிறப்புச் சிகிச்சைக்கு அரசு பதிவு பெற்ற சித்த மருத்துவர் Dr.G.ஜெகதீஸ்குமார் அவர்களை தொடர்பு கொள்ளவும்.

ஸ்ரீ தேவி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை
இராமாபுரம், சென்னை-89, இந்தியா.
Email: sridevisiddha@gmail.com Skype: sridevisiddha

(சி-9727)



## German Language Academy
## (கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி)

ஜேர்மன், சுவிஸ், டொச் மொழிகள் வெளிநாடு செல்பவர்களுக்கு A1 பரீட்சைக்கும் ஏற்றவாறு ஜேர்மனியில் வசித்து வந்த ஆசிரியர் எஸ். கோணேஸ்வரன் அவர்களால் புதுவருடப் பிறப்பன்று (01.01.2015) புதிய பிரிவுகள் ஆரம்பமாக உள்ளன.

மேலும் விபரங்களை அறிய தொலைபேசியின் ஊடாக தொடர்பு கொண்டு நேரில் வரவும்.

தொடர்புகளுக்கு:- ஆரியகுளம், யாழ்ப்பாணம் 0779707322

(8879)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்பர்கள் நண்பர்கள் வாழக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்கள்.

**வாணி ரெக்ஸ் வழங்கும்**

**விசேட விலைக் கழிவுகள்**

எதிர்வரும் நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு
சகல விதமான புடைவை வகைகளுக்கும் விசேட
விலைக் கழிவுகள். 10 % – 25 % வரை ஒவ்வொரு
பொருட்களுக்கும் உண்டு என்பதை மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக் கொள்கின்றோம்.
இவ் அரிய சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்.
தரமான தெரிவுகளுக்கு முந்துங்கள்.

வாணிரெக்ஸ்
இல. 81 பெரியகடை,
யாழ்ப்பாணம்.

தொலை பேசி :-
021 222 5578
021 222 9286








# CIL MEGA SCHOLARSHIP -2015

## for 500 Students

## CIL
Cambridge Institute of London



மாணவர்களின் உயர்கல்விக்கு உதவும் வகையிலும், வேலை தேடுவோருக்கு உலகளாவிய ரீதியில் வேலைவாய்ப்பினை பெறும் வகையிலும் அவர்களுடைய ஆங்கில மொழியாற்றலை மேம்படுத்துவதே எமது நோக்கமாகும்.

## சர்வதேச தரம்மிக்க ஆங்கில கற்கை நெறிகள்

British Council ஊடாக நடைபெறும் சர்வதேச முதற்தர ஆங்கில கற்கைநெறிப்பரீட்சையான Cambridge English இற்கு உரிய கற்கை நெறிகளை CIL நிறுவனம் மிகக் குறைந்த கட்டணத்தில் கற்பிக்கின்றது.

| Cambridge English UK Qualification | CIL Qualification | IELTS Band | CEFR Level |
|---|---|---|---|
| Cambridge English Advanced | Diploma in English Final | 6.5 - 7.0 | C1 |
| Cambridge English First | Diploma in English Intermediate | 5.0 - 6.0 | B2 |
| Cambridge English Preliminary(PET) | Diploma in English Foundation | 3.5 - 4.5 | B1 |
| Cambridge English Key (KET) | Certificate in English | 3 | A2 |
| Cambridge English Movers | Certificate in Beginner English | 1.5 - 2.5 | A1 |

ஒரு கற்கை நெறியைக் கற்பதனால் தரம்மிக்க இரு சான்றிதழ் பெற இது ஓர் அரிய வாய்ப்பு!

CIL என்னும் எமது நிறுவனமானது British Council ஊடாக நடைபெறும் Cambridge English என்ற சர்வதேச தரம்மிக்க பரீட்சைக்குரிய பயிற்சி நெறிகளை கற்பிக்கும் நிறுவனமாகும்.

### Certificate in Spoken English || Dip.in Spoken English
### Why Should you Study Spoken English @ CIL

- மாணவர்களை குழுவாக்கி Simple Dialouges, Questions & Answers, Presentation, Debates, British Pronnunciaton & Assent போன்ற பயிற்சிகள்.
- English News, Movies, Poems & Songs போன்றன காட்சியப்படுத்தல் (Audio & Video) மூலம் விளங்கிக் கொள்வதற்கான விசேட பயிற்சிகள்.
- ஆங்கில பேச்சாற்றலை வளர்த்தற் பொருட்டு, வகுப்பறையில் ஆங்கில மொழியை மட்டுமே பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படல்.
- ஒவ்வொரு மாணவருக்கும் ஆங்கிலம் பேசுவதில் ஏற்படும் இடர்களை / தடங்கல்களை தனித்தனியாக கண்டறிந்து அதற்கான பிரத்தியேக பயிற்சிகள்.
- அனைத்து வயதினரும் கற்பதற்கு ஏற்றவாறு வாரநாள் மற்றும் வார இறுதி நாள் வகுப்புக்கள்
- மிகக் குறைந்த கற்கைநெறிக் கட்டணம்.




study
IELTS
with us &Get 6+Band

### Application Form

Full Name :..........................................
(Mr/Mrs./Miss)
Address :..........................................
..........................................
Date of Birth :..........................................
School Name :..........................................
Contact Number Home: ..................... Mobile: .....................

Please Mark "✓" in the relevant box.

Sutdents O/L ☐ A/L ☐
Under Graduates ☐
Professionals ☐
Others ☐

......................
Date

......................
Signature

✂ ........ இங்கே வேறாக்கவும் ........ ✂

இவ்விண்ணப்பத்தினை சரியான முறையில் பூரணப்படுத்தி எதிர்வரும் 03.01.2015 ற்கு முன்னதாக எமது நிறுவனத்தின் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அல்லது உங்கள் சுயவிபரத்தை எமது மின்னஞ்சல் முகவரி ciljaffna@gmail.com ற்கு அனுப்பி வைக்கவும்.

No. 17,3rd Lane, Power House Road, Jaffna.
(புதிய HNB, ராசி சில்க்ஸ் அருகில்) (சி-9619)
Tel: 021 221 7774 / 0777 382108


# இராசி பலன்

28.12.2014
(மார்கழி 13, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.21 மணிக்கு
சப்தமி மாலை 5.24 மணிவரை
பூரட்டாதி பிற்பகல் 12.09 மணிவரை
இராகுகாலம் 4.58-6.28 மணிவரை
சுபநேரம் 9.28-10.58 மணிவரை
சித்தாமிர்தம்

வளவன்

**மேடம்**
வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், சொன்ன சொல்லைக் காப்பாற்ற துடிப்புடன் செயற்படுவீர்கள், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம்.

**இடபம்**
இல்லத்தில் இனிய சம்பவங்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புண்டு, புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்திதரும்.

**மிதுனம்**
தொட்ட காரியங்கள் வெற்றி பெறும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், தூரதேச செய்திகள் மகிழ்ச்சி தரும் வகையில் அமையும்.

**கடகம்**
முன்னேற்றம் காண்பதற்கு முயற்சிகள் எடுப்பீர்கள், புகழ் மிக்கவர்களின் சந்திப்புக்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**சிம்மம்**
காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், விரயங்கள் தவிர்க்க இயலாமல் போகலாம், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது.

**கன்னி**
தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், சுபகாரிய பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படலாம், பயணத்தால் பலன் கிடைக்கும், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**துலாம்**
விழாக்களில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், மறைமுக எதிர்ப்புகள் மாறும், சுவாரஸ்யமான நாள்.

**விருச்சிகம்**
புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும், பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் புகழ் கூடும்.

**தனுசு**
பெற்றோரின் தேவைகளில் அக்கறை காட்டுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்.

**மகரம்**
விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும் நாள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும்.


**கும்பம்**
குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் இடம்பெறலாம், எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், புதிய பொருட்சேர்க்கைக்கு அத்திவாரமிடுவீர்கள்.

**மீனம்**
திடீர் பயணங்களால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி மகிந்தவுக்கு ஓய்வளிக்க வேண்டும்

## ரணில் தெரிவிப்பு



**ஜனாதிபதி மகிந்தவிற்கு ஓய்வு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் நேற்று பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எனது நல்ல நண்பர். கடந்த எட்டு ஆண்டுகளாக அவர் கடமையாற்றியுள்ளார். அவரை ஓய்வூறுத்தி அதிக வேலைப்பளுவிலிருந்து விடுவிக்க வேண்டிய பொறுப்பு என்னைச்சாரும்.

அமைச்சரவையில் 70 பேர் அங்கம் வகிக்கின்றனர். நாடாளுமன்ற அதிகாரங்களும் வலுவிழக்கச் செய்யப்பட்டுள்ளன.எல்லா இடங்களிலும் ராஜபக்ஷ அதிகாரம் பரவியுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் பொதுச் செயலாளரும் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

ஒருவர் ராஜபக்ஷ அரசாங்கத்தையும் மற்றுமொருவர் மக்களையும் பிரதிநிதித்துவம் செய்து போட்டியிடுகின்றனர்.

ராஜபக்ஷ அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பத்து பக்கங்கள் செய்தவை பற்றியும், 100 பக்கங்களில் செய்யப் போவது பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ராஜபக்ஷ அரசாங்கம் தேர்தல் விஞ்ஞாபனம் ஒன்றை வெளியிடாது. சுய விமர்சனம் ஒன்றையே செய்துள்ளது.

நாட்டில் தொழில் வாய்ப்பு இல்லையாம், போதைப் பொருள் பயன்பாடு தலைவிரித்தாடுகின்றதாம். அது சரி இந்த நாட்டை கடந்த எட்டு ஆண் டுகள் யார் ஆட்சி செய்தார்கள்? நாமா அல்லது ராஜபக்ஷ குடும்பத்தனரா?இளைஞர் யுவதிகள் ரிலோட் ஒன்றை போடக் கூட பணம் இல்லாமல் இருக்கின்றார்கள்.

உடை வாங்கவோ அல்லது காலணிகளை வாங்கவோ பணம் இல்லை.நாம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டால் பத்து இலட்சம் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுப்போம். ராஜபக்ஷ ஆட்சியாளர்களை விரட்டியடிக்கவும். நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்தவும் மககள் மைத்திரிபால சிறசேனவுக்கு வாக்களிக்க வேணடுமென ரணில் விக்ரம சிங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## மரணத்தைக்கண்டு பயப்படவில்லையாம்
### சம்பிக்க கூறுகிறார்

நியாயத்துக்காக போராடும் போது மரணத்துக்கு அஞ்சவில்லை என்று ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைத்துள்ள அவர், பொது வேட்பாளர் தொடர்பில் அரசாங்கம் சேறு பூசும் செயல்களில் ஈடுபட்டு வருகிறது.

எனினும் எதிரணியின் செயற்பாடுகளில் அது தாக்கத்தை ஏற்படுத்தாது என்று ரணவக்க கூறினார். அரசாங்கம் மேற்கொண்டு வரும் சேறு பூசும் நடவடிக்கைகளில் திஸ்ஸ அத்தநாயக்க. சமர்ப்பித்த ரணில் - மைத்திரிபால போலி ஆவணமும் ஒன்றாகும.

இதேவேளை சந்திரிகாவுக்கும் சமபந்தனுக்கும் இடையிலான உடனபாடு மற்றும் தமக்கும் உருத்திரகுமாரனுக்கும் இடையிலான உடனபாடு என்று பல போலி ஆவணங்களை வெளியிட அரசாங்கம் தயாராகி வருவதாக ரணவக்க குற்றம் சுமத்தினார்.

எனினும் தமது போராட்டம் தொடரும் என்று ரணவக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)


## தேவை

கொழும்பை அண்மித்த பிரதேசங்களிலுள்ள கட்டட நிர்மாணத்துறைகளில் பல வெற்றிடம் மேசன்/பெயின்டர்/செடலின்பாஸ்/இலற்சீசன் (1200/=,1500/=) கையுதவியாளர் (1000/=, 1100/=, தினமும் கைசெலவு/ தங்குமிடமுண்டு.

(சி-9362)தொடர்பு:-077 788 9185


## மாணவர்கள் மீதான தாக்குதலுக்கு அமைச்சர் கண்டனம்

உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிமாணவர்களின்போராட்டத்தின போது நடத்தப்பட்ட பொலிஸ் தாக்குதலை கண்டித்து இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப் பெரும இந்த கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

கடந்த 22 ஆம் திகதியன்று குறித்த மாணவர்கள் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு முன்னிலையில் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர். இதன்போது ஆர்ப்பாட்டத்தை கலைக்க பொலிஸார் பலாத்காரத்தை பிரயோகித்தனர்.

இந்தநிலையில் மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமையை கண்டிப்பதாக அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

இளைஞர்விவகார அமைச்சர்என்ற வகையில இந்த செயலை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை குறித்த சம்பவத்தின் போது சில பொலிஸ் அலுவலர்களின் செயற்பாடுகளை நியாயப்படுத்த முடியாது.

எனவே குறித்த பொலிஸ் அலுவலர்களின் நடவடிக்கை குறித்து விசாரணைகள் நடத்தப்படுவதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். (இ-5)


## நிரந்தர தொழில் வாய்ப்புக்கள்

19000/=, 25000/=,35000/=, (17-50 ஆண்-பெண்) இருபாலாருக்கும் உணவு+தங்குமிடம் குறைந்த விலைகளுடன் கொழு ம்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகளான ஜேம்/ பால்மா/ யோகட்/ PVC/ கிளவுஸ்/ பெயின்ட்/ கண்ணாடி/ சீல்ஸ்/ சொக்லேட்... (மற்றும் பல) போன்றவற்றுக்கு உற்பத்தி, லேபல், பொதியிடல், தரம்பிரித்தல், Delivery boy மற்றும் தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (JSO/LSO/SSO/OIC) பல வெற்றிடம். வருகை தரும் நாளிலே வேலை வாயப்பு (நண்பர்/ குழு/ தம்பதி யினர்) மேலதிக விபரங்களுக்கு

தொடர்பு கொழும்பு:- 077 7889 185 (சி-9361)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

5 ஆம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சை- 2014 இல் 152 வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்ற செல்வன் முகமட் மஹ்றூப் முஹமட் அக்ரம் (ஒஸ்மானியா கல்லூரி)

அவர்களை மனதாரப் பாராட்டுகின்றோம்.





மேலும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்த இருபத்தைந்து (25) மாணவர்களையும் பாராட்டுவதோடு 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களை பெருமைப்படுத்துகின்றோம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முஹமட் சலீம் முஹமட் சமி 117 | யாபிர் முஹமட் ஹசான் 113 | முஹமட் றினோஸ் முஹமட் பகாத் 139 | முஹமட் றிஸ்மி முகமட் நுஸ்ஹி-101 | றுக்கைஸ் முஹமட் இப்ரத்-131 | தவ்பிக் அப்துல் முசாரத்-107 |
| முஹமட் சிபாசிர் ஜஸ்ரான்- 118 | றியால் நிகாஸ் முஹமட் 119 | றிஸ்லீன் முஹமட் கைஸ் 110 | முஹமட் நியாம் பாத்திமா சிப்னா 112 | இலியாஸ் பாத்திமா கில்மியா- 118 | நசார் நஜியா 100 |

பாடசாலைக்கு பெருமை சேர்த்த மாணவர்களை பாராட்டி இவர்கள் மேலும் பல விருதுகளைப் பெற வேண்டும் என வாழ்த்துகின்றோம். அத்துடன் எமது மாணவர்கள் அனைவரையும் வழிப்படுத்தி அவர்களின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்து எமது பாடசாலையின் உயர்வுக்குப் பெருமை சேர்த்துத் தந்த அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர்கள் கல்வி வளர்ச்சிக்கு மேலதிகமாக ஆக்கமும் ஊக்கமும் அளித்த யாழ். மாவட்ட கல்வி அபிவிருத்திக் குழுவினர் அனைவருக்கும் மனமுவந்த நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

யாழ். ஒஸ்மானியா கல்லூரி,
முஸ்லிம் கல்லூரி வீதி,யாழ்ப்பாணம்.

யாழ். ஒஸ்மானியா கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BAJAJ MOTORCYCLES

# இலங்கையில் அதிகபட்ச எரிபொருட் செயற்திறன் கொண்ட...

# CT100

புதிய தோற்றத்துடன்



விலை: ரூ. 157,990/-
இவ்விலை முன்னறிவித்தலின்றி மாற்றமடையலாம்.
நிபந்தனைகளுக்கு உட்பட்டது

காலத்திற்கு பொருந்தும் உயர் தொழில்நுட்பத்துடன், அதிக எரிபொருள் சிக்கனம், சிறப்பான வடிவமைப்பு மற்றும் கவர்ச்சியான தோற்றத்தை கொண்டுள்ளதால் பஜாஜ் **CT 100** மோட்டார் சைக்கிள் தசாப்தத்திற்கு அதிக காலம் இலங்கையரின் நம்பிக்கையை வென்று இலங்கையில் அதிகம் விற்பனையாகும் மோட்டார் சைக்கிளாக காணப்படுகின்றது.

**இதன் வகுப்பில் அதிசிறந்த எரிபொருள் செயற்திறன்.**

- 100cc, பலமுடைய 4 ஸ்ரோக் என்ஜின்
- "ஸ்பிரிங் இன் ஸ்பிரிங்" சொக் அப்சோபர்
- கண்கவர் எரிபொருள் தாங்கி
- பின்பக்கம் பொருத்தப்பட்ட ஸ்மல் சுமைதாங்கி

மேலதிக தகவல்களுக்கு அருகே உள்ள பிரதேச அலுவலகமொன்றினை நாடுங்கள்.

DPMC **டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்**
நிறுவன பதிவு இலக்கம்: PB270

Google play

75, ஹைட் பார்க் கோனர், கொழும்பு 02. தொ.பே: 011-4700600 பெக்ஸ்: 011-4700677
மின்னஞ்சல்: info@dpmco.com இணையத்தளம்: www.dpmco.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹோட்டல் கற்கைநெறிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது


(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையினால் யாழ். மாவட்டத்தில் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் புதிதாக ஹோட்டல் கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

உள் நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ பெருமளவு வருமானத்தை ஈட்டக்கூடிய இத்தொழில்களுக்கான கற்கைநெறிகளானது யாழ். மாவட்டத்தில் உள்ள வேலையற்ற இளைஞர், யுவதிகளிற்கான ஒரு வரப்பிரசாதமாக அமைகின்றது.

இக்கற்கைநெறிகளாவன சமையல் கலைஞர் (Culinary Art), உணவு மற்றும் குளிர்பானம் பரிமாறுபவர் (Food and Bevarages), அறை ஊழியர்கள் (Room Attendant) உணவுச்சாலை முகாமைத்துவம் (Restaurant Management) ஆகும்.

இக்கற்கைநெறிகளை கற்க விரும்புவர்கள் தங்கள் பதிவுகளை 02.01.2015 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட அலுவலகம், இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை முதலாம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12 கே.எஸ் வீதி யாழ்ப்பாணம். (தொ.பே.0212227949) மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம் என இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் யாழ். உதவிப்பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (இ



# உள்ளூராட்சி வார இறுதிநாள் நிகழ்வு

சுழிபுரம் வலி.மேற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வார இறுதி நாள் நிகழ்வுகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வலி.மேற்கு பிரதேச சபையின் கலாசார மண்டபத்தில் வலி. மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.இந்திய பிரதித் துணைத்தூதுவர் எஸ்.தட்சணாமூர்த்தி கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ்.வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் டி.எஸ்.சொலமனும் கௌரவ விருந்தினர்களாக Word Vision RIWSH-III செயற்பாட்டு முகாமையாளர் ஆர்.ஜெ.அன்ரனி Word Vision RIWSH-III வலிமேற்கு ஒருங்கிணைப்பாளர் எவ்.அலெக்ஸ்றொச் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில் ஆசியுரைகளை சர்வதேச இந்து குருமார் ஒன்றியத் தலைவரும், சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வர் ஆலய பிரதம குருவுமான வித்தியாசாகரம் சிவஸ்ரீ.சபா. வாசுதேவக்குருக்கள், மூளாய் தென்னிந்திய திருச்சபைத் தேவாலய பங்குத்தந்தை வணபிதா.செபஸ்ரியன் அன்ரனி ஆகியோர் வழங்கவுள்ளனர். (இ-5)

# தொழில் நடவடிக்கைகளை முன்னேற்ற வெளிநாட்டு நிறுவனங்களுடன் உடன்பாடு

## யாழ்.வர்த்தகத் தொழிற்றுறை மன்றம் தகவல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களை முன்னேற்றுவதற்கும் அவர்களின் தொழில் நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்கும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன என யாழ். வர்த்தக தொழிற்றுறை மன்றத் தலைவர் கே.விக்னேஷ் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அமைப்பு NARA தொழில்நுட்பம் மற்றும் புதிய விடயங்களை ஒன்றிணைத்து பரிமாற்றம் செய்வதனூடாக வடபகுதி சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களை அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இயற்கைச் சூழலை முகாமை செய்தல், பண்ணைத் தொழில் நுட்பம், நீரியல் தாவரங்கள் தொடர்பான அறிவூட்டல், உயர்தரத்தில் கருவாட்டு உற்பத்தி மற்றும் பதனிடல் முறைகளை மேற்கொள்ளல், புகைவிடப்பட்ட மீன் உற்பத்தி, கடற்பாசி மற்றும் ஜெலி தயாரிப்புக்கள் போன்றன இவ் அமைப்பினூடாக மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

இதனோடு தேசிய ஏற்றுமதியாளர்கள் மன்றத்துடன் (NCE) இணைந்தும் வடக்கிற்கான ஓர் பிரத்தியேக அலகினை எமது மன்றத்தில் ஆரம்பித்துள்ளோம்.

இதன் பிரதான நோக்கம் வடபகுதி உற்பத்தியாளர்களையும் தென்பகுதி ஏற்றுமதியாளர்களையும் ஒன்றிணைப்பதுடன் வடபகுதி உற்பத்தியாளர்களுக்கான ஏற்றுமதி சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தல்.

நீண்டகாலப்பகுதியில் வடபகுதி உற்பத்தியாளர்களை நேரடி ஏற்றுமதியாளர்களாக உருவாக்குதல்.

உற்பத்தி மற்றும் ஏற்றுமதிகள் தொடர்பான பயிற்சிகளை வழங்குதல், ஏற்றுமதிகள் தொடர்பான தகவல்கள் அடங்கிய வெளியீடுகளை தொடர்ச்சியாக பிரசுரித்தல் போன்றவற்றை முன்னெடுக்கவுள்ளோம்.

மேலும் இளைஞர் வர்த்தக வேலைத்திட்டத்தினூடாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு இலங்கை வர்த்தக மன்றத்தின் அனுசரணையுடன் நுண்கடனுதவி திட்டங்களை மேற் கொண்டு வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)




# வலிகாமம் கிழக்கில் கலாசாரப் பெருவிழா

(நல்லூர்)

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்தும் கலாசார பெருவிழா நாளை திங்கட்கிழமை பி.ப 2 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலாளர் ம.பிரதீபன் தலைமையில் ஆவரங்கால் சிவசக்தி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமை நாயகமும், சிறப்பு விருந்தினர்களாக, முன்னாள் அரசாங்க அதிபர் எஸ்.தில்லைநடராஜா, பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் திருமதி உஷா சுபலிங்கம், யாழ் பல்கலைக் கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அச்சுவேலி சரஸ்வதி மகாவித்தியாலய மாணவர்களின் நடனமும், தேசிய கலை, இலக்கிய போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கலும் கலைஞர் மஞ்சரி நூல் வெளியீடும் கலைஞர் கௌரவிப்பு நிகழ்வில் இடம் பெறும். (இ-134)

# கருத்துரை

சர்வதேச கலைஞர்களுக்கான கூட்டிணைப்பின் ஸ்தாபகர் பிரதீப் சந்திரசிறி **ஞாபகத்தை உருவாக்கல்** எனும் தலைப்பில் கருத்துரை வழங்கவுள்ளார்.

மேற்படி நிகழ்வு இன்று காலை 10 மணி முதல் 12 மணிவரை சமகாலக் கலை கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக்காப்பகம், இல.199, கோவில் வீதி, நல்லூரில் இடம்பெறவுள்ளது.

ஸ்தாபனக்கலை மற்றும் புகைப்படக் கலையூடாக ஞாபகம் மற்றும் வன்முறையின் வெளிப்பாடு அனுபவத்தை அவர் பகிரவுள்ளார். (இ

# வீட்டுக் கிணற்றிலிருந்து குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

யாழ்.வடமராட்சி அல்வாய் ஓடைப்பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் கிணற்றிலிருந்து நேற்றுக்காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான செல்லையா மகாலிங்கம் (வயது45) என்பவரே அவரது வீட்டுக் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டதையடுத்து சடலம் கிணற்றிலிருந்து வெளியே எடுக்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-60)

# மாவட்ட செயலகத்தினால் வெளியிடப்படும் மலருக்கான ஆவணங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்.மாவட்ட செயலகம் ஆரம்பிக்கப்பட்டு 50 ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு வெளியீடு செய்யப்படும் மலரில் மாவட்ட செயலகத்தின் வரலாற்றில் அதன் தோற்றம், கடமையாற்றிய அரசாங்க அதிபர்கள், ஆரம்பித்திலிருந்த கச்சேரியின் தோற்றம், 1965 ஆம் ஆண்டில் சம்பந்தப்பட்ட கட்டட திறப்பு விழா தொடர்பான நிகழ்வுத் தொகுப்பு, புகைப் படங்கள், ஆவணங்கள் போன்ற தகவல்கள் தங்களிடம் இருப்பின் இத் தகவல்களின் பிரதிகளை இப் புத்தக வெளியீட்டில் உள்ளடக்கும் பொருட்டு 2015 ஜனவரிமாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப் பாணம் எனும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ ஒப்படைக்குமாறு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமை நாயகம் அறிவித்துள்ளார். (இ

# ஸ்ரீமத் பகவத்கீதை உரை 5 ஆம் அத்தியாயம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சின்மயா மிசன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா சுவாமிகளால் இல.9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூரில் அமைந்துள்ள சின்மயாமிசன் ஆச்சிரமத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 8 மணி முதல் 9 மணி வரை பகவத்கீதை வகுப்பு நடத்தப்பட்டு வருகின்றது. இதுவரை முதலிலிருந்து 4 ஆம் அத்தியாயம் வரை நிறைவடைந்துள்ளது.

தொடர்ந்து இன்று 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 5 ஆம் அத்தியாயமான கர்ம சந்நியாச யோகம் [illegible] மாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

# திருவாசக விழா இன்று இடம்பெறும்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் திருவாசக விழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திருமதி கேமலோஜினி குமரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக தெல்லிப்பழை துர்க்கை அம்பாள் தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் ஆசியுரையினை யாழ்.பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்கள் வழங்கவுள்ளார்.

மேலும் இன்றைய தினம் சைவப்புலவர் செ.பாலச்சந்திரன் வழங்கவுள்ள திருவாசகம் காட்டும் வாழ்வியல் எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் திருவாசக விழாவினையொட்டி நடத்தப்பெற்ற விநாடி வினாப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழ் பரிசில் வழங்கல் என்பனவும் இடம்பெறவுள்ளது. (இ-5)

# அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபைக்குட்பட்ட சகல சனசமூக நிலையங்களும் 2015 ஆம் ஆண்டிற்கான பொதுக்கூட்டத்தை எதிர்வரும் ஜனவரி மாத முடிவிற்குள் கூட்டி புதிய நிர்வாகத்தை தெரிவு செய்து நிர்வாக உறுப்பினர்களின் பெயர், தனிப்பட்ட முகவரி, தொலைபேசி இலக்கம், வங்கியின் பெயர், வங்கிக்கணக்கு இலக்கம் என்பவற்றை யாழ்.மாநகர சபைக்கு அனுப்பி வைக்குமாறு யாழ்.மாநகரசபை சனசமூக நிலைய உத்தியோகத்தர் லோகசிங்கம் கேட்டுள்ளார். (இ

# சான்றிதழ் வழங்கல்

யாழ்.இந்தியத் துணைத் தூதரக வளாகத்தில் இந்திய கலைக் கூடத்தில் கர்நாடக சங்கீதம், வயலின், யோகா மற்றும் இந்தி மொழிக்கான பயிற்சிகளை நிறைவு செய்த 66 மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்.க்றீன் கிறாஸ் விருந்தினர் விடுதியில் இடம் பெறவுள்ளது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

யாழ்.பூநாரி மரத்தடி செல்வமஹால்
மண்டபத்தில் "ஞானரத்தின"
விரதமஞ்சரி காணொளி, பைரவகீதங்கள்
இறுவெட்டு
அறிமுக விழாவும் இசை நிகழ்வும்
காலம்:- 28.12.2014 (ஞாயிற்றுக்கிழமை)
மாலை 05.00 மணிமுதல் 06.30 மணிவரை

**தலைவர்**
திரு.ந.விஜயசுந்தரம் அவர்கள்
(பிரதம ஆசிரியர்- வலம்புரி)

**பிரதம அதிதி**
வணக்கத்திற்குரிய
ஸ்ரீ.ஸ்ரீமதி. தாணு. மகாதேவக்குருக்கள் தம்பதிகள்
(தர்மசாஸ்தா குருகுலம் இணுவில்)

**சிறப்பு அதிதி**
சிரேஷ்ட பேராசிரியர்,
கலாநிதி என். சண்முகலிங்கன்
(முன்னாள் துணைவேந்தர், தலைவர் சமூகவியல்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

**கௌரவ விருந்தினர்கள்**
கலாபூஷணம் திரு.எஸ். ராதாகிருஷ்ணன்
(வயலின் வித்துவான்)
திரு.க.கைலநாதன்
(கிளி/ பூநகரி மத்திய கல்லூரி ஆசிரியர்)

**இசை அமுதம்**
சிவஸ்ரீ. சோம உமாரமணக்குருக்கள்
அவர்களின் நல்லாசிகளுடனும்
கலாவித்தகர் ந.செல்வச்சந்திரனின்
பின்னணி இசையில்
சப்தமி ஒலியமைப்பில் தமிழ்நாடு திருமதி ஸ்.டிலாணி
அவர்களின் மாணவன்
செல்வன் ச. ஷைலேந்திரசர்மா (மலேசியா)
முதற்பிரதி பெறும் விருந்தினர்
திரு.திருமதி ச.சுகந்தன் தம்ப்தியினர்

வைரவப் பெருமானின் புகழ்பாடும் இறுவெட்டினையும்
விரதங்கள் பற்றியதான வீடியோ காணொளியினையும்
பெற்று இசை அமுதத்தினை ரசித்தும் விழாவினை
சிறப்பிக்குமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

நல்வரவை நாடும் "ஞானரத்தினம்"
ஸ்ரீ.ஸ்ரீமதி. ஞா.சபாரத்தின சர்மா குடும்பத்தினர்,
சித்தன்கேணி.
(இ)


## பிரதி அமைச்சரை கைதுசெய்ய நடவடிக்கை

நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் வெளிநாட்டுக்கு தப்பிச் சென்ற பிரதியமைச்சர் நிசாந்த முத்துஹெட்டிகம, நாடு திரும்பியவுடன் கைது செய்யப்படுவார் என பொலிஸ் தலைமையகம் அறி வித்துள்ளது.

பிரதியமைச்சர் நிஸாந்த முத்துஹெட்டிகம நாடு திரும்பியதும் அவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிஸாந்த முத்துஹெட்டிகம நாடு திரும்பியதும் அவரை கைது செய்யுமாறு, கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மற் றும் மத்தல சர்வதேச விமான நிலையம் என்பவற்றின் சகல அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என அவர் தெரி வித்துள்ளார். (இ)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா: 82 சூரிசெவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: MSC, IT (லண்டன்)<br>தொ.இ: B/3923 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 35 3/4 செவ் 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BBL, MBL/ ஆலோசகர் (லண்டன்)<br>தொ.இ: G/3939 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 3<br>கி.பா: 40 சூரிசெவ்<br>உயரம்: 173cm<br>தகைமை/தொழில்: தொழில்நுட்ப உத்தியோகத்தர் (நோர்வே)<br>தொ.இ: B/3925 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 37 1/2<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>தொ.இ: G/3943 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 45 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L,AAT (இத்தாலி PR)<br>தொ.இ: B/3926 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மிருகசிரீடம்<br>கி.பா: 53 செவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: CHARTTED CHEMISTRY FOLLOWING<br>தொ.இ: G/3947 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 2<br>கி.பா: 74 செவ் 12 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L (அமெரிக்கா)<br>தொ.இ: B/3928 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 22 1/4<br>செவ் 7 இல்<br>உயரம்: 164 cm<br>தகைமை/தொழில்: விவசாய பீட மாணவி<br>தொ.இ: G/3949 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



உங்கள் குழந்தையின் எதிர்காலத்திற்கு சிறந்த அடித்தளம் அமையுங்கள்

யாழ் குடாநாட்டில் கல்விச் செயற்பாடுகளுக்கு பிரசித்தி பெற்ற BBC ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலையில் உங்கள் குழந்தையை இணையுங்கள்

BBC 12வது வருடத்தில்

பாலர் பாடசாலை பிரிவுகள்

| பிரிவு | Play Group | Montessori | Pre School |
| --- | --- | --- | --- |
| வயது | 2+ முதல் 3+ வரை | 3+ முதல் 4+ வரை | 4+ முதல் 5+ வரை |
| காலம் | 1 வருடம் | 1 வருடம் | 1 வருடம் |

கற்பித்தல் மொழி
ஆங்கில மொழி மூலம்
தமிழ் கட்டாய பாடம்

சிறாரகளின் அபிவிருத்திக்கான செயற்பாடுகள்
2+ முதல் 5+ குழந்தைகளின் அறிவுத்திறனை ஊக்குவிக்குமுகமாக எல்லாக் குழந்தைகளும் பின்வரும் கல்வி, விளையாட்டு சார் நிகழ்ச்சிகளில் பங்குபெறுவர்.

* Sports Meet
* முத்தமிழ் விழா
* Carols
* English Day Concert
* Art & Craft Exhibition
* Pre School Graduation

பாட விதானமும் கற்பித்தல் முறையும்
NEW SYLLABUS
* Dr. Maria Montessori Method
* Canadian ECE Method
* German LKG, KG, UKG System

எமது கற்பத்தல் முறையும் பாட விதானமும் மேற் கூறப்பட்ட சர்வதேச முறைமைகளைச் சார்ந்து எமது சூழலிற்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது.

பாலர் பாடசாலையின் சாதனைகளும் மைல் கல்களும்
* கடந்த 11 ஆண்டுகளாக எமது 11 வளாகங்களில் 8000 மாணவர்களுக்கு மேல் பயனடைந்துள்ளார்கள்.
* யாழ் குடாநாட்டில் ஆரம்பிக்கப்பட்ட 1வது ஆங்கில மொழிமூல பாலர் பாடசாலை
* யுத்த காலத்திலும் யாழ் சிறார்களுக்காக இயங்கிய ஒரேயொரு தனியார் பாடசாலை
* எமது பாடசாலைகளில் கல்வி பயின்ற 90% மாணவர்கள் Year 5 Scholarship பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

(சி-9623)

பாலர் கல்வியை மேலும் மேம்படுத்தும் எமது விசேட செயற்பாடுகள்
* Percussion Band , Meditation, Speech, Dance & Drama (in English & Tamil)
* குழந்தை- பெற்றோர்- ஆசிரியர் களிற்கிடையில் சிறந்த உறவையும் குழந்தையின் அறிவையும் வளர்ப்பதற்கு ஊக்குவிக்கும் மாதாந்தச் செயற்பாடுகள்.

BBC யின் 11 பாலர் பாடசாலை வளாகங்கள்

| யாழ்ப்பாணம் 1 | யாழ்ப்பாணம் 2 | கோப்பாய் |
| --- | --- | --- |
| 64, கோயில் வீதி யாழ்ப்பாணம் | 625, K.K.S வீதி யாழ்ப்பாணம் | பருத்தித்துறை வீதி கோப்பாய் மத்தி |

| மானிப்பாய் 1 | மானிப்பாய் 2 | சுன்னாகம் | வடமராட்சி | நீர்வேலி |
| --- | --- | --- | --- | --- |
| 252, யாழ் வீதி, ஆலடிச்சந்தி, மானிப்பாய். | சங்கரப்பிள்ளை வீதி (மானிப்பாய் இந்துக்கல்லூரி வீதி) | Dr. சபாரத்தினம் வீதி, சுன்னாகம். | பருத்தித்துறை வீதி, மாலி சந்தி, கரவெட்டி. | 1வது மைல்கல் , இராச வீதி, நீர்வேலி. |

| சாவகச்சேரி | சங்கானை | புத்தூர் |
| --- | --- | --- |
| சாவகச்சேரி Hindu College Primary School அருகாமை | பிரதேச செயலகம் அருகாமை நிகரை வைரவர் கோவிலடி | பருத்தித்துறை வீதி, புத்தூர் கிழக்கு (ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி முன்பாக) |

British Business College — Where Students Come First
BRITISH BUSINESS COLLEGE
64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 077 362 7055, 021 222 4060


B B C Early Learning Extra Curricular Activities




British Business College Contact : 077 3627055 /021 2224060


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மிகவும் உண்மை போல் இருக்கும் தகவல்கள் வழமையாக நம்பத் தகுந்தனவாக இருப்பதில்லை!



## ரூ.30,000 மட்டுமே கொண்டு உலகளவில் பிரசித்தி பெற்ற நிறுவனத்துடன் இணைந்து மேலும் பணம் சம்பாதிக்கக் கூடிய அரிய வாய்ப்பு!

வீட்டிலிருந்து கொண்டே உங்கள் வசதிப்படி வேலை செய்து மாதமொன்றிற்கு ரூ.25,000 க்கு மேலான பணத்தைச் சம்பாதிக்கலாம்.

வேலை விபரம்: உலகளவில் பிரசித்த பெற்ற நிறுவனம் ஒன்றில் ஒரு தொகையான பிரத்தியேகப் பொருட்களின் விற்பனையை விருத்தி செய்வதற்காக அனுமதிக்கப்பட்ட பிரதிநிதி.

தகைமைகள்: க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் 3 பாடங்களில் சாதாரண சித்தி. வேலை முன் அனுபவம் தேவையில்லை.

பொருட்களின் விற்பனையை விருத்தி செய்வது மற்றும் இந்த பிரத்தியேக நிறுவனத்துடன் இணைய உங்கள் நண்பர்களை அறிமுகப்படுத்துதல் மூலமாக நீங்கள் மேலும் சம்பாதிக்க முடியும்.

மேற்கூறப்பட்ட தகவல் ஒரு உதாரணமாகும்!
பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்கள் பல வடிவங்களில் உங்கள் வழியில் வரலாம்.

**அவை உங்களை ஏமாற்றுபவை மட்டுமல்ல அவை உங்கள் குடும்பங்களின் மகிழ்ச்சி மற்றும் நிம்மதியையும் அழிக்கின்றன!**
**நன்மையான மற்றும் பாதுகாப்பான வாய்ப்புக்களைத் தெரிந்தெடுத்து கஷ்டப்பட்டுச் சம்பாதித்த உங்கள் பணத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்!**

### பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்களின் அடிப்படை அம்சங்கள் உள்ளடக்குபவை

- பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பொழுது அல்லது பங்குபற்றுபவர்களினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்கள் அதிகரிக்கும் பொழுது உயர்ந்தவொரு வருமானம் கிடைக்கும் என உறுதிமொழி வழங்குதல்.
- நம்பமுடியாத உயர் வருமானங்கள் மற்றும் ஏனைய நன்மைகள் பற்றிய தவறான உறுதிமொழிகளை அடிக்கடி மேற்கொள்ளுதல்.
- திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்படும் பொருட்களுக்குத் திடமான சந்தைக் கேள்வியோ மற்றும் இரண்டாந்தரச் சந்தையோ இல்லாதிருத்தல்.
- பொருட்களுக்கு உத்தரவாதங்களோ அல்லது விற்பனைக்குப் பிந்திய பணிகளோ வழங்கப்படுவதில்லை.
- திட்டத்திலிருந்தான வருமானம் பங்குபற்றுபவரின் விற்பனை அளவைப் பொறுத்தில்லாமல் அவன்/ அவள் கொண்டுவரும் புதிய பங்குபற்றுநர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து வேறுபடுதல்.
- பொதுவாக உயர்ந்த நுழைவுக் கட்டணத்தைக் கொண்டிருத்தல்.
- பங்குபற்றுநர் ஒருவர் திட்டத்திலிருந்து விலகிச் செல்லும் போது விற்பனை செய்யப்படாத மிகுதிப் பொருட்களை மீண்டும் வாங்கும் கொள்கை இல்லாதிருத்தல்.
- பொருட்களை விற்பனை செய்வதில் சிறிதளவு கவனத்தைக் கொண்டிருப்பதுடன் மேலும் புதிய பங்குபற்றுநர்களைச் சேர்ப்பதைப் பிரதான நோக்கமாகக் கொண்டிருத்தல்.
- மிகுந்த வருமானம் கொண்ட பேரம்பேசுதல் மூலம் புதிய பங்குபற்றுநர்களை அவசரமாகத் திட்டத்தில் சேர்ப்பதுடன் பங்குபற்றுநர்களை இரண்டாந்தரம் சிந்திப்பதற்குக் கால அவகாசம் வழங்காமல் இருத்தல்.
- திட்டத்தில் சேருவதற்கான வழமையான அழைப்பு. சிறிதளவு அல்லது முன்அனுபவம் அற்ற அல்லது தகைமைகள் தேவைப்படாத இலகுவானதொரு வேலையாக இருத்தல்.
- பொதுவாகத் திட்டத்தில் சேருவதற்கான கோரிக்கையைப் பெருமளவு உதாசீனம் செய்யமுடியாத நம்பிக்கையுள்ள ஒரு நண்பன் அல்லது குடும்ப அங்கத்தவர் ஒருவர் தான் உங்களைத் திட்டத்தில் இணைப்பதற்கு முயற்சி செய்பவராக இருத்தல்.
- திட்டம் தொடர்பான தகவல்கள், அதன் இருப்பிடம், தொடர்பு கொள்ளும் விபரங்கள் என்பவற்றைப் பொதுவாக அடையமுடியாதிருத்தல்.

குறிப்பு: பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்களைத் தொடங்குதல் மற்றும் பங்குபற்றுதல் என்பன சட்ட விரோதமானதாகும். ஒருவர் குற்றவாளியாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் கடூழியச் சிறைத்தண்டனை மற்றும்/ அல்லது அபராதம் என்பவற்றிற்கு உட்படுத்தப்படுவார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

மேலதிக விசாரணைகளுக்கு:
தொலைபேசி: 2477100, 2477120, 2477129, 2398539 தொலைநகல்: 2477711
மின்னஞ்சல்: banksup@cbsl.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டன

(கிளிநொச்சி)

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தேசிய ஆள் அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, பத்மநாதன் நிரோஜா (868373016V) இல.649, வசந்தபுரம், துணுக்காய், விபரங்கள் தெளிவில்லாத நிலையில், (792124054V) எனும் இலக்கமுடைய அடையாள அட்டைகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளுமாறு யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தினர் அறிவித்துள்ளனர். (2-272)

# மின்சார விநியோகம் பூர்த்தி செய்யப்படவில்லை

## செருக்கன் கிராம மக்கள் அவதி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் குஞ்சுப்பரந்தன், செருக்கன் ஆகிய கிராமங்களில் 27 குடும்பங்கள் வசித்து வருகின்றனர்.

இவர்களில் 3,4குடும்பங்களை தவிர ஏனையோருக்கு இந்தியன் வீட்டுத்திட்டம் கிடைக்கப்பெற்று அனைத்து வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் இக்கிராமத்திற்கு அருகாமையில் பரந்தன்-பூநகரி வீதியை அண்மித்து பூநகரிக்கான மின்சார விநியோகம் வழங்கப்பட்டுள்ள போதிலும் செருக்கன் கிராமத்திற்கான மின்சார விநியோகம் இதுவரை வழங்கப்படவில்லையென வும் அதற்கான ஏற்பாடுகள் எதுவும் நடைபெறவில்லையெனவும் அப்பகுதி மக்களால் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை குறிப்பிட்ட கிராமத்திற்கான உள்ளக வீதிகள் எதுவும் செப்பனிடப்படாமையால் இங்கிருந்து பாடசாலை செல்லும் சிறார்கள் முதல் தொழில் செய்வோர்வரை மிகவும் சிரமத்துடன் தினமும் பயணத்தைத் தொடர்வதாகத் தெரிவிக்கின்றனர்.

தற்போது மழை பெய்து வரும் நிலையில் உள்ளக வீதிகள் அனைத்தும் மழைநீர் தேங்கி நின்று சேறுமயமாக காட்சியளிக்கின்றன.

எனவே அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடுவோர் நகரப் புறங்களில் மட்டும் கவனம் செலுத்தாது இத்தகைய பின்தங்கிய நிலையிலுள்ள கிராமங்களின் வளர்ச்சியிலும் சற்று அக்கறை கொள்ள வேண்டுமெனவும் உரிய தரப்பினர் கூடுதல் கவனமெடுத்து இக்கிராமத்தின் குறைகளை நிவர்த்தி செய்ய உதவ வேண்டுமென அப்பகுதி மக்களால் கோரிக்கை விடப்படுகின்றது. (2-254)




## சீரற்ற காலநிலை தொடர்கின்றது; வவுனியாவில் 29,103 பேர் பாதிப்பு

### அனர்த்த முகாமைத்துவ நிலையம் தகவல்



வவுனியாவில் தொடரும் மழை, வெள்ளத்தால் 29 ஆயிரத்து 103 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 4 ஆயிரத்து 156 பேர் இடம்பெயரந்துள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு இடம்பெயர்ந்தவர்கள் 34 நலனபுரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இடம்பெயர்ந்த மக்களை தங்க வைக்க வவுனியா பிரதேச செயலர் பிரிவில் 18 நலன்புரி நிலையங்களும், செட்டிகுளம் பிரதேச செயலர பிரிவில் 16 நலன்புரி நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் சீரற்ற காலநிலையால் 91 வீடுகள் முழுமையாகவும், 247 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்திருக்கின்றன எனவும் அத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

## வைகுண்ட ஏகாதசிப் பெருவிழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி-வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப்பெருமாள் ஆலயத்தின் வைகுண்ட ஏகாதசிப் பெருவிழா எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமை பகலும் இரவும் நடைபெறும்.

இதில் பகல் நிகழ்வாக காலை 7 மணியிலிருந்து ஸ்ரீ பகவத்கீதை முற்றோதல் நடைபெற்று அதனைத் தொடர்ந்து ஸ்ரீ ஆண்டாள் நாச்சியார் திருப்பாசுரம், பெரியாழ்வாரின் திருப்பாசுரம் முற்றோதல் நடைபெறும்.

இரவு நிகழ்வில் 7 மணிக்கு முதலாம் சாமப்பூசையும் இரண்டாம் சாமப்பூசை இரவு 10 மணிக்கும் மூன்றாம் சாமப்பூசை நள்ளிரவு 12 மணிக்கும் நான்காம் சாமப்பூசையும் இடம்பெறும். விடியற்காலை 2 மணிக்கு வைகுண்ட வாசல் திறக்கப்பட்டு இறந்த நம் முன்னோர்களுக்கு மோட்ச அர்ச் சனை நடைபெறும். நள்ளிரவு 12 மணிக்கு ஸ்ரீ ரங்க நாதருக்கு சிறப்புமிகு அபிஷேகஆராதனைகள் இடம்பெறும்.

இரவு முழுவதும் பஜனை நிகழ்வுகள், சமய சொற்பொழிவுகள், கலை நிகழ்வுகள் என்பன வழிபாட்டின் இடையே இடம்பெறும். அதன்பின் திருப்பாவை உற்சவம்நடைபெறும்என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (2)

## இந்து இளைஞர்களுக்காக நடத்தப்படும் பண்பு பயிற்சி முகாம் இன்று ஆரம்பம்

(கிளிநொச்சி-1)

இலங்கை இந்து ஸ்வயம்சேவக சங்கத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட இந்து இளைஞர்கள் மட்டும் பங்கேற்கும் பண்பு பயிற்சி முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து ஏழு நாட்கள் கிளி/இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

குறித்த பாடசாலையில் இரவு, பகலாக இளைஞர்கள் தங்கி நின்று பயிற்சியில் பங்கேற்க வேண்டும்.

இதில் தன்னம்பிக்கை ஒழுக்கம், தைரியம், மன ஒருமைப்பாடு, சுயநலமின்மை குறிக்கோளில் உறுதியாக இருத்தல், பாமரர்கள் முன்னேற்றம் சமுதாய சமத்துவம் போன்ற பண்புகளுடன் ஆளுமை விருத்தி செய்யும் நிகழ்வுகளாக யோகாசனம், சூரிய நமஸ்காரம், தற்காப்பு கலை, உடற்பயிற்சிகள் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்கள், சிறந்த சொற்பொழிவுகள், எழுச்சிப் பாடல்கள் உள்ளிட்ட பல்வேறு அறிவுசார் நிகழ்வுகளும் இடம்பெறும்.

இப்பயிற்சி முகாமில் 17 வயது பூர்த்தி அடைந்த இந்து இளைஞர்கள் மட்டும் பங்கேற்க முடியுமென ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (2-277)

## அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்தவர்களாகவே எமது மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்

### சந்திரகுமார் எம்.பி தெரிவிப்பு

(கிளிநொச்சி)

தொடர்ந்து அனர்த்தங்களை எதிர்கொள்வதால் மக்கள் தேவைகளையுடைய சமூகமாகவே வாழ வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் தள்ளப்பட்டுள்ளனர் என பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கரைச்சி பிரதேசத்திற்குட்பட்ட 66 பயனாளிகளுக்கு அண்மையில் வாழ்வாதார உதவிகளை வழங்கி வைத்து உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் உரை யாற்றுகையில்,

வரட்சிக்கான நிவாரணங்களை வழங்கிக்கொண்டிருக்கும் சமகாலத்தில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்க வேண்டிய நிலை உருவாகியிருக்கின்றது.

அதற்கான செயற்பாடுகளையும் நாம் மிகத் துரிதமாக முன்னெடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கின்றோம் என்றார். (2)

## கிளி.தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

(கிளிநொச்சி)

தமிழர் விடுதலைக்கூட்டணியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் கடந்த 23 ஆம் திகதி மாலை 5 மணியளவில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கிளிநொச்சி மாவட்ட தலைமை செயலகத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயமும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரு மான வீ.ஆனந்த சங்கரி தலைமையில் நடைபெற்றுள்ளது.

இக்கூட்டத்தில் சமகால அரசியல் தொடர்பாகவும் எமது கட்சியின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டதுடன் 2015 ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அதன் பின்னர் புதிய நிர்வாகத் தெரிவு நடைபெற்று ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டது. கிளிநொச்சி மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராக க.ஜனார்த்தனன், செயலாளராக செ.சண்முகநாதன், உப தலைவராக க.மகேந்திரன், பொருளாளராக சி.முருகையா ஆகியோரும் மேரி யோசப், சி.குகனேஸ்வரன், க.தங்கராசா, ஐ.குகன், க.குலேந்திரன், ஜெபபேரின்பகரன் ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தீர்மானங்களில் குறிப்பாக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என சபை ஆராய்ந்த வேளையில் 20 இற்கும் மேற்பட்ட கட்சிகள் ஒன்றிணைந்து இலங்கையில் ஓர் புதிய ஆட்சி முறைமை ஒன்றை ஏற்படுத்த முன்வந்துள்ளமையால் குடும்ப அரசியலை தவிர்த்து ஓர் ஜனநாயக ஆட்சியை அமைக்கவும் சர்வாதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமையை மாற்றுவதற்கு ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடும் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிப்பது என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

பொது வேட்பாளர் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ள விடயங்களில் சிறுபான்மை மக்களின் தேவைகள், குறைபாடுகள், பிரச்சினைகளை நேரடியாகக் குறிப்பிடாது விட்டாலும் நாட்டு மக்களின் வறுமை, பசி, பட்டினியை போக்குவதற்கும் மக்கள் இன, மத பேதமின்றி சுதந்திரமாக வாழ வழி காட்டும் வகையிலும் சில பல கருத்துக்களை மறைமுகமாக முன் வைத்துள்ளதை நாம் அறியக் கூடியதாக இருப்பதாலும் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை வெற்றி பெற வைக்க எம்மாலான பணிகளை செய்வதுடன் மக்களுக்கு இது விடயமாக தெளிவுபடுத்தி அன்னச் சின்னத்திற்கு வாக்களிக்கச் செய்ய வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. (2)

## வான்பாயும் நீரை ஆற்றில் சேர்ப்பதற்கு நிரந்தர வாய்க்கால் அமைத்துத்தருக!

### பொதுமக்கள் ஆனந்தன் எம்.பியிடம் கோரிக்கை

(குருமன்காடு)

வவுனியா கள்ளிக்குளம், நொசசி மோட்டை கிராமங்களில் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்துள்ள மக்களை நேரில சென்று பார்வையிட்டுள்ள கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடமாகாணசபை உறுப்பினர்கள் இ.இந்திரராசா, ம.தியாகராசா ஆகியோர் அம்மக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கியுள்ளனர்.



ஆனந்தன் எம்.பியின் வேண்டுகோளுக்கமைய குறித்த நிவாரணப் பொருட்களுக்கான நிதியுத வியை "இணைக்கும் இதயங்கள்" அறக்கட்டளையினர் வழங்கியிருந்தனர். கள்ளிக்குளம் கிராம அபிவிருத்திச்சங்க தலைவர் ராமதாஸ், நொச்சிமோட்டை கிராம அபிவிருத்திச்சங்க தலைவர் நந்தன் ஆகியோரின் ஒழுங்குபடுத்தலில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

இதன்போது மேற்படி கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது குறைகளை ஆனந்தன் எம்.பியிடம் எடுத்துக் கூறினர்.

இதன்போது, மாரி மழைக்காலங்களில் நொச்சிமோட்டை குளத்தில் ஒவ்வொரு வருடமும் வான் பாயும் மேலதிக தண்ணீர் தமது குடியிருப்பு காணி களை ஊடறுத்து பாய்ந்து ஆற்றுக்கு செல்வதால், ஒவ்வொரு வருடமும் தாம் பாதிக்கப்பட்டு இடம்பெயர்வதாகவும், எனவே வான் பாயும் தண்ணீரை ஆற்றில் கொண்டு சேர்ப்பதற்கு நிரந்தர வாய்க்கால் அமைத்து தருமாறும் நொச்சிமோட்டை கிராம மக்கள் ஆனந்தன் எம்.பியிடமும், மாகாணசபை உறுப்பினர்களிடமும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்கு குறித்த விடயத்தை கொண்டு சென்று மக்களின் கோரிக்கையை நிறைவேற்றி வைப்பதாக கிராம மக்களிடம் அவர்கள் தெரிவித்துள்ளனர். (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1025

## வெயிலும் நிழலும்



அன்று சக்கரவர்த்தி அக்பர் ஏதோ காரணத்தால் காலையிலிருந்தே எரிச்சலுடன் இருந்தார். அவருடைய கோபத்தைத் தணிக்க விரும்பிய பீரபல், "பிரபு! நீங்கள் இவ்வாறு இருப்பது சிறிதும் நன்றாகவில்லை.

சிறிது சாந்தமாக இருக்கக்கூடாதா?" என்று பணி வாகக் கூறினார்.

"எப்போது சாந்தமாக இருக்க வேண்டும், எப்போது கோபமாக இருக்க வேண்டும் என்று எனக்குத் தெரியும்.

நீ சொல்ல வேண்டியது இல்லை!" என்று அக்பர் பீர்பால் மீது எரிந்து விழுந்தார். "அதற்கு சொல்லவில்லை பிரபு! சிடுசிடுவென்று இருந்தால் இயற்கையில் அழகான உங்கள் முகம் விகாரமாக மாறி விடுகிறது!

அதனால்..." பீர்பாலை இடைமறித்த அக்பர் "என்ன தைரியம் இருந்தால் என்னை சிடுமூஞ்சி என்றும் விகாரமானவன் என்றும் குறிப்பிடுவாய்? இனி, உன் முகத்தில் விழிக்க நான் விரும்பவில்லை! எங்காவது கண்காணாத இடத்திற்கு ஒழிந்து போ!" என்றார்.

இதைக் கேட்டு மனமுடைந்த பீர் பால் உடனே அந்த இடத்தை விட்டுச் சென்று விட்டார்.

அடுத்த நாள் அக்பர் தர்பாருக்கு வந்ததும் சபையில் பீர்பால் மட்டும் காணப்படாததை கவனித்த அக்பர் அவரைப்பற்றி விசாரித்தார்.

தர் பாரில் ஒருவர் எழுந்து நின்று, "பிரபு! நேற்று நீங்கள் அவர் மீது கோபமுற்று இந்த நகரத்தை விட்டுக் கண் காணாத இடத்திற்குச் சென்று விடுமாறு கட்டளையிட்டீர்களாம்!

அதனால் பீர்பால் தலைநகரை விட்டுச் சென்று விட்டார்!" என்றார். "அடடா! பீர்பால் உண்மையாகவே சென்று விட்டாரா?" என்று அக்பர் வருந்தினார்.

தான் அவ்வளவு கடுமையாக பேசியிருக்க கூடாது என்று உணர்ந்த அக்பர் தன் தவறுக்காக வருந்தினார்.

பீர்பாலை மீண்டும் சந்திக்க வேண்டுமென்று அவர் மனம் அடித்துக் கொண்டது. ஆனால் பீர்பால் எங்கு சென்று விட்டார் என்று யாருக்கும் தெரியவில்லை. அன்று முழுவதும் பீர்பால் எங்கு சென்றிருக்கக்கூடும் என்பது பற்றியும், அவரை எவ் வாறு மீண்டும் திரும்ப வரவழைப்பது என்றும் தீவிர சிந்தனையில் ஆழ்ந்த அகபருக்கு, இறுதியாக ஒரு யோசனை தோன்றியது.

உடனே அவர்மந்திரியை அழைத்து "மந்திரியாரே! கொளுத்தும் நடுப்பகல் வெயிலில் குடையின்றி ஒருவன் பிரதான சாலையில் நடந்து வரவேண்டும். அப்படி வருபவனுக்கு நூறு பொற்காசுகள் தரப்படும் என்று ராஜ்ய மெங்கும் தண்டோராப் போடுங்கள்!" என்றார்.

"பிரபு! இப்போது கடுங்கோடை காலம்! குடையில்லாமல் அரை மணிநேரம் நடந்தாலும் நடப்பவன் சுருண்டு விழுந்து விடுவான். அப்படிஇருக்க யார் தங்கள் உயிரை நூறு பொற்காசுக்காக விட முன்வருவார்கள்?" என்றார். "நான் சொல்வது போல் தண்டோராப் போட்டு அறிவியுங்கள்! போதும்!" என்றார் அக்பர். உடனே மந்திரியும் அக்பரின் விருப்பப்படி ராஜ்யமெங்கும் தண்டோராப் போட்டு அறிவித்தார்.

அக்பரின் அறிக்கையைக் கேட்ட பொது மக்கள் ஆச்சரியமுற்றனர். "சக்கரவர்த்தி க்கு என்ன இப்படி ஒரு வினோதமான ஆசை? இந்த சவாலை யார்தான் ஏற்பார்கள்?" என்று தங்களுக்குள் கூடிக்கூடிப் பேசிக் கொண்டார்கள். தலைநகருக்கு அருகேயிருந்த ஒரு சிறிய கிராமத்தில் வசித்து வந்த ஒரு பரம ஏழை இந்த செய்தியைக் கேட்டு பரபரப்படைந்தான.

வாழ்க்கையில் பொற்காசுகளையே பார்த்திராத அவன் ஒரே சமயத்தில் நூறு பொற்காசுகள் கிடைக்கும் என்ற அறிக்கை அவன் ஆசையைத் தூண்டியது. அந்தத் தொகை மட்டும் கிடைத்தால், அவனுடைய ஏழ்மை பரிபூரணமாக வில கிவிடும்.

அதைப்பற்றி அவன் தன் மனைவியிடம் விவாதித்த போது, அவள், "நமக்குப் பக்கத்து வீட்டில் சில நாட் களுக்கு முன் குடி வந்து இருக்கும் வீரேந்திரனைக் கேடடுப்பாருங்களேன்!

அவன் அதி புத்திசாலியாகக் காணப்படுகிறான். அவன் நிச்சயம் இதற்கு ஏதாவது ஒருவழி கூறுவான்" என்றாள்.

அவ் வாறே அவன் தன்னுடைய பக்கத்து வட் டுக்காரனான வீரேந்திரனை யோசனை கேட்டவுடன் அவன் உடனே, "அது ஒன்றும் கஷ்டம் இல்லையே! நீ ஒரு நாறகாலியை அல்லது சோபாவைத் தலைக்கு மேல் சுமந்து போ! உன் மேல் வெயில்படாது!" என்று வீரேந்திரன் கூறினான்.

"ஆகா! என்ன அருமையான யோசனை? இது ஏன் யாருக்குமே தோன்றவில்லை!" என்று மகிழ்ச்சியுடன் கூவிய அந்த ஏழை, "நான் நீ கூறியவாறு நாளைக்கே தலைநகர் ஆக்ராவிற்குச் செல்லப் போகிறேன்" என்றான். அவ்வாறே மறுநாள் கிளம்பிய அவன் தலைக்குமேல் ஒரு சிறிய சோபாவைத் தூக்கிக்கொண்டு கால்நடையாகவே அக்பரின் தர் பாரை அடைந்தான்.


"பிரபு! குடை இல்லாமலே கொளுத்தும் வெயிலில் என் கிராமத்தில் இருந்து இங்கு கால் நடையாக வந்துதிருக்கிறேன்!" என்று பரபரப்புடன் அறிவித்தான்.

"சபாஷ்! யாருக்குமே தோன் றாத இந்த யோசனை உனக்கு மட்டும் எப்படித் தோன்றியது?" என்று அக்பர் ஆவலுடன் கேட்டார்.

"பிரபு! உண்மையில் எனக்கு இந்த யோசனையை சொல்லிக் கொடுத்தது என் பக்கத்து வீட்டுக் கார வீரேந்திரன்!" என்றான் ஏழை!

அது பீர்பால் தான் என்று யூகித்துக் கொண்ட அக்பர் தன் திட்டம் பலித்ததையெண்ணி மிக மகிழ்ச்சியுற்றார்.

நான் அறிவித்தபடியே உனக்கு நூறு பொற்காசுகள் தருகிறேன். அந்தப் பணத்தை உன் கிராமத்திற்கு பத்திரமாக எடுத்துச் செல்ல உன்னுடன் இரு காவலர்களையும் அனுப்புகிறேன்.



நீ உன் வீட்டை அடைந்ததும், அந்த புத்திசாலி வீரேந்திரனை காவலர்களிடம் ஒப்படைத்து விடு!" என்றார்.

அவ்வாறே மிக்க மகிழ்ச்சியுடன் அந்த ஏழை இருவீரர்களின் துணையுடன் தன் வீட்டை அடைந்தான். அவன் அடையாளம் காட்டிய வீரேந் திரனைக் காவலர்கள் தங்களுடன் அழைத்துக் கொண்டு ஆக்ரா திரும்பினர்.

தர்பாரில் நுழைந்த வீரேந்திரன் தன் முகத்தை ஒரு பையினால் மூடிக் கொண்டு வந்தான். "வீரேந்திரா! உன் முகத்தை ஏன் மூடிக் கொண்டிருக்கிறாய்? பையை அகற்று!" என்றார் அக்பர்.

"பிரபு! நான் வீரேந்திரன் இல்லை! நான்தான் பீர்பால்! உங்கள் முகத்தில் இனி நான் விழிக்கக் கூடாது என்ற உங்கள் கட்டளைப்படியே நான் எனது முகத்தை மூடிக்கொண்டு வந்து உள்ளேன்!" என்றான்.

"பீர்பால்! உன் முகத்தை நான் இப்போதே பார்க்க விரும்புகிறேன்! இதுவும் என் கட்டளையே!" என்று கூறிய அக்பர் தானே முன்சென்று பையை அகற்றி விட்டு, பீர்பாலை மிகுந்த பிரியத்துடன் கட்டித் தழுவிக் கொண்டார்.





## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1065 - லண்டனில் வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயம் (Westminster Abbey) திறந்துவைக்கப்பட்டது.
- 1612 - கலிலியோ கலிலி நெப்டியூன் கோளைக் கண்டுபிடித்தார்.
- 1836 - தெற்கு அவுஸ்திரேலியா, அடிலெய்ட் ஆகியன அமைக்கப்பட்டன.
- 1836 - மெக்சிகோவின் விடுதலையை ஸ்பெயின் அங்கீகரித்தது.
- 1846 - அயோவா ஐக்கிய அமெரிக்காவின் 29ஆவது மாநிலமாக இணைந்தது.
- 1867 - ஐக்கிய அமெரிக்கா மிட்வே தீவுக்கு உரிமை கோரியது.
- 1885 - இந்தியாவின் வழக்கறிஞர்கள், அறிவியலாளர்கள், ஊடகவியலாளர்கள் 72 பேர் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியை ஆரம்பிப்பதற்கு மும்பையில் கூடினர்.
- 1891 - யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை சிவன் கோயிலில் பல்லாயிரக்கணக்கான ரூபாய் பெறுமதியான நகைகள் களவாடப்பட்டன.
- 1895 - பிரான்சின் லூமியேர சகோதரர்கள் பாரிஸ் நகரில் தங்கள் திரைப்படங்களை முதன்முதலாகப் பொதுமக்கள் பார்வைக்குக் கட்டணத்துடன் திரையிட்டனர்.
- 1930 - மகாத்மா காந்தி பேச்சுவார்த்தைகளுக்காக பிரித்தானியா சென்றார்.
- 1958 - கியூபாவின் சாண்டா கிளாரா நகர் மீது சே குவேரா போர் தொடுத்தார்.
- 1981 - அமெரிக்காவின் முதலாவது சோதனைக்குழாய் குழந்தை எலிசபெத் கார் வேர்ஜீனியாவில் பிறந்தது.
- 2006 - எதியோப்பிய மற்றும் சோமாலிய அரசுத் துருப்புக்களும் சோமாலியா தலைநகர் மொகடிசுவைக் கைப்பற்றியதை அடுத்து இஸ்லாமிய போராட்ட அமைப்பின் போராளிகள் தலைநகரைக் கைவிட்டு வெளியேறினர்.
- 2007 - நேபாளத்தின் இடைக்கால நாடாளுமன்றம் நாட்டை குடியரசாக அறிவித்து மன்னராட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தது.

### பிறப்புகள்

- 1932 - திருபாய் அம்பானி, இந்தியத் தொழிலதிபர் (இ. 2002)
- 1937 - ரத்தன் டாடா, இந்திய டாட்டா குழுமங்களின் தலைவர்
- 1940 - அ. கு. ஆன்டனி, இந்திய அரசியல்வாதி
- 1945 - பிரேந்திரா, நேபாள மன்னர் (இ. 2001)
- 1947 - நாஞ்சில் நாடன், எழுத்தாளர்
- 1954 - டென்செல் வோஷிங்டன், அமெரிக்க நடிகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கருவாச்சி காவியம்



## வைரமுத்து- 33

..பத்து ரூவா கேட்டதுக்கு அந்த பாவிப் பய ஏழுக்கு மேல ஏறிவரல.

இம்மைய நாயக்கர் வீட்டுக்கு ஓடிப் போயி வெதத்தானியம் வாங்கிக்கிட்டா.

மூணு குறுக்கம் காட்டுக்கு மூணு படி சோளம் போதும். ஓடு வெத வேணுமே! எள்ளு முக்காப்படி- மொச்சப் பயறு, தட்டாம் பயறு, கானம் தொவர இதெல்லாம் வகைக்குப் பாலரைக்காப்படி வாங்கித் துண்டு துண்டாத் துணியில முடிஞ்சு மொத்த மாத் தோள்ல சொமந்து வீடுவீடா அலையிறா ஏர் மாடு தேடி.

வெதப்புக்கு மட்டும் ஒத்த ஏர் ஆகாது.

ரெட்ட ஏர் வேணும். எவனக் கேட்டாலும் எங்க காடு உழுதுட்டு ஒங்க காடு வாரேங்கிறான்.

நாலு நாளாச்சு.... அஞ்சு நாளச்சு... ஏர் கெடைக்கல.

போயிக்கிட்டிருக்கு இவ காட்ல!

நாளைக்கு பார்ப்போம் நாளன்னைக்குப் பார்ப்போம்ன்னு சொல்றாங்களே தவிர உறுதி சொல்றானில்ல ஒருத்தனும்.

எப்படியும் ரெண்டு நாள்ல ஏர் கெடைச்சிரும்ங்கற நம்பிக்கையில இருக்காக பெரிய மூக்கியும் கருவாச்சியும்.

அவுக நம்பிக்கையில நஞ்சு ஊத்தற மாதிரி காதோட காதா ஊருக்குள்ள கண்ணுக்குத் தெரியாத ஒரு கலவரத்த உண்டுபண்ணிக்கிட்ருக்கான் கட்டையன்.

என்னிய மீறிக் கருவாச்சி காட்டுக்கு எவன் உழுகப் போனாலும் உழுத மாடு திரும்ப வரும். உழுதவன் திரும்ப மாட்டான்.



பொதுவா மனுசக்கூட்டத்துக்குள்ள குணமே கெட்டதுக்குப் பயப்படறது தான்.

தெம்பு சொல்லிப் பாருங்க.. அவ்வளவு சீக்கிரம் தேறமாட்டான் மனுசன். பயமுறுத்திப் பாருங்க... உடனே மெரண்டு உசுர் கொறஞ்சு போவான்.

போற வழியில புங்க மரத்துல ஒரு கிளியிருக்கு. பாத்துட்டுப் போப்பான்னு சொல்லிப் பாருங்க...

கிளியா.. இருக்கா... நான் போற வரைக்கும் இருக்குமா... பச்சக் கிளியா. பஞ்சவர்ணக் கிளியான்னு ஆயிரங் கேள்வி கேப்பான்.

போற வழியில ஒரு புலி இருக்கு- பாத்துப் போப்பான்னு சொல்லி விட்ருங்க ஒரு கேள்வியும் கேக்காம எங்க ஊரு அதுக்கு எதிர் திசையிலன்னு ஓடியே போவான்.

கெட்டது எப்பவுமே கேள்வி கேக்க விடாம ஒட்டிக்கிரும்.

கட்டையனுக்கும் அப்படித்தான் பயந்து போச்சு சொக்கத்தேவன் பட்டி.

பெரியமூக்கி பாவம் கெழண்டு போனவ; அத்துவிட்ட கருவாச்சி வேற அத்துவானக் காட்ல நிக்கிறா.

வீட்டுக்கு ஒரு எரு போயி உழுக குடுப்பான்னு சொல்லியிருந்தா ஒரு பய உழுகப் போயிருக்க மாட்டான் ஊர்ல.

உழுகப் போனவன் வீடு திரும்ப மாட்டான். கருவாச்சி காடு உழுக எவனும் போகாதன்னு கட்டையன் கமுகக்கமாய் பரப்பவும் எதுக்கடா பொல்லாப்புன்னு அவனவன் இஞ்சி இறுக்கிட்டான்.

பெரிய மூக்கி மேல வெறுப்பல்ல; கட்டையன் மேல பயம்.

பொண்டாட்டி தப்பான வழியில போறாங்கற சங்கதி ஊரு தெரிஞ்சு நாடு தெரிஞ்சு கடைசியாத்தான் புருசனுக்குத் தெரியுங்கிற மாதிரி ஏர் மாடு தடுத்து வச்சிக்கிறது கட்டையன் வேலதான்ங்கிறது அஞ்சாம் நாளு தான் தெரிய வருது பெரிய மூக்கிக்கு.

அடப்பாவிப் பயலேன்னு நெஞ்சப் புடிச்சு ஒக்காந்து போனாக தாயும் மகளும். காடு கர பூரா ஒழவாயிருச்சு.

இந்தா இந்தான்னு ஈரம் போயிருக்கு. இன்னம் ரெண்டு நாள் விட்டா ஒழவு எறங்காது. விழுந்த வெத மொளைக்காது.

(தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

...அதுதான் பிரச்சினை. அதனால்தான் பல சமயங்களில் நீங்கள் என்னிடம் ஏதேனும் கேட்கும் பொழுது நான் எதையும் நேரடியாகவோ அல்லது விளக்கமாகவோ ளஒரு போதும் சொல்வதில்லை.

நான் வெறுமனே சில சுருக்கமான எளிதில் புரியாத வாக்கியங்களை உங்கள் மனம் கவலையாக எடுத்துக் கொள்ளாத வகையில் -சொல்லி

எப்பொழுதும் ஊடுருவிச் செல்ல முயற்சி செய்கிறேன். இந்த அமைதி உங்களை இறுதியாக எங்கு எடுத்துச் செல்லவேண்டுமோ அங்கு எடுத்துச் செல்லும். ஒருபோதும் என் வார்த்தை

களைச் சேகரித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வார்த்தைகளைச் சேகரித்து மேலும் மேலும் குழப்பமடைகிறார்கள். என்றாவது ஒருநாள் தெளிவு கிடைக்கும் என்ற எண்ணத்தில் அவர்

அது முரண்படுவதாகத் தோன்றினாலும் அது பேசப்படும் கணத்தில் முழுமையான் உண்மையாக இருக்கிறது. நான் பேசுவது எதுவானாலும் பேசும் அந்த கணத்தில் முழுமையாக உண்மையாக இருக்கிறது.

ஆனால், நீங்கள் என் வார்த்தைகளிலிருந்து மட்டும் எந்த ஒரு அனுமானத்திற்கும் வர முடியாது. அதனால் இப்போதைக்கு அவற்றை எந்தக் கேள்வியும் இல்லாமல் வெறுமனே எடுத்துக்கொள்ளுங்கள். அதைப்

## கவலைகள் இன்றி வாழ்தல்!

விடுவேன். அதே சமயம் அதை ஊடுருவிப் புரிந்துகொள்ளும் சக்தியையும் கொடுப்பேன்.

சொல்லுங்கள்.....

ஸ்வாமிஜி நீங்கள் சொல்லுவதைப் பற்றிக் கவலைப்படாமல் எப்படி எங்களால் அதை பின்பற்ற ஆரம்பிக்க முடியும்?

நான் சொல்லும் வார்த்தைகளில் உங்கள் மூளையைச் செலுத்தாமல் அதற்குப் பின்னால் உள்ள சக்தியையும் ஊக்கத்தையும் கிரஹித்துக் கொண்டு நிகழ்காலத்தில் வாழத் தொடங்குங்கள்; அவ்வளவுதான்.

உங்கள் மூளையை அதில் செலுத்தும் பொழுது தர்க்கம் உள்ளே வந்து விடுகிறது. ஒருமுறை தர்க்கம் உள்ளே வந்து விடுமாயின் தொல்லைகள் ஆரம்பித்து விடுகின்றன.

என் வார்த்தைக்குப் பின்னால் உள்ள சக்தியை உணருங்கள். இதை நான் அமைதி என்று அழைக்கிறேன். இந்த அமைதியினால் உங்களை நான்



களுக்கு அர்த்தம் கண்டுபிடிக்க முயற்சி செய்யாதீர்கள்.

ஒருபோதும் வார்த்தைகளைச் சேகரிக்காதீர்கள். புத்திசாலிப் பைத்தியங்கள் மட்டுமே மேலும் மேலும் வார்த்தை

கள்தான் வார்த்தைகளைச் சேகரிக்கிறார்கள். ஆனால் அது ஒருபோதும் நிகழப்போவதில்லை.

பாருங்கள் நான் பேசுவது எதுவாகளையும் இணைத்து ஆராயும்பொழுது

### ஆன்மீகம் 118

பின்பற்றுவதற்குத் தேவையான சக்தியையும் அறிவுக் கூர்மையையும் அதுவே கொடுக்கும்.

நீங்கள் முழுமையான விசுவாசத்துடன் இருக்கும்பொழுது உங்களால் கவலைப்பட முடியாது. இதுவே உண்மையான வழிபாடு. வழிபாடு என்பது உங்கள் கவலைகளையெல்லாம் கொட்டிவிட்டு ஒரு தீர்வைக் கேட்பதல்ல. வழிபாடு என்பது பிரபஞ்ச இருப்புத்தன்மைமீது முழுமையான விசுவாசம் வைப்பது. அது உங்களுக்குச் செய்கிறது என்பதை உணர்வது. அதனால் உங்கள் புத்தியுடன் கேட்காதீர்கள். ஆழமான தியானத்துடன் கேட்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனவெளி

**உங்கள் கேள்விகளுக்கு உளவியல் பேராசிரியர் தயா சோமசுந்தரம், உளவியலாளர் கோகிலா மகேந்திரன் ஆகியோர் பதில் அளிக்கின்றனர்.**

**14.12.2014 அன்று ஞாயிறு வலம்புரியில் "வெண்ணிலா" என்ற தலைப்பில் சிறுமியின் கதை வெளியாகியது. அதனைத் தொடர்ந்து 21.12.2014 ஞாயிறு, சிரேஷ்ட உளவளத் துணையாளரும், எழுத்தாளருமான கோகிலா மகேந்திரன் அவர்களின் நேர்காணல் இடம்பெற்றது. இவ்வாரம் வாசகர்களின் கேள்விகளுக்கு பேராசிரியர் தயா சோமசுந்தரம் அவர்களும், கோகிலா மகேந்திரன் அவர்களும் இணைந்து பதிலளிக்கின்றனர்.**

ஜெனிதா. இதாவடி.

***எனக்கு இரண்டு குழந்தைகள், ஒன்று பெண் பிள்ளை வயது 9, மற்றொன்று ஆண் பிள்ளை வயது 5. இருவரும் சரியான குழப்படி. அடிக்காமல் அடங்கமாட்டார்கள். அநேகமாக நான் அடிப்பேன். பிள்ளைகளை அடித்தல் சிறுவர் துஷ்பிரயோகம் என்று சொல்கிறார்கள் நான் எப்படி அடிக்காமல் இருப்பது?***

"குழப்படி" என்ற சொல்லுக்கு வரைவிலக்கணம் கூறுவது கடினம். நீங்கள் அவர்களின் எத்தகைய செயற்பாடுகளை குழப்படி என்று சொல்கிறீர்கள் என்பதை உங்களுடன் விபரமாகக் கதைத்தால்தான் அறிந்து கொள்ள முடியும். பிள்ளைகள் பொதுவாக துடிதுடிப்பாக இருப்பார்கள். புதிய விடயங்களைக் கற்றுக் கொள்ள முனைவார்கள். அது எமக்குக் குழப்படி போலத் தோன்றலாம். அவர்களை எமக்குத் தொந்தரவு இல்லாத வகையில் செயற்பட வைப்பதற்கு நேரான பல வழிகள் உண்டு. குறிப்பாக அவர்கள் எமக்குப் பிடித்தமான வழியில் நடந்து கொள்ளும் போது பாராட்டுவது. பிள்ளை ஒரு பேப்பரையும் கலர் சோக்குகளையும் எடுத்து ஒருபடம் வரைந்து "அம்மா" என்று காட்டுமனையும் போது "படம் அழகாக இருக்கிறது இன்னொன்று கீறிக் கொண்டு வாங்கோ" என்றால் பிள்ளை மேசையில் இருந்து விடும். "இதென்ன எல்லா இடமும் கலர் சட்டையெல்லாம் ஊத்தை" என்று சொன்னால் பிள்ளையின் நம்பிக்கை தன்னூக்கம், உற்சாகம் எல்லாம் சிதறிவிடும். இது ஒரு சிறு உதாரணம் மட்டுமே. "பெற்றோரியம்" சம்பந்தமான அறிவை விரிவாக நீங்கள் தேடிக் கற்றுக்கொள்வதே நல்லது. பிள்ளைகளுக்கு உடலியல் தண்டனை வழங்குவது தவிர்க்கப்பட வேண்டும் என்பது இன்றைய கல்வியாளர்கள் மற்றும் உளவியலாளர்களும் ஏற்றுக் கொண்ட விடயமாகும். உடலியல் தண்டனைகள் பிள்ளையின் மனதைப் பெரிதளவில் பாதிக்கலாம்.

குமார், யாழ்ப்பாணம்.

***பெரும்பாலும் வயது முதிர்ந்தவர்கள் பாலியல் துஷ்பிரயோகம் செய்வதாக செய்திகள் வெளி வருகின்றன. ஏன்?***

பொதுவாகவே பொருத்தமான பாலியல் விருப்பம் எதிர்பாலார் மீதோ. ஒத்த வயது எதிர்பாலார் மீதோ ஏற்படுவது சாதாரண விடயமாகவும் ஆரோக்கியமான பாலியல் நடைமுறையாகவும் கருதலாம். அவற்றை விட தற்காலத்தில் ஒத்த பாலினர் தன்னின வயது வந்தவர்கள் மீது பாலியல் நாட்டம் கொள்வது தவறில்லை என்ற நிலையும் காணப்படுகின்றது. இவற்றுக்கு அப்பால் இயற்கைக்கு மாறாக தங்களுடைய பாலியல் தேவைகளை தீர்ப்பதற்கு சில வயது வந்தவர்கள் சிறு பிள்ளைகளை பயன்படுத்துவது மிகவும் தவறான விடயமாகும். இயற்கைக்கு மாறாக சிறு பிள்ளைகளின் மீது தூண்டப்படும் பாலியல் உணர்வை உளவியல் அறிஞர்கள் பீடோபிலியா (Pedophilia) என்று அழைப்பார்கள் அதாவது வயது வந்தவர்களுக்கு குழந்தைகள் மீது தூண்டப்படும் பாலியல இச்சை என்று கூறலாம்.

இவ்வாறானவர்கள் இயல்பாகவே குழந்தைகளைக் கண்டவுடன் தங்களுடைய பாலியல் உணர்வுகளால் தூண்டப்படுவர். அவ்வாறு தூண்டப்படும் போது, சமூகச் சீரழிவுகளை ஏற்படுத்தக் கூடிய செயற்பாடுகளில் ஈடுபடக்கூடும். ஒன்றிணைந்து இணையத்தளங்களில் நிர்வாண மற்றும் சிறுவர் சம்பந்தப்பட்ட பாலியல் படங்களைப் பார்த்தல், (Phonography, Blue film) அவர்களை தங்களுடைய தேவைகளுக்கு பயன்படுத்துவது போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவர். தாய்லாந்து மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் தரகர்கள் மூலம் இவ்வாறான செயற்பாடுகள் தொழிலாக நடைபெற்று வருகின்றன. கொழும்பின் பல கடற்கரையோரப் பகுதிகளில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுகின்றன.



தேசிய சிறுவர் அபிவிருத்தி அதிகாரசபையினர் இச்செயற்பாடுகளைத் தடுக்க பெரும்பாடுபட்டு வருகின்றனர். ஆண்கள் மற்றும் சிறுவர்கள் தங்கும் இல்லங்கள், நிறுவனங்கள், பாடசாலைகள் எனப் பல இடங்களிலும் வயது வந்தவாகள் தங்கள் ஆசையை தீர்க்கின்றனர்.

இவ்வாறான பிரச்சினையுடன் இருக்கின்ற வயது வந்தவர்களை இப்பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கு உளவியல் ரீதியான முறைகள் காணப்படுகின்றன. அவற்றில்,

பதங்கமாதல்(Sublimation) என்ற உளவியல் பொறிமுறை காணப்படுகின்றது. குறிப்பாக, குறுகிய கால மகிழ்வையும் தீமையையும் ஏற்படுத்தக் கூடிய பாலியல் இச்சையை சமூகத்திற்கு ஏற்புடைய செயலாக மாற்றுவதற்கு ஊக்கப்படுத்தும் முறையாகும். அதாவது திசைதிருப்பிவிடல். சிலர் விளையாட்டிலும், வேறு சிலர் கலையுணர்வுடன் கதையாக்கம், கவிதை, ஓவியம், நடனம், பாடல் மற்றும் ஆன்மீகத் துறை போன்றவற்றில் தம் ஊக்கத்தைத் திருப்பி விடலாம். அவ்வாறான ஏதாவதொரு நல்ல திசையில் திருப்பிவிடும் போது அவர்களின் சிந்தனை, தேவை என்பவற்றில் ஆரோக்கியமான மாற்றங்கள் ஏற்படும்.

நடத்தை சிகிச்சை (Behavioral Treatment) : அதாவது இவ்வாறான பாலியல் தூண்டல் உணர்ச்சிகளோ எண்ணங்களோ மனதில் ஏற்படும் போது, அருவருப்பு ஓர் மாற்றத்தை ஏற்படுத்தலாம். உதாரணமாக நோவை ஏற்படுத்தக் கூடிய வகையில் "கையை பிடித்து கிள்ளிவிடுதல்" அல்லது வேறு ஏதாவது முறையில் சிந்தனையை மாற்றமுடியும்.

இவற்றை விட சட்டரீதியாக, மன்னிக்கமுடியாத சிறுவர் பலாத்காரத்தைச் செய்தவர்களுக்கு நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்படல் வேண்டும். அத்தீர்ப்பு மறுபடியும் அவ்வாறான ஆசையோ, எண்ணமோ வராத அளவுக்கு இருப்பதுடன் மீண்டும் அக்குற்றத்தைச் செய்யாத அளவுக்கு உறுதி செய்யக் கூடியதாகவும் இருக்க வேண்டும். இவ்வாறான பாலியல் அவா இருப்பவர்களுக்கு அவற்றைக் குறைக்கக் கூடிய மருந்துகள், ஊசிமருந்துகள் என்பனவும் காணப்படுகின்றன. அவற்றை குறித்த நபர்களுக்கு வழங்குவதன் மூலமும் பாதிப்புக்களைக் குறைக்கலாம். சிலவேளைகளில் அத்தகைய பாலியல் அவா உள்ளவர்கள் தாமாகவே முன்வந்து, தங்களுடைய பாலியல் இச்சையைக்குறைத்துக் கொள்ளச் செய்யவேண்டிய மருத்துவ சிகிச்சையைச் செய்வதற்கு முன்வருவார்கள்.

ஆனாலும் ஒரு சில வயது வந்தவர்கள் செய்கின்ற துஷ்பிரயோகச் செயல்களினால் ஆரோக்கியமான உறவுகளையும் சிலவேளை சந்தேகப்பட வேண்டிய நிலையும் உருவாகின்றது. பாலியல் துஷ்பிரயோகம் பற்றிய அதிக விழிப்புணர்வுகளின் காரணமாக, கூடிய கவனிப்பின் காரணமாக இயற்கையான அன்பு, ஆதரவான தொடுகை என்பன கூட பிழையான கண்ணோட்டத்தில் பார்க்கப்படலாம். பிள்ளைகளுக்கு தொடுகை, அன்பு, அரவணைப்பு என்பவை கட்டாய தேவைகளாகும். அப்படியிருக்கும் போது அவற்றைத் தடுப்பதும் தவறே.

பாலியல் துஷ்பிரயோகம் எனபது பல்வேறு நிலைகளில் நோக்கக்கூடியது. அதாவது,

**ஆரம்ப கட்டம்:**

**பார்வை:** பாலியல் ரீதியான உணர்வுடன் குறித்த நபர் பார்க்கின்றாரா? அல்லது உண்மையான அன்பு கலந்த பார்வையுடன் பார்க்கின்றாரா? என்பதை வெளிப்பார்வையை வைத்துக் கண்டறிய முடியாது.

**பேச்சு:** பேச்சில் கூட அன்பு கலந்த பேச்சு எது? பாலியல் உணர்வு கலந்த பேச்சு எது என்று கண்டறிவது கடினமானதாகும்.

**தொடுகை:** தொடுகையிலும் அன்பாக அரவணைப்புடன் சிலர் தொடும்போது அவற்றை பாலியல் ரீதியாக இருக்குமோ? என்றுஅனுமானிக்க முடியாது. அவற்றைத் தடுக்கவும் முடியாது. குழந்தைகளுக்கு அன்பு கலந்த அரவணைப்பு கட்டாயம் தேவை. எப்படியிருப்பினும் சிறுவர்கள் சில தவறான தொடுகைகள் பற்றி மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

அதேவேளை, இவ்வாறான சந்தர்ப்பங்களில பொறுத்திருக்காது உடனடியாக பெற்றோருக்கோ, மரியாதைக்குரிய பெரியோருக்கோ, ஆசிரியருக்கோ சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அவசர இலக்கத்துக்கு அழைத்தோ தெரிவிக்க வேண்டும்.

ஆனால் இவற்றுக்கப்பால் பாரதூரமான நிலை துஷ்பிரயோகம் செய்கின்ற நிலையாகும் ஒரு பிள்ளையை வன்புணர்வு செய்தல் என்பது மிகவும் ஆபத்தானது. அத்துடன் மன்னிக்க முடியாதது.

அதிலும் குறிப்பாக 17 வயதுள்ள ஒரு ஆண் 15 வயதுள்ள ஒருபெண்ணை விருப்பத்தின் பேரில் உறவு கொள்ளல் அவர்களின் வயதுக்கும் சமூக கட்டமைப்புக்கும் அப்பாற்பட்ட விடயமாயினும் அவர்களை திருமணம் செய்தல் மூலம் இணைத்து வைத்தல் ஓரளவு ஏற்றுக்கொள்ளக்கூடியது. ஆனால் திருமணமாகிய 35வயது ஆண் ஒருவன் 12வயது சிறுமியை துஷ்பிரயோகம் செய்தல் தண்டனைக்குரிய குற்றமாகும்.

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்**

***பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்டபட்ட ஒருவரை திரும்பவும் பழைய நிலைக்கு கொண்டு வரமுடியாதா? பாதிப்பிலிருந்து மீட்டெடுப்பது மிகவும் கடினமாகவிருக்கிறதே?***

பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்பட்ட ஒருவரை மீட்டெடுத்து வருவது மிகக் கடினமான விடயமாகும். அதுவும், **சிறுவர் நிரந்தரமாக பாதிக்கப்படுகின்றனர்.**

குறித்த சம்பவத்தின் காரணமாக அவர் மிகப்பெரிய உளத் தாக்கத்துக் குட்பட்டிருப்பார். அதைவிட, அவர் பால் ஏற்படும் குடும்ப, சமூக பார்வை, மனப்பான்மை, நடந்து கொள்ளும முறை முதலியன பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

அதிலிருந்து அவரை மீட்பதற்கு நாம் குடும்ப, சமூக மனப்பான்மையை மாற்றி ஆதரவைப் பெற்றுக் கொடுப்பதுடன் தேவையான இடத்தில் சிறுவர் உளவளத் துணையும் வழங்க வேண்டும். அவர்களை ஓவியங்கள் வரைதல், விளையாட்டுக்களில் ஈடுபடுத்துதல், கலையம்சங்களில் ஈடுபடுத்துதல் (Art therapy, play therapy, drawing therapy)போன்ற விடயங்களில் இணைய வைக்கலாம். இந்த முயற்சிகள் அவர்களுடைய பாதுகாப்பு பற்றிய நம்பிக்கையை ஏற்படுத்தும் விதத்தில் அமைய வேண்டும்.

இவை தவிர கற்றல் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து, ஆர்வங்களை கண்டறிந்து புதிய வாய்ப்புக்கள் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். பாராட்டுக்கள், ஊக்கப்படுத்தல்மூலம் அவர்களை பிடித்த துறைகளில் சாதிக்க வைப்பதன் மூலம் வாழ்க்கையில் இலக்குகள், எதிர்கால ஆர்வங்கள் என்பவற்றை சாதிப்பதன் முக்கியத்துவத்தை உணரவைக்க வேண்டும்.

முக்கியமாக அவர் மேல் இருக்கின்ற சமூகக் களங்கத்தைப் போக்க வேண்டும். அதுதான் மிகக் கடினமான விடயம். குறித்த பெண் பாதிக்கப்பட்டவர் என்பதை எங்கள் சமூகம் முத்திரை குத்திவிடும். எத்தனை காலமானாலும் தங்கள் பாதகமான அடையாளப்படுத்தலை மாற்றமாட்டார்கள். குறித்த நபர் அவ்விடயத்தை மறந்து வேறு விடயங்களில் ஈடுபட்டாலும் மீண்டும் நினைவுபடுத்தும் விதத்தில் செயற்படும் சமூகத்தவர் தங்களின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தினாலே பாதிக்கப்பட்டவர்கள் மீண்டும் நன்னிலைக்கு வருவார்கள்.

அவருடைய மனதில் ஏற்படுத்தப்பட்ட நிரந்தரத் தாக்கம், சமூகக் களங்கம் என்பன அவரை திருமணம் போன்ற வாழ்வியல் தொடர்புகளுக்கு செல்லவும் விடாமல் தடுக்கும். மாறி அவர்கள் வேறு பிரதேசங்களுக்கு சென்று மறைந்து வாழ்ந்தாலும் அவரை குற்றவாளியாக்கி அங்குவரை சென்று நோகடிப்பவர்களும் சமுதாயத்தில் இருக்கின்றனர்.

எனவே பாதிக்கப்பட்டவரை மீட்டெடுப்பதில் நாம் ஒவ்வொருவரும் மிகவும் கவனமாகவும், பொறுப்புணர்ச்சியுடனும் நடந்து கொள்ளவேண்டும். அப்போதே அவரை அந்நிலையிலிருந்து ஓரளவு மீட்க முடியும்.

**1929**
**சிறுவர் உதவிச் சேவை அவசர அழைப்பு இலக்கம்**

வாசகர்களிடமிருந்து கேள்விகள், கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

தரமானவை துறைசார்ந்த நிபுணர்களின் பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

சாந்திகம் ஊடகக்குழு,
8, 8/1, கற்பக விநாயகர்
ஒழுங்கை,
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் கேள்விகளும் கருத்துக்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

E.mail:psych@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட திட்டமிடாத அபிவிருத்தி காரணம்

## மைத்திரி விசனம்



(கொழும்பு)

**நாட்டில் இயற்கை அனர்த்தங்கள் மூலம் பேரழிவுகளை நாம் சந்திப்பதற்கு காரணம் இங்கு ஒரு சிலரால் மேற்கொள்ளப்படும் திட்டமிடாத அபிவிருத்தி செயற்பாடுகளேயாகும். ஒரு தசாப்தத்திற்கு முன்னர் ஏற்பட்ட அழிவுகளின் வடுக்கள் அரசாங்கத்தினால் இன்னமும் மாற்றப்படவில்லை என தெரிவிக்கும் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன மைத்திரி ஆட்சியில் அனைத்திற்கும் மாற்றம் உண்டு எனவும் தெரிவித்துள்ளார்.**

கொழும்பு காக்கைதீவு பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சுனாமி நினைவு தின நிகழ்வில் கலந்துகொண்டிருந்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு தசாப்தத்திற்கு முன் நாட்டில் ஏற்பட்ட மிக மோசமான சம்பவம் மக்களின் மனங்களில் இருந்து இன்னமும் நீங்காது உள் ளது. பத்து வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் மக்கள் பலர் சுமார் 40 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் உயிரிழந்தனர். மக்களுக்கு எச்சரிக்கப்படாமையும் மக்கள் எதிர்பாராத ஒரு தருண த்திலும் இவ்வாறானதொரு மோசமான சம்பவம் இடம்பெற்று விட்டது.

எனினும் சுனாமி அனர்த்தம் இடம்பெற்று இன்று பத்து வருடங்களை கடந்து விட்டது. எனினும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தவொரு நிவாரணமோ தேசிய ரீதியில் எந்தவொரு பாதுகாப்பு நடவடிக்கையோ இடம்பெறவில்லை. சர்வதேச நாடுகளில் அனர்த்தங்கள் ஏற்படுமாயின் அதற்கு முன் எச்சரிக்கை நடவடிக்கைகளும் அதற்கமைய தொழில்நுட்ப அவதான செயற்பாடுகளும் பயன்படுத்தி அனர்த்தங்களை தவிர்த்து கொள்ள முடிகின்றது. எனினும் இலங்கையில் அவ்வாறானதொரு எச்சரிக்கை செயற்பாடுகள் இல்லை. மக்கள் அவதானமாக இருக்க வேண்டுமாயின் அரசாங்கம் எச்சரிக்கை செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாமையே தற்போதும் மலையக பகுதிகளில் தொடர் அனர்த்தங்கள் ஏற்பட காரணமாகியுள்ளது. எனவே எதிர்வரும் 8ஆம் திகதி இவை அனைத்தையும் வெல்லும் எமது புதிய யுகத்தினை ஆரம்பிப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# புனித சதாசகாய அன்னை ஆலய ஒளிவிழா இன்று

யாழ்.மாதகல் கிழக்கு புனித சதாசகாய அன்னை ஆலயத்தின் ஒளிவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

மாலை 6 மணி முதல் மாதகல் கிழக்கு புனித சதாசகாய அன்னை ஆலயத்தின் முன்றலில் அருட்பணி ஜே.ஏ.அருள்தாசன் அடிகளார் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வின் பிரதம விருந்தினராக இளவாலை பங்குத்தந்தை எஸ்.ஜே.கியூ. ஜெயரஞ்சன் அடிகளார் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக புனித சவேரியர் பெரிய குருமட விரிவுரையாளர அருட்பணி ஏ.ஜே.ஜெயசீலன அடிகளாரும், கலந்துகொள்வார்கள்.

பங்குமக்களின் கலைநிகழ்வுகளும், ஒளிவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியட்டிய மாணவர்களுக்கான பரிசளிபபும் இடம்பெறவுள்ளதாக மாதகல் கிழக்கு புனித சதாசகாய அன்னை ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (இ-5-23)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 240 | 240 | 240 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 450 | 380 | 400 |
| தக்காளி | 300 | 180 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 |
| கோவா | 120 | 160 | 140 |
| கரட் | 200 | 170 | 200 |
| பூசணி | 60 | 50 | 60 |
| புடோல் | 140 | 120 | 140 |
| வாழைக்காய் | 100 | 80 | 200 |
| சின்ன வெங்காயம் | 110 | 110 | 80-120 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 140 |
| பாகற்காய் | 350 | 300 | 280 |
| வெண்டிக்காய் | 160 | 150 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 |
| பயற்றங்காய் | 260 | 240 | 240 |
| லீக்ஸ் | 350 | 300 | 320 |
| பீற்றூட் | 200 | 150 | 200 |
| கறிமிளகாய் | 350 | — | 250 |
| முருங்கைக்காய் | — | — | — |
| போஞ்சி | 200 | 200 | 240 |
| கத்தரிதம்புள்ள | 170 | 180 | 200 |
| கீரை - 1 பிடி | 50 | 50 | 50 |
| தேசிக்காய் | 140 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 35 | 30-40 |
| இராசவள்ளி | 150 | — | 140 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 234


டொறின் மன்மதநாயகம்




கிரி சிவராஜா




சித்திரா சிறி




டொறின் மன்மதநாயகம்




இரத்தினசபாபதி பாலராஜா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ‘லேடி’ ‘டாடி’க்குப் பதில் சொன்ன ‘மோடி’யின் தூதுவர்!

பா.ஜ.க.தலைவர் அமித்ஷா சென்னை வந்தார். கிறிஸ்துமஸ் விழாவிற்கு முன்பு சென்னை புறநகரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசினார். தமிழகம் முழுவதும் இருந்து அக்கூட்டத்திற்கு பா.ஜ.க.வினர் வந்திருந்தார்கள். தமிழகத்தில் கூட்டணிக் கட்சி தலைவர்களான வைகோ ஏற்கனவே வெளியேறிவிட்டார். விஜயகாந்த் வெளியேறாவிட்டாலும் விரும்பாத வகையில் அக்கூட்டணியில் தொடருகிறார். “என்னை முதல்வர் வேட்பாளராக அறிவித்தால் தேசிய ஜனநாயக கூட்டணியில் தொடருவேன்” என்ற ரீதியில் கருத்துக்களைக் கசிய விட்டு காத்திருக்கிறார். பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் “என் தலைமையில் தனி அணி” என்று கூறிவிட்டு, இப்போது ஒட்டியும் ஒட்டாமலும் இருந்து கொண்டிருக்கும் கூட்டணிக் கட்சியின் தலைவர் அமித்ஷாவை தன் மகன் அன்புமணி ராமதாஸை அனுப்பி சந்திக்க வைத்திருக்கிறார்.

இப்படி பல்வேறு வ்கையான மாற்றங்களுக்கு இடையில் பா.ஜ.க. தலைவர் தமிழகத்திற்குள் வந்தார். புதுவிதமாக தி.மு.க. விற்கும், அ.தி.மு.க.விற்கும் “மாற்று கட்சி நாங்கள்தான்” என்ற முழக்கத்தை அறிவித்துவிட்டுப் போயிருக்கிறார். “எங்களுடன் இணைந்து தமிழகத்தின் முன்னேற்றத்திற்கு பாடுபடுங்கள்” என்றும் தமிழக மக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார். இதற்கெல்லாம் இனி தமிழக மக்கள்தான் செவி சாய்க்க வேண்டும் என்ற நிலைமை.

சென்னையில் அமித் ஷா அதிரடியாக தி.மு.க.வை அட்டாக் பண்ணினார். அது மட்டுமின்றி அ.தி.மு.க.வையும் அவர் விட்டு வைக்கவில்லை. அமித் ஷாவின் பேச்சு 2014 இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலை நினைவுபடுத்தும் வகையில் அமைந்தது. அந்த தேர்தலில் பிரதமர் வேட்பாளராக இருந்த நரேந்திரமோடி தமிழகத்திற்கு வந்து பொதுக்கூட்டங்களில் பேசினார். தன் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டினார். “மோடியால்தான் வளர்ச்சி” என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. அப்போது திடீரென்று கோபித்துக் கொண்ட முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா தன் பிரச்சாரத்தின் இறுதியில் மோடியைத் தாக்கினார். “வளர்ச்சிக்கு இந்த லேடி காரணமா அல்லது மோடி காரணமாக என்பதை நீங்கள் முடிவு செய்ய வேண்டும்” என்று மக்களுக்கு அறைகூவல் விடுத்தார். அதைத் தொடர்ந்து புதுக்கோட்டை தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் தன் பிரச்சாரத்தை நிறைவு செய்த தி.மு.க. பொருளாளர் மு.க. ஸ்டாலின், “தமிழகத்தின் வளர்ச்சிக்கு மோடியும் காரணமல்ல. லேடியும் காரணமல்ல. என் டாடி (கலைஞர் கருணாநிதி) தான் காரணம்” என்று ஆணித்தரமாகப் பேசினார். தமிழகத்தின் இந்த தேர்தல் பிரச்சாரத்திற்கு பிரதமர் வேட்பாளராக இருந்த நரேந்திரமோடி நேரடியாக எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை. “லேடி”யையோ. அல்லது “டாடி”யையோ மோடி விமர்சிக்கவில்லை. இந்த நிலையல் இப்போது தமிழகத்திற்கு வந்த அமித்ஷா அந்த “லேடி” “டாடி” பிரச்சினையை முன்வைத்தே தன் உரையை நிகழ்த்தியது போலிருக்கிறது. அதன் பிறகு நடைபெற்ற பத்திரிக்கையாளர்கள் சந்திப்பிலும் அதே கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்.

குறிப்பாக “காங்கிரஸ், தி.மு.க., அ.தி.மு.க ஆகிய மூன்று கட்சிகளின் ஆட்சியில் தமிழகம் வளர்ச்சியில் பின்னுக்குப் போய் விட்டது” என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்.



“இன்றைக்கு தமிழகத்தின் பொருளாதாரம் நெருக்கடியில் நிற்கிறது” என்று கூறியிருக்கிறார். “வேலைவாய்ப்பபின்மை, தனி நபர் வருமானம், தொழில் வளர்ச்சி, ஏழ்மையை விரட்டும் பணிகள், பொருளாதார வளர்ச்சி ஆகிய அத்தனை விடயங்களிலும் குஜராத்தை விட தமிழகம் பின்தங்கியிருக்கிறது” என்று போட்டு உடைத்து விட்டுப் போயிருக்கிறார். ஏன் பா.ஜ.க. ஆளும் சிறிய மாநிலமான கோவாவை விட ஏழ்மையைப் போக்கும் பணிகளில் தமிழகம் பின்தங்கியிருக்கிறது என்ற பயங்கரமான குற்றச்சாட்டை முன் வைத்துள்ளார். இலவசத் திட்டங்கள் தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் மாற்றி மாற்றி செய்து வந்தாலும் இது போன்ற நிலைமை இருப்பதாக அமித் ஷா சுட்டிக்காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது ஆட்சியிலிருப்பது அ.தி.மு.க. தான். ஆகவே அமித் ஷா கூறிய அனைத்துக் குற்றச்சாட்டுகளுமே அ.தி.மு.க.வை முன்னிலைப்படுத்தி சொன்னது போலத் தான் அமைகிறது. நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்தின் போது தமிழகம் குஜராத்தை விட வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதை முன்னிறுத்தி விரிவாகப் பிரச்சாரம் செய்தார் அப்போது முதல்வராக இருந்த ஜெயலலிதா. அதற்கு கவுண்டர் கொடுக்கும் விததத்தில் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களான குஜராத், மத்திய பிரதேஷ், கோவா ஆகிய மூன்று மாநிலங்களை விடவும் தமிழகம் ஒவ்வொரு விடயத்திலும் பின்தங்கியிருக்கிறது என்ற பகிரங்க குற்றச்சாட்டை முன்வைத்து விட்டுச் சென்றுள்ளார் அமித்ஷா. மறை முகமாகப பார்த்தால், “மோடியா” “லேடியா” “டாடியா” என்ற தமிழக பிரச்சாரத்திற்கு இப்போது பதில் சொல்லியிருக்கும் அமித்ஷா “மோடி தான்” வளர்ச்சி நாயகன் என்பதை தமிழக மக்களுக்குச் செய்தியாக விடுத்துள்ளார்.

இப்படியொரு குற்றச்சாட்டை முன்வைத்து விட்டு காங்கிரஸ்-தி.மு.க. கூட்டணி அரசாங்கம் “ஊழல் புகார்களின்” அரசாங்கமாகத் திகழ்ந்தது என்பதை சுட்டிக்காட்டியிருக்கிறார். ஆனால் பெங்களூர் சொத்துக் குவிப்பு வழக்கில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பெற்ற தண்டனை பற்றி வாய் திறக்கவில்லை. ஊழல் என்பதை முன்னிறுத்தும் போது தி.மு.க.-காங்கிரஸ் ஊழலை சுட்டிக்காட்டிய அமித்ஷா அ.தி.மு.க. ஊழல் பற்றி வாய் திறக்கவில்லை. அக்கூட்டத்தில் பேசிய பா.ஜ.க. தேசிய பொதுச் செயலாளர் முரளிதர்ராவ் கூட “இப்போது யார் உண்மையான முதல்வர் என்று தெரியவில்லை. முதலமைச்சராக இருக்கும் ஓ. பன்னீர்செல்வம் முதலமைச்சர் அறையில் உள்ள நாற்காலியில் அமரவில்லை” என்பதை சுட்டிக்காட்டி மட்டும் பேசினார். பா.ஜ.க. மாநில தலைவர் தமிழிசை சவுந்திரராஜன், “அ.தி.மு.க.விற்கும், தி.மு.க.விற்கும் மாற்று பா.ஜ.க.தான். 122 எம்.எல்.ஏ.க்களுக்கு (மொத்த எம்.எல்.ஏ.க்கள் 234) குறையாமல் பெற்று 2016 இல் பா.ஜ.க. ஆட்சி அமைக்கும்” என்று அறிவித்துள்ளார். மாநிலத் தலைவர்களில் ஆரம்பித்து தேசியத் தலைவரான அமித்ஷா வரை இந்த கூற்றை பிரதிபலித்துள்ளார்கள்.

அதைவிட முக்கியமாக பா.ஜ.க. தமிழகத்தில் மூன்றாவது பெரிய கட்சி என்பதை டிக்ளேர் செய்து விட்டுப் போயிருக்கிறார் அமித்ஷா. அ.தி.மு.க. மற்றும் தி.மு.க.விற்குப் பிறகு பா.ஜ.க.தான் மிகப்பெரிய கட்சி என்றும் நாட்டிலேயே இன்றைக்கு மிகப் பெரிய கட்சி பா.ஜ.க. என்றும் கூறியிருக்கிறார். பெரிய கட்சி பா.ஜ.க. என்ற “மந்திரத் தாயத்தை” தமிழகத்தில் அறிமுகப்படுத்தி ஆட்சியைப் பிடிக்க முயற்சி செய்திருக்கிறார் அமித்ஷா.

இதற்கு முன்னோட்டமாக தமிழகத்தில் உள்ள 60000 பூத்துகளிலும் ஒரு பூத்திற்கு நூறு பேர் சேர்த்தால் போதும் 60 லட்சம் உறுப்பினர்கள் பா.ஜ.க.விற்கு கிடைத்து விடுவார்கள். பிறகு தமிழகத்தில் பா.ஜ.க. ஆட்சிதான் என்பது அமித்ஷா தன் கட்சித் தொண்டர்களுக்கு கொடுத்துள்ள அஜெண்டா.

அதே நேரத்தில் இலங்கை தமிழர்களுக்கு அதிகாரம் அளிக்கும் பிரச்சினை குறித்தோ, தமிழகத்திற்கு பா.ஜ.க.வின் “வளர்ச்சி அஜெண்டா” என்பது பற்றியோ எந்தவொரு திட்டத்தையும் அறிவிக்கவில்லை அமித்ஷா. மீனவர்களின் தூக்குத் தண்டனையை ரத்து செய்ய இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தியதைக் குறிப்பிட்டுள்ள அவர் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது குறித்தோ, அவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட படகுகளை விடுவிப்பது குறித்தோ எந்தக் கருத்தையும் கூறவில்லை. தமிழகத்தின் முக்கிய திட்டமான “சேது சமுத்திரத் திட்டம்” குறித்தும் அவர் பொதுக்கூட்டத்தில் கருத்துச் சொல்லவில்லை. மொத்தத்தில் தமிழகத்தின் முக்கியப் பிரச்சினைகள் மீது அவர் எந்தக் கருத்தும் சொல்லாமல் சென்றிருக்கிறார் என்பதுதான் க்ளைமாக்ஸ் காட்சியாக இருக்கிறது.

தமிழகத்தைப் பொறுத்தவரை தி.மு.க. பலகீனமாக இருக்கிறது. அக்கட்சியை தாக்கினால் அதற்கு வாக்களிக்கும் வாக்காளர்கள் தங்கள் பக்கம் வருவார்கள் என்பதும், மத்தியில் ராஜ்ய சபை போன்ற இடங்களில் முக்கிய மசோதாக்களை நிறைவேற்ற அ.தி.மு.க.வின் ஆதரவு பா.ஜ.க. விற்கு தேவை என்பதால் ஜெயலலிதாவின் ஊழல் வழக்கு பற்றி பேசாமல் சென்றிருக்கிறார் அமித்ஷா என்பதும்தான் அரசியல் பார்வையாளர்களின் கணிப்பாக இருக்கிறது. ஆட்சியிலிருக்கும் கட்சியை விமர் சிக்காமல் எதிர்கட்சியை விமர்சிக்கும் பா.ஜ.க.வின் பாணி எப்படி “மாற்றுக் கட்சியாக” வர உதவும் என்பது மில்லியன் டொலர் கேள்வி.

ஏனென்றால் தமிழகத்தில் அ.தி.மு.க. விற்கும் தி.மு.க.விற்கும் மாற்று என்று ஏற்கனவே ஏகப்பட்ட கட்சிகள் வலம் வந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக விஜயகாந்த் தலைமையிலான தே.மு.தி.க. இதே கருத்துச் சொல்லி வருகிறது. ஈ.வி.கே.எஸ். இளங்கோவனை மாநிலத் தலைவராகக் கொண்டிருக்கும் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியும் இந்தக் கருத்தை விதைத்து வருகிறது. இது தவிர பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் ராமதாஸும் “திராவிடக் கட்சிகளுக்கு மாற்று” என்ற கோஷத்தை நீண்ட நாட்களாகவே முன் வைத்து வருகிறார். இவர்களுக்குப் பின்னால்தான் பா.ஜ.க. “மாற்றுக் கட்சி” என்ற கோஷத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அதற்கு அக்கட்சி தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. ஆகிய இரு கட்சிகளையும் விமர்சிக்க வேண்டும். அப்போதுதான் பா.ஜ.க.வின் மீது நம்பகத்தன்மை மக்களுக்கு வரும். ஒரு புறம் தி.மு.க.வின் ஊழலைச் சுட்டிக்காட்டிக் கொண்டு, இன்னொரு புறம் அ.தி.மு.க. வின் ஊழல் பற்றி அமைதி காப்பது “மாற்று அரசியலுக்கு” உரிய அடையாளமாக இருக்காது என்பதே இன்றைய சூழ்நிலை.

அமித்ஷாவின் வருகை தமிழக பா.ஜ.க.விற்கு ஹார்லிக்ஸ் கொடுத்திருக்கிறது. ஆனால் அதுவே ஆட்சி அமைக்கும் பலமாக மாறுமா என்பது கேள்விக்குறிதான். அதற்கு தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. ஆகிய இரு கட்சிகளுக்கும் வாக்காளர்கள் பா.ஜ.க. பக்கம் வர வேண்டும். அமித்ஷாவின் பேச்சில் அப்படியொரு யுக்தி இருப்பதாகப் புலப்படவில்லை என்பதுதான் சமீபத்தைய அமித்ஷா விஸிட்டின் முக்கிய அம்சம்! “அ.தி.மு.க.வை விமர்சிக்காத” பா.ஜ.க. வின் போக்கு ராஜ்ய சபையில் தங்களுக்கு என்று பலம் வரும் வரை இருக்குமா அல்லது அதன் பிறகும் தொடருமா என்பதை வைத்தே அக்கட்சியின் “மாற்று அரசியல்” முழக்கம் மக்களின் மனதை மயக்குமா அல்லது பொய்க்குமா என்பது தெரிய வரும்.

-எம்.காசிநாதன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலை செய்வதற்கு காத்திருக்கின்றனர்!

## ஹிருணிகா அச்சம்

(கொழும்பு)

**தன்னைக் கொலை செய்ய காத்திருப்பதாக மேல் மாகாணசபை உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர அச்சம் வெளியிட்டுள்ள அதே வேளை தனது தந்தையின் உடலுக்குள் 43 துப்பாக்கி தோட்டாக்கள் துளைக்கப்பட்டிருந்தன எனவும் போதைப் பொருள் வர்த்தகர்கள் இன்று நாட்டில் சுதந்திரமாக உலாவித் திரிகின்றனர் என்றும் எதிரிகள் தன் மீது அசிட் வீசவும் கொலை செய்யவும் காத்திருக்கின்றார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், எனது தந்தையின் மரணம் தொடர்பில் நியாயம் கோரி நிற்பதால் எனக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன.

தந்தையின் உடல் தீயில் சங்கமித்த தினத்தில் ஜனாதிபதி எனக்கு தொலைபேசி மூலம் நாட்டில் கிளர்ச்சி ஏற்படும் வகையில் நடந்து கொள்ள வேண்டாம் என கோருகின்றார். நீர் ஓர் பெண் பிள்ளை தானே என கேட்டார்.

தந்தையின் கொலை குறித்த வழக்கு விசாரணைக்கு செல்லும் போது அம்மாவிற்கு தொலைபேசி அழைப்பினை ஏற்படுத்தி, என்னை வழக்கு விசாரணைக்கு செல்ல வேண்டாம் என ஜனாதிபதி அறிவுறுத்தினார்.



எனது தந்தையின் மரணம் தொடர்பில் நியாயம் கிடைக்க வேண்டும் என்பதே எனது கோரிக்கையாகும்.

ஜனாதிபதியின் மகனுக்கு ஒரு நீதியும், பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் மகளுக்கு ஒரு நீதியும், கிராமத்தில் உள்ள பெற்றோரின் பிள்ளைகளுக்கு ஒரு நீதியும் இருக்க முடியாது.

அதற்காகவே நாம் நாட்டில் மைத்திரி ஆட்சி நிறுவப்பட வேண்டுமென கோருகின்றோம் என ஹிருணிகா பிரேமச்சந்திர நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-5)



# இரகசியப் பேச்சு யாருடனுமில்லை

## ஜே.வி.பி.விளக்கம்

ஜே.வி.பி. கட்சி யாருடனும் இரகசிய பேச்சுவார்த்தை நடத்தியதில்லை என கட்சியின் மேல் மாகாணசபை உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவுடன் இரகசிய பேச்சுவார்த்தை நடத்தப்படுவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை.

அரசியல் ரீதியான முக்கியத்துவம் இருந்தால், நாம் எந்தத் தரப்புடனும் பேச்சுவார்த்தை நடத்துவோம். எனினும் இரகசியமாக அல்ல.பகிரங்கமான முறையில் மக்களுக்கு தெரியப்படுத்தியே பேச்சுவார்த்தை நடத்துவோம்.எந்தத் தரப்பினருடனும் இரகசியமான பேச்சுவார்த்தைகள் நடத்தியது கிடையாது என கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி.சந்திரிகாவுடன் இரகசிய பேச்சுவார்த்தை நடத்தப்படுகின்றதா? என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது லால்காந்த இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

# எந்தவொரு அரசியல் கட்சிக்கும் ஆதரவளிக்க போவதில்லையாம்

## சரத் என் சில்வா தெரிவிப்பு



(கொழும்பு)

எந்தவொரு அரசியல் கட்சிக்கும் ஆதரவளிக்கப் போவதில்லை என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார். கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். ஜனாதிபதித் தேர்தல் பிரசாரப் பொறிமுறையில் பங்களிப்பு வழங்கப் போவதில்லை. ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் உச்ச நீதிமன்றின் சட்ட விளக்கம் அளிக்கப்பட முன்னதாக, ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுவது சட்டவிரோதமானது என சுயாதீனமாக கருத்து வெளியிட்டிருந்தேன்.

எனினும், நீதிமன்றின் சட்ட விளக்கத்தைத் தாண்டி கருத்து வெளியிட அவகாசம் கிடையாது. அரசியல் அமைப்பு தொடர்பிலான பிரச்சினை ஒன்றையே நான் எழுப்பியிருந்தேன்.

உச்ச நீதிமன்றம் தீர்மானித்ததன் பின்னர் அது குறித்து பேச முடியாது. கட்சி அரசியலில் ஈடுபடும் உத்தேசம் கிடையாது என சரத் என் சில்வா மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# மகிந்தவிற்கு ஆதரவளிக்கும் தீர்மானத்தில் மாற்றமில்லை


## பலசேனா உறுதி

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஆளும் கட்சி வேட்பாளர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவளிக்கும் தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் கிடையாது என பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

தாய் நாட்டுக்காக நிபந்தனையற்ற அடிப்படையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவளிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் கிடையாது. நாடு எதிர்நோக்கியுள்ள அனர்த்தத்திலிருந்து பாதுகாக்கும் நோக்கில் இவ்வாறு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் எவ்வித அழைப்பினையும் விடுக்காத போதிலும் பொறுப்பு வாய்ந்த அமைப்பு என்ற ரீதியில் ஜனாதிபதிக்கு



ஆதரவளிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

எமது அமைப்பு ஓர் அரசியல் அமைப்பு அல்ல, மாறாக எமது அமைப்பு ஓர் தேசிய அமைப்பாகும்.

குரோத அரசியல்வாதிகளின் அசுத்தமான கூட்டமைப்பு தோற்கடிக்கப்பட வேண்டுமென கல[illegible] அத்தே [illegible] தேரர் சிங்களப் [illegible] நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.(இ-5)

# வாரம் ஒரு தகவல்

## மருத்துவ சோதிடம்

"ஐயா... சோதிடர் வீடு இது தானே!"

"ஆமாம். நான் தான் சோதிடர்... உங்களுக்கு என்ன வேண்டும்?"

"ஜாதகம் பார்க்க வேண்டும்."

"உட்காருங்க... உங்களுடைய ஜாதகக் குறிப்பு கொண்டு வந்திருக்கிறீர்களா?"

"இந்தாங்க!"

"இந்தக் காலத்தில் பலர் சோதிடத்தை நம்புவதில்லை. ஆனால் அந்தக் காலத்தில் சித்தர்களுக்கே இதில் நம்பிக்கை இருந்தது. சித்த மருத்துவத்தில் சத்திர விதி விலக்கு என்று ஒன்று உண்டு. அந்த விதிப்படி அமாவாசைக்குப் பின்னர் குறிப்பிட்ட திகதிகளில் வரும் நாட்களில் மனித உடம்பின் சில இடங்களில் அறுவைச் சிகிச்சை செய்யக்கூடாது"

"சமீபத்தில் கூட மருத்துவ சோதிட இயல் சம்பந்தமாக ஒரு சர்வதேச மாநாடு நடந்தது. அங்கே ஓர் அறுவைச் சிகிச்சை நிபுணர் பௌர்ணமி தினங்களில் அறுவைச் சிகிச்சை செய்யும் போது நோயாளிகளுக்கு வழக்கத்தை விட அதிகளவு இரத்தப் பெருக்கு இருப்பதாகவும் அதற்கு என்ன காரணமென்று சரியாகத் தெரியவில்லை என்றும் கூறியிருக்கிறார். சத்திர சிகிச்சைக்கு முன்னர் சோதிடம் பார்ப்பது நல்லது என்றும் கூறியிருக்கிறார்."

"அப்படியா"

"ஆமாம் அதனால் தான் நான் இப்பொழுது உங்களைத் தேடி வந்திருக்கிறேன். எதிர்வரும் சனிக்கிழமை எனக்கு ஒரு சத்திர சிகிச்சை. அது நல்லபடியாக முடியுமா?

"கவலையே படாதீங்க... உங்களுக்கு ஒன்றும் ஆகாது..."

எனக்கு ஒன்றும் ஆகாது என்று தெரியும்"

"உங்களுக்குத்தானே சத்திரசிகிச்சை"

"இல்லை"

"அப்படியானால்... நீங்க..."

"அந்த சத்திரசிகிச்சை செய்யப் போற டாக்டர்"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி மாத இராசி பலன்கள்

# 16.12.2014-14.01.2015



**தொழில் வளர்ச்சி கூடும் நேரம்! நிம்மதியாக வாழ நிதானம் தேவை என்று சொல்லும் கும்ப ராசி அன்பர்களே!**

மார்கழி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத்தொடக்க நாளிலேயே சனி 10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். 10 ஆம் இடம் கர்ம ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானம் என்று அழைக்கப்படும் இடம் என்பதால் தொழில் வளர்ச்சி பெருகும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும்.

அதே நேரத்தில் பெற்றோரின் உடல்நலத்தில் திடீர், திடீரென பாதிப்புகளை உருவாக்கி மருத்துவச் செலவையும் மனக்கவலையையும் கொடுக்கும்.

குடும்பப் பெரியவர்களின் உடல் நலக்குறைவு ஏற்படும் போது ஆரம்பத்திலேயே நோய்க்கான அறிகுறிகள் தென்படும் போதே மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவதுதான் நல்லது.

இல்லையேல் நோயை முற்ற விட்டுவிட்டால் குணமாவதில் தாமதம் ஏற்படலாம். அதே நேரம் தொழில் முன்னேற்றத்தில் இதுவரை இருந்த தடைகள் அகலும். எதிர்பாராதவிதத்தில் செல்வந்தர்களின் ஒத்துழை ப்பு கிடைத்து தொழில் வளத்தைப் பெருக்கிக்கொள்வீர்கள்.

ஒன்பதாமிடத்தில் சனி சஞ்சரிக்கும்போது விட்டுவிட்டு தொழில் நடைபெற்றிருக்கலாம். சேமிப்பு கரைந்த பின்னரே மீண்டும பணம் கைக்கு வந்து சேர்ந்திருக்கும். ஆனால் இனி அந்த நிலை மாறும். தாராளமாகச் செலவிட ஏராளமாக பணப்புழக்கம் ஏற்படும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் இனி சுயதொழில் செய்யலாமா என்று சிந்திப்பர். ஒரு சிலர் பணி ஓய்வு பெற்று பாதியிலேயே

## தொழில் வளர்ச்சி பெருகும் துணிவு, தன்னம்பிக்கை கூடும்

தொழில் தொடங்க முன்வருவர்.

செய்யும் தொழிலைத் தெய்வமாகக் கருதும் நீங்கள் இனி சுறுசுறுப்பாக பணியாற்றப் போகிறீர்கள். உங்கள் ராசிநாதன் 10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போவதால், நண்பர்கள் ஊக்கத்தால் தைரியமாக தொழில் தொடங்க முன் வருவீர்கள். அரசு வழி சலுகைகளும் அதற்கு ஏற்ற விதத்தில் உங்களுக்கு கிடைக்கும்.

குருவின் பார்வை விருச்சிக

சனியின் மீது டிசம்பர் 22 ஆம் திகதி முதல் பதியப்போவதால், எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறும்.

ஜீவன ஸ்தானம் தன்னில்
செல்கின்ற சனியை நாளும்
கோவிலில் சென்று பார்த்து
கும்பிட்டு மகிழ்ந்திருந்தால்




ஆவன நமக்குச் செய்வார்
அனைத்திலும் வெற்றி தந்தே
பூமகள் அருளால் நாளும்
பொருள் குவிய வழி வகுப்பார்!

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது. எனவே, ஆலயம் சென்று சனியை வழிபட்டால் அன்றாட வாழ்க்கை நன்றாக அமையும்.

**புத-சுக்ர பெயர்ச்சிக்காலம்!**

டிசம்பர் 28 ஆம் திகதி புதனும, 30 ஆம் திகதி சுக்ரனும் மகரத்தில் சஞ்சரிக்கப் போகிறார்கள். விரய ஸ்தானத்தில் சுகாதிபதி சஞ்சரிக்கும் பொழுது, விரயங்கள் கொஞ்சம் கூடுதலாக இருக்கும். குறிப்பாக வசதி, வாய்ப்புகளை முனனிட்டு வீட்டிற்கு தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

பூர்வீக சொத்துக்களில் பாகப் பிரிவினைகள் செய்து வந்த இடத்தில், புதிய இல்லம் கட்டி குடியேற வேண்டுமென்ற ஆசை நிறைவேறும். வாடகை வீட்டில் குடியிருந்து காலம் தள்ளியது போதும். இனி வீடு வாங்கிக் குடியேற வேண்டுமெனற எண்ணத்தை வளர்த்துக் கொணடவர்களுக்கு, இது ஒரு உன்னதமான நேரமாகும். குடும்ப உறுப்பினர்களில் செவ்வாய் பலம் பெற்றவர்களின் பெயரில் சொத்துக்கள் வாங்குவது நல்லது.

**கும்ப, செவ்வாயின் சஞ்சாரம்!**

ஜனவரி 1 ஆம் திகதி கும்ப ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். 3, 10 இற்கு அதிபதி ராசியில் சஞ்சரிக்கும் பொழுது முன்னேற்றம் அதிகரிக்கும். முக்கியப் புள்ளிகளைச் சந்தித்து முடிவெடுப்பீர்கள் தக்க விதத்தில் தொழில் வளர்ச்சி மேலோங்கும். தடையின்றி வருமானம் வந்து கொண்டேயிருக்கும்.

இம்மாதம் அருகிலிருக்கும் சிவாலயத்திற்குச் சென்று சனியை வழிபடுவது நல்லது. சனியின் சன்னிதியில் எள்தீபம் ஏற்றி வழிபட்டால் விருப்பங்கள் நிறைவேறும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் உங்களுக்கு எண்ணற்ற மாற்றங்கள் வந்துசேரும் மாதமாக அமையப் போகிறது. வேலை தேடும் பெண்களுக்கு வேலை கிடைக்கும். குடும்பச் சுமை குறைய கூட இருப்பவர்கள் ஒத்துழைப்புச் செய்வர். அடிப்படை வசதிகள் பெருகும். ஆபரண சேர்க்கை உண்டு.

கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலபபடும். உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவார்கள். கரைந்த சேமிப்பை ஈடுகட்டுவீர்கள்.

சனிக் கிழமை தோறும் பெருமாள், லட்சுமி, அனுமன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். மன அமைதி பெருகும். ஆனந்தமான வாழ்க்கை அமையும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**அஷ்டமத்துச் சனி விலகியதால் அடிப்படை வசதிகள் பெருகும்! வரவேற்பால் வருபவர்களைத திணறடிக்கும் மீன இராசி அன்பர்களே!**

மார்கழி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, அஷ்டமத்துச் சனி விலகப் போவதால், இனி ஆனந்தம் தவழும் வீடாக உங்கள் வீடு மாறப் போகின்றது. கஷ்டங்களும், கவலைகளும் விலகப் போகின்றது. நஷ்டம் வந்த தொழிலில் இனி லாபம் கிடைக்கும். மந்தன் சனியின் ஆதிக்கத்தால் உஙகளை விட்டு விலகியவர்கள் எல்லாம் இனி வந்திணைவார்கள்.

இப்பொழுது பெயர்ச்சியாகும் சனியால் இனிய பலன் கிடைக்கும் ராசிகளில் முதல் ராசியாக இருப்பது உங்கள் ராசிதான். காரணம் அஷ்டமத்துச் சனி ஆதிக்கத்தில் அகப்பட்டு தத்தளித்த உங்களுக்கு, இனி அதிர்ஷ்ட வாய்ப்புகளை சனிபகவான் அள்ளித் தரப்போகிறார். விலகுவதற்கு முன்னதாகவே நீங்கள் விரும்பி வழிபட வேண்டிய தெய்வங்கள் மூன்று. ஆனைமுகப் பெருமான், சனிபகவான், பெருமாள் ஆகியவை ஆகும். இவ்வாறு செய்வதால் சீரான வாழ்க்கை அமையும், செல்வநிலை உயரும்.

இப்பொழுது பெயர்ச்சியாகும் சனி மீது, டிசம்பர் 22 ஆம் திகதி கடகத்திற்கு வக்ரமாகச் செல்லும் குருவின் பார்வை பதிவதால், வாய்ப்புகள் வாயிற்கதவைத் தட்டும். வருமானம் போதுமானதாக இருக்கும். தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும்.

ஒன்பதில் வந்த ஈசன்
உன்னத வாழ்வைத் தந்து
பொன்பொருள் குவிய வைக்க
புகழ்மிக்க வாழ்வு காண

அன்புடன் சனியைக் கண்டும்
அனுமனை வழிபட்டாலும்
வன்பகை மாறும்! நல்ல
வசந்தமும் வந்து சேரும்!

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது. எனவே, பகை பாசம் கூட சனிபகவான் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**புத-சுக்ர பெயர்ச்சிக் காலம்!**

டிசம்பர் 28 ஆம் திகதி [illegible]னும், 30 ஆம் திககி சுக்ரனு[illegible]மகரத்தில் சஞ்சரிக்கப் போகிறார்கள்.




## இம்மாதத்திலிருந்து கஷ்டங்களும் கவலைகளும் விலகப்போகிறது

எனவே, புத-சுக்ர யோகம் செயற்[illegible] முன்னேற்றம் கருதிய புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். அருளாளர்கள் தொடர்பால் ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். கடல் தாண்டிச் செல்லும் வாய்ப்பு உருவாகும். பிரச்சினைக்குரிய குழந்தைகளை வழிநடத்திச் செல்ல புதிய முடிவெடுப்பீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊர்மாற்றச் சிந்தனை மேலோங்கும். நினைத்த இடத்திற்கே மாறுதல் கிடைத்து நிம்மதி காண்பார்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். தொலைபேசி வழி தகவல் தொழில் மாற்றச் சிந்தனைக்கு கைகொடுக்கும். மேலதிகாரிகள் நெருங்கி வந்து நேசக்கரம் கொடுப்பர்.

உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு போன்றவைகள தானாகவே வந்து சேரலாம். தடைகள் அகலும் இந்த நேரத்தில் தன்னிகரிலலா வாழ்க்கை அமைய வைகுண்ட ஏகாதசியனறு விஷ்ணுவை வழிபடுவது நல்லது.

**கும்ப செவ்வாயின் சஞ்சாரம்!**

ஜனவரி 1 ஆம் திகதி கும்ப ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக விரயங்கள் கூடுதலாக இருக்கும். ஒருசிலர் வாங்கிய சொத்தை விற்க நேரிடும்.

சகோதர பாசம் குறையும். உடன்பிறப்புகளை நம்பிச் செய்த ஒரு சில காரியங் களில் தாமதம் ஏற்படும். என்னயிருந்தாலும் இக் காலத்தில் அங்காரக வழிபாட்டின் மூலம் வளர்ச்சியில் ஏற்படும் தளர்ச்சியை அகற்றிக் கொள்ளலாம்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் உங்களுக்கு தொட்ட காரியங்களில் வெற்றி பெறும் மாதமாகும். அஷ்டமத்துச் சனி விலகப் போகிறது. இனி அனைத்து யோகங்களும் படிப்படியாக வந்து சேரப்போகிறது. வெற்றிக்குரிய தகவல்கள் வரும்.

இந்த மாதத்தில் சனிப்பெயர்ச்சியின் போது சனிபகவானுக்குரிய சிறப்பு ஸ்தலங்களுக்கு யோகபலம் பெற்ற நாளில் சென்று வழிபட்டு வாருங்கள். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். இட மாற்றங்கள், வீடு மாற்றங்கள் வந்து சேரும். கணவன்-மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# எமது போக்குவரத்துக் கொள்கை

## தேசத்தின் வளர்ச்சிக்கான உத்வேகத்தை எளிதாக்கும் ஒரு போக்குவரத்து வலையமைப்பு

**நாம் இதுவரை செய்துள்ளவை**

- 2011 தொடக்கம் இன்று வரை கிராமப்புரங்களை நகரத்துடன் இணைக்கும் வகையில் "மகநெகும" திட்டம் ஊடாக 3370 கி.மீ. அளவான கிராமப்புர வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.
- 'ரன்தோர' திட்டத்தின் கீழ் அதிவேக பாதைகளும், நெடுஞ்சாலைகளும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. தெற்கு அதிவேகப்பாதை, கட்டுநாயக்க அதிவேகப்பாதை, மற்றும் வெளிச்சுற்றுப்புற அதிவேகப்பாதை என்பன கொழும்பைச் சூழவுள்ள சகல பிரதான பாதைகளையும் இணைக்கின்றன.
- புகையிரத மற்றும் வீதி போக்குவரத்து என்பன உட்கட்டமைப்புடன் இணைந்து தரமுயர்த்தப்பட்டுள்ளதுடன், 2013ம் ஆண்டு 281 புதிய பஸ்கள், 50 ஆடம்பர பஸ்கள் மற்றும் 03 புதிய புகையிரத என்ஜின்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.
- பயங்கரவாதிகளால் அழிக்கப்பட்ட புகையிரத பாதைகள் மீளமைக்கப்பட்டு இன்று யாழ்தேவி புகையிரதம் யாழ்ப்பாணம் வரை பயணிக்க ஆரம்பித்துள்ளது.

**நாம் இனி செய்ய உத்தேசித்துள்ளவை**

பொதுப் போக்குவரத்து பற்றி நான் எப்பொழுதும் பொதுமகனாகவே சிந்திக்கிறேன். பயங்கரவாதிகளால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டு, தண்டவாளங்கள் கழற்றி செல்லப்பட்ட யாழ்தேவி புகையிரதம் பெருமையுடன் தனது இரண்டாவது பயணத்தை தற்போது ஆரம்பித்துள்ளது. அதில் ஏறி யாழ்ப்பாணம் நோக்கி செல்லும் போது பாதையின் இருபக்கமும் காணப்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்களின் மனங்களில் தோன்றிய மகிழ்ச்சியை அவர்களின் முகங்களில் மலர்ந்த புன்னகையில் நான் அறிந்து கொண்டேன். ஆடம்பர வாகனத்தில் செல்லும் பயணியும், பொது போக்குவரத்தில் செல்லும் பயணியும் வசதியாக செல்லக்கூடிய போக்குவரத்துச் சேவையை நான் அமைப்பேன்.

• வாகன விபத்து குறைந்த தேசம் • பாதைகளில் இடையூறுகளைத் தவிர்ப்போம்

*மஹிந்த சிந்தனை - உலகை வெல்லும் வழி*

## பாதுகாப்பான தேசம்
## வளமான எதிர்காலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரபின் வசீகரமாய் த.ஜெயசீலனின் புயல் மழைக்கு பின்னான பொழுது




மரபு இலக்கிய வடிவங்கள் ஊடாக தமது அனுபவத்தை பிறரில் சுவற வைப்பதற்கு இயலாத தருணங்களிலும், தேய்வியம்பல் என ஒதுக்கும் சந்தர்ப்பங்களிலும் மாற்று இலக்கிய வடிவங்களைக் கட்டமைத்தல் இலக்கியஉலகின்நடைமுறையாகும். பக்தியுணர்வை தொற்ற வைக்க "வெண்பா" ஏற்றதன்று என்னும் நிராகரிப்பிலேயே காரைக்கால் அம்மையார் சங்கமருவிய கால இறுதியில் விருத்தம், கட்டளைக் கலித்துறை என்னும் நவீன வடிவங்களைக் கட்டமைத்தார். இத்தகைய செல்நெறியின் நீட்சியாகவே செய்யுள் அமைப்பினைத் தகர்த்த கவிதை வடிவங்களும் உருவாகின. எனவே நவீன வடிவங்களில்வெளிப்படுவன அனைத்துமே அற்புதமானவை என்றோ, மரபு இலக்கிய வடிவங்களின் ஊடான அனுபவ வெளிப்படுத்தல்கள் அற்பமானவைஎன்றோகருதுவது படு அபத்தமானதாகும். மரபிலக்கிய வகைமையும், தற்புதுமையான படைப்பாக்கமும் அனைத்து மொழிகளிலும் உரம் சேர்த்து வருவதை பரந்த வாசிப்புப் பழக்கம் உள்ளோர் நன்கறிவா.

கனவுகளின் எல்லை (2001), கைகளுக்குள் சிக்காத காற்று (2004), எழு தாத ஒரு கவிதை (2013) என்னும மூன்று கவிதைத் தொகுதிகளையும் தொடர்ந்து நான்காவது தொகுதியாக த.ஜெயசீலனின் 'புயல் மழைக்குப் பின்னான பொழுது' வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சுயத்தின் தேடல், இயற்கை மீதான ஈர்ப்பு, போரின் பின்னான அவலம், பிடிமானமற்ற காலத்தின் இயலாமை, மேலாண்மை குறித்த எள்ளல் போன்ற பல்வேறுபட்ட பாடுபொருளினை தன்னகத்தே கொண்ட 59 கவிதைகளை உள்ளடக்கியுள்ளது. வெளிப்பாட்டு உததியில் முன்னைய தொகுதிகளின் நீட்சியாகவே அமைந்துள்ளமையும் அவதானத்திற்குரியது.

அலாதியான சொற்களின் உன்னத ஒழுங்குபடுத்தலே கவிதையாக உருப்பெறுகின்றது. சொற்களின் இடையே புதைந்துள்ள மௌனத்தின் பேருருவமே கவித்துவத்தின் தேறிய பெறுமானமெனக் கொள்ளப்படுகின்றது.

**"போர் சிதைத்து தின்று... மீந்த வெளிகளிலும் எஞ்சிச் சிதறுண்டு போய் எங்கும் சூனியமாய்க் கிடக்கும் சுவடிழந்த நிலம் மீதும் எத்தனையோ பேரின் கனவுகள்"**

எனனும்வரிகளில்த.ஜெயசீலனின் தாடனமான சொல் அடுக்குகளைக்காண முடிகிறது.

மேலும், செய்தியாக இல்லாமல் அனுபவத் தொற்றலாக உருமாறும்போதே கவிதை உச்சம் பெறுகின்றது என்பதற்கு இவ்வரிகள் தக்க சான்றுகளாக அமைகின்றன. த.ஜெயசீலனின் வார்த்தை வங்கியிலுள்ள பதங்கள் நேர்த்தியான இயங்கு திறனோடு செயலாற்றுவதையும் பல கவிதைகளில் அவதானிக்க முடிகின்றது.

**"நீரூற்றிக் காடாற்றி மிச்சசொச்சம் எல்லாம் வெட்டிப் புதைத்தகற்றி தகித்துக் கிடக்கின்ற தரையினிலே நீரூற்றி நம்பிக்கை நாற்றுக்களை நட்டுக் கொண்டிருக்கின்றோம்"**

கவிஞர் வெளிப்படுத்தும் படிமங்களும், உவமைகளும் பொதுசனங்களின் அனுபவத்தை விட்டுப் புறந்தள்ளிப் போகாத அதே நேரம் எளிமை, புதுமை, தரம் என்னும் மூன்றும் கலந்தமைந்த முறையில அமைந்திருப்பதும் நோககத்தக்கது.

**"வெட்டிவைக்கப்பட்ட சர்க்கரைப் பூசனியின் துண்டொன்றாய் மஞ்சள் நிலவு" "கடல்பொங்கிக் கோபமாய்க் கறுவித் துடித்திருக்கு படகெல்லாம் கரையில் படுத்துளன"**

போன்றன சிறந்த எடுத்துக் காட்டுக்களாகும். சமூக, அரசியல் நிலைப்பாடு குறித்த ஆதங்கத்தை, முகிழ்க்கும் எள்ளலை, துரும்பைக் கூட மாற்ற முடியவில்லையே என்னும் இயலாமையை பல கவிதைகளில் பதிவு செய்துள்ளார். தூய்மையின் பேரால் நிகழ்ந்த கொடூரத்தின் பின்னான பொழுதையே கவிதைத் தலைப்பும் சுட்டி நிற்கிறது. அரசியல் அநாகரிகத்தைப் பின்வருமாறு அங்கதப்படுத்துகின்றார்.

**"புனிதம் எரியாமல் புன்னகைத்துக் கிடக்கிறது மனிதம் தான் சாம்பலிடை எலும்புகளாய் எஞ்சிற்று"**

வரலாற்றுணர்வற்ற தமிழர்களின் மீதான கோபத்தையும் கொட்டித்தீர்த்து விடுகின்றார். "தன்னை அறிதல்" என்பதை மரபின் வழி நின்று சற்றே உறைக்குமாறு வலியுறுத்த முனைந்துள்ளார்.

**"இந்நிலத்தின் தொன்மையை பரம்பரைத் தொடர்ச்சியைக் காத்தருளும் தன்மை பெருமையைத் தரிசியாமல் எல்லாமும் நன்றாய் அறிந்தவன் நீ என்கின்றாய்! உனைப் பார்த்து உன் காலடியின் மண் நகைக்கும்"**

கவிஞர் முருகையனின் நீட்சியாக த.ஜெயசீலன் நோக்கப்படுவதுண்டு. அந்த வகையில் கவிஞர் முருகையன் எழுதிய "முன்னோக்கு" கவிதையின் சமனான எதிரான மறுதாக்க அருட்டுணர்வை "வந்த பாதை" கவிதை உள்வாங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காட்டாறு. ஜென்மம், குளுமை, சுவறல், அருமை, சிலிர்ப்பு போன்ற சொற்கள் மீது கட்டுக்கடங்காத காதல் த.ஜெயசீலனுக்கு உண்டு. அவரது நான்கு தொகுதிகளிலும் இவற்றைத் தரிசிக்க முடிகிறது. "நடந்தாய் வாழி", "வான்புகழ்" ,"எது நடந்ததோ அது நன்றாக" போன்ற கவிதைத் தலைப்புக்களிலும் மரபின் தொடர்ச்சியை இனங்காணலாம். அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி என்பனவும் பல கவிதைகளில் அற்புதமாகப் பதியப்போடப்பட்டுள்ளன. ஆரம்பச் சொற்களோடு தொடர்ந்து பயணித்துக் கவிதையை நிறைவு செய்யும் பாணியையும் ஆங்காங்கே கடைப்பிடிக்கின்றார். "கேள்வி வளையங்கள்" "நெருப்பில் முகிழும் நீரின் ஓர்துளி' என்று நவீன மொழிக் கையாட்சியும் இயல்பாய் அமைந்துள்ளது.

இலக்கண நெறிகளைச் சந்தத்திற்காகத் தகர்க்கும் கவி மரபையும் கைக்கொள்கிறார். "ஒவ்வொரு திசைகளுக்கும்" என ஒருமை - பன்மை விலக்கியே பயன்படுத்துகிறார். கணனித் தட்டச்சின் தவறால் எகர ழகர பேதங்களும் இடம் பெற்றுள்ளன. (உலகாழ்வோர் பக்கம்-20) (ஊழைகழ் போல் பக்கம்-16) "மௌனித்த ஆயுதங்கள் ஊமையாச்சு பேசவில்லை" பக்கம் -15 என்னும் வரிகளில் வேறுபட்ட உணர்வுகளை தராத பட்சத்தில் ஒரே அர்த்தத்தை வெளிப்படுத்தும் வார்த்தைகளைத் தவிர்த்திருக்கலாம். நுணுக்கமாக நோக்கும் போது வெளிப்படும் இத்தகைய நுண்தவறுகளை தவிர்த்து விட்டு நோக்கின், ஈழத்துக்கவிதை உலகிற்கு "புயல் மழைக்குப் பின்னான பொழுது" அர்த்தபுஷ்டியான வருகை[illegible]த் தென்படுகின்றது. மரபுக் கடலின் மரியானா ஆழியே! மென்மேலும் அற்புதமான கவிதைகள் புனைந்து வாழி!

**இ.சு.முரளீதரன்**


## தொழில் வாய்ப்புக்கள்

புதிய வருடத்தை முன்னிட்டு (O/L) எழுதியவர்களுக்கு விசேட வேலை வாய்ப்புக்கள் மற்றும் சகல துறை ஆண்/பெண் இருபாலாருக்கும் உடனடியான வேலைவாய்ப்புக்கள். வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மட்டக்களப்பு, மன்னார், திருகோணமலை போன்ற பிரதேசங்களில் உள்ள 18-50 வயது இருபாலாருக்கும் கொழும்பு,கொழும்பை அண்மித்த பகுதிகளில் குறைந்த விலையில் உணவு, தங்குமிட வசதிகள் ஒழுங்கு செய்து தரப்படும். ஜேம்/டொபி/பிஸ்கட்/கோடியல்/ஐஸ்கிறீம்/ யோகெட்/ கீல்ஸ்/ சோயாமீட்/பப்படம்/டயர்/ அலுமினியம் இன்னும் பல உற்பத்தி நிறுவனங்களில் உற்பத்தி லேபல், பொதியிடல் Delivery பிரிவுக்கு அவசியம். சம்பளம் 38000/= (தொழில் அடிப்படையில்) நண்பர்கள், குழுக்கள், தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில் மற்றும் கல்வி கற்ற, அற்ற அனைவரும் தமிழில் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புக்கு: 077 843 0179 சி-9624

## உடனடி வேலைவாய்ப்பு

காலம் காலமாக ஓயாது வறுமையில் வாடுகின்றீர்களா? வறுமையை நிவர்த்தி செய்ய உள்நாட்டு வேலைவாய்ப்பு. வருகை தரும் நாளிலே வேலையுடன் வாழ்க்கைக்குப் போதுமான மாத சம்பளத்துடன் நிரந்தர வேலைவாய்ப்பு. சம்பளம் 20,000/=, 25,000/=, 42,000/= ( தொழில் தன்மையின் அடிப்படையில் கொழும்பு, கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகள் (ஜேம்/ டொபி/ கோடியல்/பால்மா/கிளவுஸ்...) தனியார் துறைமுகம், விமான நிலையம், வாகன சாரதிகள், இலக்ரீசன் மற்றும் மேசன், கையுதவியாளர் உட்பட பல வேலை வாய்ப்பு வெற்றிடங்கள். 17-50 வயது ஆண்,பெண் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, மதவாச்சி, மட்டக்களப்பு, திருகோணமலை) பிரதேசத்தவர்கள் விரும்பத்தக்கது. நண்பர், குழுக்கள், தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில்

தொடர்புக்கு: Munfeer 077 909 6263 சி-9625


## ஈழத்து சிதம்பர தரிசனம்

ஈழத்து சிதம்பரத்தில் ஆண்டிகேணி ஐயனுடன் உறைகின்றான்
ஆதியொன்றும் இல்லாதான் அந்தமொன்றும் இல்லாதான்
சோதிமய மாயிருப்பான் துலங்கு மறி வாயிருப்பான்
இன்ப துன்ப மறியாதான் எப்பிழையும் புரியாதான்
மன்பதைக்கு நல்லதொரு வழிகாட்டி ஆட்கொள்வான்
காலனையும் தன்காலால் காய்ந்த பெருந்திறலான்
வேலவனை விழிவழியே வியனுலகுக் கருளியவன்
ஈழத்து சிதம்பரத்தில் ஆண்டி கேணி ஐயனுடன் உறைகின்றான்
நீள நினைந்து தொழ நிரந்தர தீர்வு நமக்கருள்வான்

(சி-961) -மதுரகவி. காரை. எம்.பி.அருளானந்தன்-

**இன்று (2014.12.28) ஈழத்து சிதம்பரத்தின் திருவெம்பாவை உற்சவம் 2 ஆம் நாள்)**

# உள்நாட்டு விசாரணையே மிகவும் பொருத்தமானது

## போர்க்குற்றம் குறித்து விக்ரமபாகு



(கொழும்பு)

போர்க்குற்றச் செயல் தொடர்பில் உள்நாட்டு ரீதியான விசாரணை நடத்துவது பொருத்தமானது என புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் அரசாங்கப் பிரதிநிதிகளை ஹேக் நீதிமன்றிற்கு அழைத்து சென்று விசாரணை நடத்த உள்ளதாக அரசாங்கம் குற்றம் சுமத்துகின்றது. பின்னர் இலங்கையில் உள்நாட்டு ரீதியான விசாரணை நடத்தப்பட உள்ளதாக கூறுகின்றது. உள்நாட்டு ரீதியில் போர்க் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவது பொருத்தமானதல்லவா? காலனித்துவ ஆட்சியாளர் உலகிற்கு சென்று உள்நாட்டு பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டிய அவசியமில்லை. போர்ச் சூழலில் போர்க் குற்றச் செயல்கள் இடம்பெற்றிருந்தால் உள்நாட்டு ரீதியில் ஆணைக்குழு அமைத்து விசாரணை செய்வதில் தவறில்லை. சர்வதேச ரீதியில் விசாரணை நடத்த வேண்டிய அவசியமில்லை. போர்க்குற்றச் செயல் தொடர்பிலான குற்றச்சாட்டுக்களுக்கு உள்நாட்டு ரீதியான விசாரணைகளே மிகச் சிறந்த பதிலாக அமையும் என்பதே எனது நிலைப்பாடு என விக்ரமபாகு கருணா ரட்ன தெரிவித்துள்ளார். போர்க் குற்றச் செயல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உள்நாட்டு ரீதியான விசாரணை நடத்தப்படும் என பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன இந்திய ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டமை விக்ரமபாகு கருணாரட்னவிடம் கொழும்பு ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனை மேற்கண்டவாறு தெரிவிததார். (இ-5)

# படையினருக்கும், ஜனாதிபதிக்கும் துரோகமிழைக்க மைத்திரி முயற்சி

## மஹிந்த சமரவீர குற்றச்சாட்டு

(கொழும்பு)

படையினருக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் துரோகம் இழைக்க எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் [illegible] அமைச்சர் மஹிந்த சமரசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

படையினரையும், ஜனாதிபதியும் சர்வதேச யுத்தக் குற்றச் செயல் விசாரணைகளுக்கு உட்படுத்து[illegible] உறுதியளித்தே மைத்திரிபால சர்வதேச ஆதரவினைப் பெற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அகலவத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்தார்.

பதவிப் பிரமாணம் செய்து கொண்டு நூறு நாட்களில் படை வீரர்களுக்கு துரோகம் இழைப்பதே மைத்திரிபாலவின் திட்டமாக அமைந்துள்ளது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்வாறான ஓர் தலைவர் நாட்டுக்கு அவசியமா என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். வெளிநாட்டு ஊடகங்களுக்கு மைத்திரிபால சிறிசேன வாக்குறுதிகளை அளித்துள்ளதாகவும், இணையத்தின் ஊடாக இந்த தகவல்கள் அம்பலபமாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். தேசத்தையும் படை வீரர்களையும் பாது காக்க வேண்டியது முதன்மையானது எனஅவர்மேலுந்தெரிவித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



அரசியல், சினிமா
பொழுதுபோக்கு கேள்விகளை
சுருக்கமாக பெயர், முகவரி
குறிப்பிட்டு அனுப்பி
வையுங்கள்.




வியாசர் பதில்கள்
இல: 3, 2 ஒழுங்கை
பிறவுண் வீதி ,
யாழ்ப்பாணம்.

குறுந்தகவல் (SMS)
021 567 1532

Email
vijasarpathil@gmail.com



## Face Book பார்ப்பவர்கள் பற்றி உங்கள் கருத்தென்ன?

**Hi bro**

அனு, வரணி

**உங்கள் மனைவி உங்களுக்கு தந்த பரிசில் மறக்க முடியாத பரிசு எது?**

என் மனைவி எனக்குக் கிடைத்ததே அற்புத பரிசுதானே. ஒரு பரிசால் எப்படி பரிசுதர முடியும்.

அன்பின் வியாசரே!

ந.மரியநாயகம், கொழும்புத்துறை.

**மது, மாது, சூது இவை மூன்றில் எது மனிதனுக்கு தீது?**

மதுவில் மாதும் இல்லை சூதும் இல்லை. சூதில் மதுவும் இல்லை. மாதுவும் இல்லை. ஆனால் மாதுவில் மது, சூது இரண்டுமே இருக்கிறது. இப்போது சொல்லுங்கள் மனிதனுக்கு எது தீது என்று.

அன்பின் வியாசரே!

கௌரிசன், அல்வாய்.

**Face Book பார்ப்பவர்கள் பற்றி உங்கள் கருத்தென்ன?**

உங்கள் காதலிக்கு மட்டும் Face Book இன் User Name ஐ கொடுத்து விடாதீர்கள். கொடுத்து விட்டால் ஒவ்வொரு Like இற்கும் ஒவ்வொரு Share இற்கும் பதில் சொல்ல வேண்டி வரும் கவனம்.

அன்பின் வியாசரே!

கிருஷா, வரணி

**உங்கள் மனைவி கடையில் ஒவ்வொருநாளும் பூசனிக்காய் வாங்குகிறாரே ஏன்?**

அழகாக பதில் எழுதும் தன் அன்புக் கணவனுக்கு திரிஷ்டி பட்டுவிடாமல் உடைப்பதற்காகத்தான்.




அன்பின் வியா அண்ணா!

பி.வேதிகா, கனகராயன்குளம்.

**நாகரிகம் என்ற பெயரில் ஜன்ஸ், ரீசேட் அணிந்து கலாசாரத்தை சீரழிக்கும் பெண்களை எப்படித் திருத்தலாம்?**

கலாசாரச் சீர்கேடு என்பது வெறுமனே ஜீன்ஸ், ரீசேட்டில் இல்லையம்மா. அதில் மனம் சார்ந்த விடயமும் இருக்கிறது. உண்மையில் ஜீன்ஸ், ரீசேட் போட்ட பெண்கள்தான் கலாசாரத்தை சீரழிக்கின்றார்களா? கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள் புரியும்.

**Hai Viya Sir.**

க.தங்கலீலா, கரவெட்டி.

**சொர்க்கம், நரகம் எல்லாம் இந்த மனிதப்பிறவியில் மட்டுமே. ஆனால் அதை அடுத்த பிறப்பில் என்று யாவரும் கூறுகின்றனரே?**

ஒன்று வாங்கினால் ஒன்று Free என்றதும் நம்மவர்கள் ஆர்வம் காட்டுகிறார்களே. அதேபோல்தான் நன்மை செய்தால் சொர்க்கம் Free என இறைவன் ஒரு கதையை விட்டுவிட்டான் மனிதனை நன்மை செய்விப்பதற்காக!

## உங்கள் மனைவி உங்களுக்கு தந்த பரிசில் மறக்க முடியாத பரிசு எது?

வியாசர் அவர்களே!

க.தில்லையம்பலம், கரவெட்டி

**நாம் எவ்வளவோ நன்மையான செயற்பாடுகளை எதிர்பார்த்த வடமாகாண சபையில் என்ன நடக்குதென்று புரியவில்லை. உங்களுக்கு ஏதும் புரிந்ததா?**

ஒன்று மட்டும் புரிகிறது. ஆங்கிலேயர் சுதந்திரம் வழங்கும் போது இலங்கையை தமிழர் கையில் கொடுத்துச் சென்றிருந்தால் இன்று இலங்கை எப்படி இருக்கும் என்பது தெளிவாகப் புரிந்திருக்கும்.

அன்பின் தோழா!

த.குயிந்தா, கிளிநொச்சி.

**ஏமாற்றம் என்பது அதிகம் ஆண்களிடத்திலா? பெண்களிடத்திலா?**

மனிதனிடத்தில். ஏனென்றால் உலகில் உள்ள அத்தனை உயிரினங்களிலும் தன்னம்பிக்கை குறைந்தவன் மனிதன் மட்டும்தான்.

வியாசரே!

குருபரந்தனம், அல்வாய்.

**பெண்கள் எதைப் பார்த்து LOVE பண்ணுவாங்கள்?**

பெண்கள் எதையும் பார்க்காமல் காதலிப்பதால்தான் நிறைய ஆண்கள் காதலர்களாக இருக்கின்றார்கள்.

தோழா!

சிவரீபன், புன்னாலைக்கட்டுவன்

**அரசியல், சினிமா இவை இரண்டிற்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமையை கூறுவீர்களா?**

இரண்டும் ரொம்பவும் கலராகவே இருக்கும். இரண்டிலும் செலவு அதிகம். வரவு அதை விட அதிகம்.

ன்டைக்கு பஞ்சம் இருக்காது. அங்கே ரசிகர்களுக்கு ரீல் சுற்றப்படும். இங்கே மக்களுக்கு காதில் பூ சுற்றப்படும்... மிகுதியை நேரில் பேசுவோமாடா செல்லம்.

**வாடகைக்கு**

கே.கே.எஸ். வீதியில் விற்பனைக் காட்சியறைக்கு/ வியாபார நிலையத்திற்கு உகந்த கடைத் தொகுதிகள் (மேல் மாடி, கீழ் மாடி- 1200 சதுர அடி/ 600 சதுர அடி) வாடகைக்கு உண்டு.

(சி-9617)

தொடர்புக்கு:- 077 775 9426

**வாழ்க்கையில் வெறுப்பா?**

பிரச்சினை எதுவானாலும்,
எம்முடன் தொலைபேசியில்
அல்லது நேரில் பேசுங்கள்.
இரகசியங்களைப் பேணுவோம்.
காலை 9.00 – பி.ப 1.00
மதச்சார்பற்றது

(C-9609)

**கைகொடுக்கும் நண்பர்கள்**

104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்
021 222 8117, 0779008776

Rashmi Show Kids' Future

**BOOK MART**

**கே. கே. எஸ். வீதி**
**தட்டாதெரு சந்தி - மேல் மாடி**

வாடிக்கையாளரின் நன்மைக்காக
வாரத்தில்
7 நாட்களும் காலை 8.00 மணி முதல் மாலை 8.30 மணிவரை
திறந்துள்ளது.


பண்டிகைக்கால விசேட விலைக்கழிவுகளுடன் அப்பியாசக் கொப்பிகள் மற்றும் பாடசாலை உபகரணங்கள.

"பிள்ளைகளுக்கான எதிர்காலத்தை காட்டுவோம்"

(சி-9617)

T.P:021 222 5151

# மரண அறிவித்தல்



## இராமலிங்கம் இராசரத்தினம்

தையிட்டிபுலம் தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் நவிண்டில் சக்கலாவத்தையை வதிவிடமாகவும் கொண்ட இராமலிங்கம் இராசரத்தினம் 25.12.2014 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அப்பையா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரி யின் அன்புக் கணவரும், கலாநிதி சிவகுமார் (பொறியியலாளர் U.K), நந்தினி (U.K), உதயகுமார் (ஜேர்மனி), திருக்குமார் (இ.போ.ச - பருத்தித்துறை), சிவாஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், லோகநாதன் (U.K), சசிகலா (U.K), கார்த்திகா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகம், செல்லத்துரை, கிளிப்பிள்ளை, செல்லம்மா, சிவபாக்கியம் மற்றும் சோதிப்பிள்ளை, நல்லபிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பரராஜசிங்கம், தவராஜசிங்கம் (பொது முகாமையாளர் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் - உடுப்பிட்டி), குலசிங்கம், சங்கரப்பிள்ளை, தில்லைநாயகம், பூமலர், இராசமலர் மற்றும் காலஞ்சென்றவர்களான நடராஜா, மயில்வாக னம், சந்திரசேகரம், கந்தையா, வள்ளிப்பிள்ளை, உமாபதி ஆகியோரின் மைத்துனரும், ரூபிதா, வினிதா, சகானா, ஷர்சிகா, கேசிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (28.12.2014) இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் எள்ளம்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நவிண்டில் சக்கலாவத்தை
கரணவாய் வடக்கு, கரவெட்டி. (சி-9614)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# திரை விமர்சனம்

விட்டாலாச்சாரியார் பாணியில், மிஷ்கின் இயக்கியிருக்கும் திகில் இல்லாத ஒரு திகில் படம் தான் "பிசாசு". கார் ஒன்று மோதி, கிழே விழும் நாயகி பிரகாயாவுக்கு தலையில் பலத்த அடிபடுகிறது. அதைப் பார்க்கும் அந்த வீதியில் செல்பவர்கள் அவரை அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்கு செல்கிறார்கள். அதில் நாயகன் நாகாவும் ஒருவர்.

மருத்துவமனைக்கு சென்றதும் நாகாவின் கையை பிடித்துக்கொள்ளும் பிரகாயா, அங்கேயே மரணம் அடைகிறார். இதையடுத்து அவருடைய நினைவாக இருக்கும் நாகாவின் வீட்டில் சில புதிரான விடயங்கள் நடக்கிறது.

அவர் பீர குடிக்க நினைத்தால் அதை யாரோ தடுக்கிறார்கள். அவர் தூங்கும் போது, அவருக்கு போர்வை போர்றி விடுகிறார்கள். இதனால் தனது வீட்டில் என்னவோ இருக்கிறது என்பதை அறியும் நாகா, துணைக்கு தனது நணபரை தன்னுடன் தங்க வைக்க, அப்போது ஒரு உருவம், அவர்களுடன் வந்து படுக்க, அலறியடித்துக்கொண்டு இருவரும் தெருவுக்கு வருகிறார்கள். தனது வீட்டில் பேய் இருப்பதை உறுதிப்படுத்திக்கொண்ட நாகா, அதை விரட்ட மந்திரவாதி ஒருவரை அழைத்து வருகிறார். ஆனால், அந்த மந்திரவாதிக்கு பேய் ஓட்டி விரட்டியடிக்கிறது அந்த பேய்.



என்ன செய்வது என்று அறியாமல் நாகா, தவித்தாலும் நாகாவின் வீட்டில் உள்ள அந்த பேய் நாகாவுக்கு நல்லதே செய்கிறது. தனது வீட்டில் இருக்கும் பேய், தான் காப்பாற்ற நினைத்த பெண் தான் என்பதை நாகா அறிந்துகொள்கிறார். நாகாவின் அம்மா பாத்ரூமில் வழுக்கி விழ, அவரை காப்பாற்ற யாரும் இல்லாத போது, பேய் வந்து காப்பாற்றுகிறது.

ஆனால், அந்த பேய் தான் தனது அம்மாவை இப்படி செய்துவிட்டது என்று தவறாக புரிந்துக்கொள்ளும் நாகா, பேயாக உள்ள அந்த பெண்ணின் அப்பாவான ராதாரவியிடம்,

பேயாக என் வீட்டில் இருக்கும் உனது பெண்ணை அழைத்துக் கொண்டு போ,

என்று சொல்ல, அவரோ நாகா சொல்வதை நம்ப மறுக்கிறார். இதற்கிடையில் மருத்துவமனையில் உள்ள நாகாவின் அம்மா, அந்த பேய் தான் தன்னை காப்பாற்றியது. அது பேய் அல்ல தெய்வம் என்று கூறிய பிறகு, அங்கு தனது மகள் ஆவியாக இருப்பதை நம்பும் ராதாரவி, அழுது புலம்ப அவருக்கு பேய் ஆறுதல் சொல்கிறது.

பேய் தனக்கு நல்லது தான் செய்துள்ளது என்பதை அறிந்து கொள்ளும் நாகா, பேயாக உள்ள பிரகாயாவின் மரணத்திற்கு காரணமானவனை கண்டுபிடிக்க புறப்படுகிறார்.

அப்படி புறப்படும் அவர் விபத்துக்கு காரணமானவனை கண்டுபிடித்தாரா இல்லையா? யார் அந்த நபர் என்பது தான் க்ளைமாக்ஸ். காதலுக்காக பேயாக சுற்றும் மனிதர்களுக்கிடையே, காதலுக்காக ஒரு பேய் சுற்றுவதை கோமாளித்தனமாக மிஷ்கின் சொல்லியிருக்கிறார்.

மிஷ்கின் படத்தின் ஹீரோக்கள் அனைவரும் பேய் அடித்தது போல தான் இருப்பார்கள், இந்த படத்தில் உண்மையிலேயே பேயை பார்த்து பயப்படும் வேடம் என்பதால் ஹீரோவைப் பற்றி சொல்லவா வேண்டும். சில நேரங்களில் ஹீரோவே பேய் போல இருக்கிறார். இருப்பினும் அவருடைய ஹேர் ஸ்டைல் வித்தியாசமாக உள்ளது. ஆளும் நல்லா உயரமாக ஆக்‌ஷன் ஹீரோவைப் போல இருக்கிறார்.

நாயகி பிரகாயாவுக்கு குறைந்த வேலை தான். இருப்பினும், பேயாக நடிக்கும் காட்சிகளில் அந்தரத்தில் அவரைப் பறக்க விடும் போது, கடுமையாக உழைத்திருப்பது தெரிகிறது. ராதாரவி, நாயகனின் அம்மாவாக நடித்தவர்கள் உள்ளிட்ட படத்தில் நடித்த அனைத்து கதாபாத்திரங்களும் தங்களுடைய சிறிய வேலையை சிறப்பாக செய்திருக்கிறார்கள்.

மிஷ்கின் படங்களில் வரும் அதே வயலின் பின்னணி இசை இந்த படத்தையும் நிரப்பியிருக்கிறது. படத்தில் ஒரே ஒரு பாடல் தான், கவிஞர் தமிழச்சி எழுதியுள்ள அந்த பாடல் திரும்ப திரும்ப கேட்க வைக்கிறது. ரவி ராயின், ஒளிப்பதிவில் கமரா நினைத்துப் பார்க்க முடியாத கோணங்களில் பயணித்துள்ளது. ஹீரோ தங்கியிருக்கும் அடுக்குமாடி குடியிருப்பை காட்டும் விதம் முதல் படத்தின் இடம்பெறும் அனைத்துக் காட்சிகளையும் வித்தியாசமான கோணங்களில் படமாக்கியுள்ளார். (அந்த ரயில் பூச்சியை எதற்காக அப்படி க்ளோசப்பில் காண்பிக்கிறார்கள் என்று தான் தெரியவில்லை)

செவ்வாய் கிரகத்தில் மனிதன் சென்று வாழ்ந்தாலும், தன்னுடைய பாணியை மாற்றிக்கொள்ள மாட்டேன் என்று அடம்பிடிக்கும் மிஷ்கின், இந்த படத்திலையும் இசை, நடிகர்களின் நடிப்பு, காட்சிகளை படமாக்கிய விதம் என்று தனது முந்தைய படங்களைப் போன்றே எடுத்துள்ளார்.

ஒரே மாதிரியாக எடுத்தாலும் தான் சொல்ல வந்ததை மிக சுவாரஸ்யமாகவும், இயல்பாகவும் சொல்ல கூடிய இயக்குனர் மிஷ்கின், இந்த படத்தில் அவ்வாறு செய்யவில்லை என்பது தான் ரசிகர்களின் வருத்தம். திகில் படம் என்று சொல்லிக்கொண்டு நகைச்சுவைப் படம் எடுத்துக்கொண்டிருக்கும் தமிழ் சினிமாவின் டிரெண்டை மிஷ்கின், தனது திகில் படத்தின் மூலம் மாற்றப் போகிறார் என்ற எதிர்ப்பார்ப்பில் உள்ளே வரும் ரசிகர்கள், அவர் காட்டும் மேஜிக் சோவைப் பார்த்து குழுறுகிறார்கள்.

பொதுவாக திகில் படம் என்றாலே, பழி வாங்குவதும், அந்த பேயை அழிக்க கடவுள் சக்தி வருவதும் என்ற வழக்கமான டிரெண்டை மாற்ற வேண்டும் என்று நினைத்த மிஷ்கினின் சிந்தனை பாராட்டக்கூடியதாக இருந்தாலும், அவர் அதை சொல்லிய விதம் சொதப்பலாக உள்ளது.

முகமூடி படத்தில் மிஷ்கின் எடுக்க மறந்த சில காட்சிகளை இந்த படத்தில் எடுத்துவிட்டாரோ என்று நினைக்கும் அளவுக்கு பேயை சுப்பர் மேன் ரேஞ்சிக்கு பறக்க விட்டிருக்கிறார்.

பொதுவாக திகில் படத்தைப் பார்த்த பிறகு அதே நினைவாக எதைப் பார்த்தாலும் ஒருவித பயத்தோடு இருக்கும் ரசிகர்கள், இந்த படத்தைப் பார்த்தால் நமது வீட்டிலும் இப்படி ஒரு பிசாசு இருந்தால் நன்றாக இருக்குமே என்று நினைக்கும் அளவுக்கு படம் உள்ளது.

# அம்மாவா நடிக்க ஐந்து கோடியா?



சிம்புதேவன் இயக்கத்தில் விஜய், ஹன்சிகா, ஸ்ருதி ஹாசன், ஸ்ரீதேவி, சுதீப் நடித்து வரும் படம் 'விஜய்58'. படத்திற்கு இசை தேவிஸ்ரீபிரசாத். விஜய் டபுள் ஆக்‌ஷனில் நடித்து வரும் இப்படத்தில் ஹன்சிகா இளவரசியாகவும் நடிக்கிறார். இதற்காக வாள் சண்டை கற்று வருகிறார். இதில் ஹன்சிகாவுக்கு அம்மாவாக நடிக்கிறார் ஸ்ரீதேவி.

ஸ்ரீதேவிக்கு 5 கோடி சம்பளம் என கோலிவுட் வட்டாரத்தில் தகவல்கள் கசிகின்றன. ஒருவேளை இது உண்மையாக இருக்கும் பட்சத்தில் தென்னிந்தியாவில் அதிகம் சம்பளம் வாங்கிய நடிகையாக ஸ்ரீதேவி இருப்பார் என கூறப்படுகிறது.

# கே.பி அவர்களின் இரங்கலுக்கு அஜித் வராததற்கு இது தான் காரணம் !

கே.பி அவர்களின் மறைவு தமிழ் திரையுலகத்திற்கு பெரும் பின்னடைவு தான். அவரின் கடைசி கட்ட இரங்கலுக்கு தமிழ் சினிமாவின் முக்கிய நட்சத்திரங்கள் வந்து தங்கள் வருத்தங்களை பதிவு செய்தனர்.




அஜித் விழாக்களுக்கு தான் வரமாட்டாரே தவிர, இது போன்ற நிகழ்வுகளில் கண்டிப்பாக முதல் ஆளாக இருப்பார். இந்நிலையில் அவர் நேற்று இரங்கலுக்கு வராமல் இருந்தது ரசிகர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது.

ஆனால், அதன் உண்மையான தகவல் என்னவென்றால் ஷாலினி தற்போது கர்ப்பமாக இருக்கிறார். இப்படி இருக்கும் தருவாயில் துக்க

மான எந்த விடயத்திலும் கலந்து கொள்ள கூடாது என்பதால் அஜித் வரவில்லை என்று கூறப்படுகிறது.

# ரஜினியின் அடுத்த படம் ரெடி?



ரஜினியின் லிங்கா ரசிகர்களிடையே கலவையான விமர்சனங்களை சந்தித்தது. இதனால், உடனே அடுத்த படத்தை ஆரம்பிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அந்த வகையில் ரஜினியின் அடுத்த படத்திற்கான கதையை அவருடைய மூத்த மகள் ஐஸ்வர்யா தனுஷ் ரெடி செய்து விட்டதாக கோலிவுட் வட்டாரங்கள் தெரிவிக்கின்றது.

இன்னும் சுப்பர் ஸ்டாரின் வாய்ஸிற்காக தான் ஐஸ்வர்யா வெயிட்டிங்.

இது குறித்து அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வரும் என எதிர்பார்க்கலாம்.

# சோனாக்ஷி காட்டில் அடை மழை



லிங்கா திரைப்படத்தில் சுப்பர் ஸ்டார் ரஜினிக்கு ஜோடியாக நடித்ததன் மூலம் தென்னிந்திய சினிமாவில் கால் பதித்துள்ள சோனாக்ஷி சின்ஹாவுக்கு பாராட்டுகளும் வாய்ப்புகளும் குவிகின்றன.

புதிய தமிழ்ப் திரைப்படங்களில் நடிக்க அவருக்கு பெரிய இயக்குநர்களிடமிருந்து அழைப்புகள் வந்தாலும், நல்ல கதைக்காக அவர் காத்திருப்பதாகக் கூறியுள்ளார்.

லிங்காவில் ராஜா லிங்கேஸ்வரன் பாத்திரத்தில் வரும் ரஜினியின் ஜோடி சோனாக்ஷி. இந்தித் திரைப்படங்களில் தாராள கவர்ச்சியுடன் நடிக்கும் சோனாக்ஷிக்கு இந்தப் திரைப்படத்தில் பழங்கால தமிழ்ப் பெண்களைப் போல, ரவிக்கையில்லாமல் புடைவை கட்டி நடிக்க வேண்டிய வேடம். அவரும் சிறப்பாக நடித்திருந்தார்.

அனுஷ்காவை விட சோனாக்ஷிக்கு ரசிகர்களிடமிருந்து ஏகப்பட்ட பாராட்டுகள் கிடைத்தன. இப்போது அடுத்தடுத்து பெரிய இயக்குநர்களின் திரைப்படங்களில் நடிக்க அவருக்கு வாய்ப்புகள் வந்துள்ளன. தனது அடுத்த திரைப்படமும் லிங்கா மாதிரி முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்பதால், கதைகளைத் தேர்வு செய்வதில் கவனம் செலுத்தி வருகிறார் சோனாக்ஷி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாய்வேடம் போட்டால்
குரைத்துத்தான் ஆக வேண்டும்.
-தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மகளே! சந்திரிகா! கவனம்! அம்மா!

அன்பு மகள் சந்திரிகாவுக்கு ஒரு மூத்த தமிழ் மகன் எழுதும் கடிதம் இது.

சந்திரிகாவுக்கு அன்பு வணக்கம்.

நீண்டகாலமாக கடிதம் எழுத வேண்டும் என நினைத்த போதெல்லாம் இன்று தான் அந்த நினைப்புக் கைகூடியுள்ளது.

எதிரணியின் பொதுவேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவை கொண்டு வந்த முழுப்பெருமையும் தங்களைச் சாரும் என்று அறிந்தேன். ஒரு பெண்ணாக இருந்தும் மகாதுணிச்சலோடு செயற்பட்டிருக்கிறீர்கள். அந்த வகையில் உங்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

1995 ஆம் ஆண்டு உங்கள் ஆட்சியில் யாழ்ப்பாணத்து செம்மணிப் பாதையால் நடந்து சென்றதால் என் முழங்கால் சில்லு இரண்டும் தேய்ந்து விட்டது.

யாழ்ப்பாணத்தாரை ஒட்டுமொத்தமாக தென்மராட்சிக்கும் வடமராட்சிக்கும் வன்னிக்கும் அனுப்பிய பெருமை உங்களையே சாரும்.

அந்த நேரத்தில் அவன் பிள்ளை அனுருத்த ரத்வத்தை யாழ்ப்பாணம் முற்றவெளியில் சிங்கக் கொடி ஏற்றியதாக ஒரு ஞாபகம். இப்போது அனுருத்த ரத்வத்தை என்றால் யார்? என்று சிங்களப் பொடியள் கேட்பதாக அறிந்தேன்.

இதுதான் மகளே! உலக நியதி. இரண்டு தடவைகள் இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருந்த நீங்கள் இனப்பிரச்சினையைத் தீர்த்திருக்கலாம். என்ன செய்வது? எங்கள் பொடியளும் தனிநாட்டு விருப்பில ஒத்துவரவில்லை என்ற உண்மையை ஏற்றுத்தானாக வேண்டும்.

எதுவாயினும் நடக்கப்போகும் ஜனாதிபதித் தேர்தலை நினைக்கும் போதெல்லாம் உங்கள் நினைப்புத்தான். சிலவேளை மைத்திரிபால சிறிசேன தோற்றுப் போனால் பிள்ளையின் நிலைமை என்னவாக இருக்குமோ என்று எண்ணும்போதெல்லாம் நெஞ்சிடிதான்.

தேர்தல் நடப்பதற்கு ஒரு சில தினங்களுக்கு முன்பாக வெளிநாடு ஒன்றுக்கு நீங்கள் சென்றால் நல்லது என்று நினைப்பதுண்டு. அப்படிச் சென்றால் தம்பி மைத்திரி தனித்து விடுவாரே என்ற பயம் இன்னொரு பக்கமாக என் சிந்தை குழம்புகிறது.

"எனது முதல் எதிரி சந்திரிகா குமாரதுங்க" என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியதாக பத்திரிகைச் செய்தியில் படித்தேன். கடவுளே! அண்மையில்தான் சனி மாற்றம் நடந்தது. பிள்ளையின்ர ராசிபலன் என்ன வென்பது மறந்துபோயிற்று.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேடராசி என்று சொல்லக் கேள்வி. மேடராசிக்கு இப்போது அட்டமத்துச் சனி. அட்டமத்துச் சனி என்றபடியால் தானே இன்னமும் இரண்டு வருடம் இருக்க முன்னதாக ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டது.

தம்பி மைத்திரியின் கோசார பலன் எப்படியோ தெரியாது. யாருடையபலன் எப்படி இருந்தாலும் இந்த இலங்கைத் திருநாட்டின் ஒட்டுமொத்த பலனும் படுமோசம் என்றால் அட்டமத்தானாலும் எதுவும் செய்ய முடியாது.

ஆகையால் பிள்ளை சந்திரிகா! நீ கவனமாக இருக்க வேண்டும். எதிரணியின் பொது வேட்பாளராக மைத்திரியை நிறுத்துவது மட்டும் வெற்றியல்ல. தேர்தலைக் கையாள்வதில் உங்கள் தரப்புக் காட்டும் கெட்டித்தனத்திலும்தான் எல்லாம் தங்கியுள்ளது.

கிணறு பாய்கின்ற போட்டிக்குப் போனால் முழுக் கிணற்றையும் பாயவேண்டும். அரைக்கிணறு பாய்ந்தேன். முக்கால் கிணறு பாய்ந்தேன் என்று வீராப்பு பேசுவதால் என்ன பயன்? அரைக்கிணறு பாய்ந்தவனும் கிணற்றுக்குள்ள. முக்கால்கிணறு பாய்ந்தவனும் கிணற்றுக்குள்ள. ஆகையால், நீங்கள் இறங்கியிருப்பது கிணறுபாயும் போட்டி. கிணற்றை முழுமையாகப் பாய்வதுதான் புத்திசாலித்தனம்.

என்னவோ! இந்தத் தள்ளாத வயதில் இதைத் தவிர வேறு நான் என்ன சொல்ல முடியும்? 1995 இல் நீங்கள் செய்த வேலை, 2009 இல் இப்போது இருக்கிறவர் செய்த வேலை என எல்லாம் சேர்ந்து தமிழ் மக்களை வாட்டி வதைத்துப் போட்டுது.

என்ன செய்வது! புத்தபிரான் பொதுவானவர் என்றால் நல்லதொரு பாடம் நிச்சயம் படிப்பிப்பார். இந்த நம்பிக்கையைத் தவிர வேறெதுவும் என்னிடம் இல்லை. மீண்டும் கவனம் பிள்ளை கவனம்.

# திருவெம்பாவை

திருச்சிற்றம்பலம்
பாசம் பரஞ்சோதிக்கு என்பாய்
இராப்பகல்நாம்
பேசும்போது எப்போதுஇப் போதார்
அமளிக்கே
நேசமும் வைத்தனையோ
நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையும் சிலவோ விளையாடி
ஏசு மிடம்ஈதோ விண்ணோர்கள்
ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம் தந்தருள
வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற்
றம்பலத்துள்
ஈசனார்க்கு அன்பார்யாம் ஆர்ஏலோர்
எம்பாவாய்
திருச்சிற்றம்பலம்

பொருள்: சிறந்த அணிகளை அணிந்தவளே! நாம் பேசும் பொழுதெல்லாம் என் மேலான அன்பு, ஒளிப் பிழம்பான இறைவனுக்கே என்று எப்போதும் கூறுவாய். இப்போதோ அருமையான படுக்கையின் மேல் அன்பு வைத்து உறங்குகின்றனையே! (என்று துயில் எழுப்புவர் கூற விழித்து எழுந்தவள் மறுமொழி கூறுகின்றாள்) பெண்களே! சீச்சி! நீங்கள் பேசும் கேலி மொழிகளில் இவையும் சிலவாகுமோ? என்னோடு விளையாடிப் பழித்துப் பேசுதற்குரிய காலம் இதுதானோ? (எழுப்பியவர்கள் மறுமொழி) தேவர்களும் வழிபடுவதற்கு நாணுகின்ற தாமரை மலர்போன்ற திருவடியை அன்பர்களுக்குக் கொடுத்தருள எழுந்தருளியவன், ஒளி உருவினன். அத்தகைய தில்லைச் சிற்றம்பல இறைவனுக்கு அன்பு பொருந்திய நாங்கள் உனக்கு யார்? அயலவர் அல்லவே! அவன் அடிமைகளே!

கே.கே.கே.சிவபாலன்

# பிரதமர் மோடியின் செயற்பாடுகள் தமிழரின் நிரந்தர தீர்வுக்கானவை

(சென்னை)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பதவியேற்ற தருணத்தில் இலங்கை ஜனாதிபதியை சந்தித்த முதல் சந்திப்பிலேயே தமிழர்களின் நலன் குறித்து பேசியதோடு, தமிழர்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற சிந்தனையில் செயற்படத் தொடங்கியுள்ளதாகவும், பிரச்சினைக்கான நிரந்தர தீர்வை எட்ட உதவுவார் என்றும் அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தீவில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு ஓர் சர்வதேச சுயாதீன விசாரணை மூலம் நியாயம் வழங்கப்பட வேண்டுமென பிரித்தானிய தமிழர் பேரவை பல்வேறு தளங்களில் பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றது.

அதன் ஒரு அங்கமாக இந்திய அரசின் அமைச்சர்களையும் பாரதீய ஜனதா கட்சியின் பிரமுகர்களையும் அண்மையில் பிரித்தானிய தமிழர் பேரவையின் பிரமுகர்கள் டில்லியில் சந்தித்தார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# மைத்திரிபாலவின் ஆதரவாளரை தாக்கிவிட்டு தங்கநகைகளை கொள்ளையிட்டவர்கள் கைது


(கொழும்பு)

வென்னப்புவ கொலின் ஜாடிய பிரதேசத்தில், பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் ஆதரவாளர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டு 90 ஆயிரம் ரூபாய் பெறுமதியான தங்க மாலையை திருடிய குற்றச்சாட்டில் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள இரு சந்தேக நபர்களும் ஒரே குடும்பத்தை சேர்ந்த தந்தை மற்றும் மகன் என தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது. (இ-5)

# தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

## தம்பி கேளடா



தாவித்தாவிச் செல்லும் மனதைத் தம்பிகேளடா
கூவிக்கூவி யழைத்துக் கூடக் குடியிருத்தடா
சேவித்துஞ் சென்றிரந்துந் தம்பி கேளடா
சிவமேநா மென்றுதினஞ் சிந்தை செய்யடா
பாவித்தும் பாட்டிசைத்துந் தம்பி கேளடா
மூவிதமாம் ஆசைதன்னை முனிந்து வெல்லடா
வாவியாறு சேரிலங்கை நல்ல நாடடா
பாவியென்ற நாமந்தன்னைப் பகைத்து நில்லடா
தூவி மயிலேறும்வேலைத் துதித்துக் கொள்ளடா
நாவினில் நமச்சிவாயம் நவின்று நில்லடா.

# "பல கலைகளின் கல்விக்கூடமாக எம் குடும்பங்களை அமைப்போம்"

இன்று கிறிஸ்து பிறப்புக் காலத்தில் முதலாவது ஞாயிறாகும். இன்று நமக்குத்தரப்படும் பைபிள்பகுதி லூக்கா 2: 22-40 நற்செய்தியிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. பாலகன் இயேசுவை காணிக்கையாக கொடுத்த நிகழ்வை இப்பகுதி படம்பிடித்துக்காட்டுகின்றது. நேர்மையாளரும் இறைப்பற்றுக் கொண்டவருமான சிமியோன் என்பவர் இயேசுவின் தாயாகிய மரியாவை நோக்கி இதோ, இக்குழந்தை இஸ்ரயேல் மக்களுள் பலரின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாக இருக்கும் எனக் கூறிய பகுதி முக்கியமானது.

இயேசுவின் பிரசன்னம் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாயிருக்கும் என்றால் அது முற்றிலும் உண்மை. எங்கெல்லாம் இயேசு இருக்கிறாரோ, அங்கெல்லாம் எழுச்சியும் வீழ்ச்சியும் கட்டாயம் இருக்கும். சிமியோன்

## பரமபிதா காட்டிய பாதை


இறைவாக்கினர் சொன்னது முற்றிலும் உண்மை. மண்ணகத்தின் அரசர்கள், ஆட்சிகள் ஆட்டம் கண்டன. வீழ்ந்தன. யூதமும் அதன் சட்டமும் வீழ்ச்சி கண்டது. கிறிஸ்தவமும் அதன் ஆவியின் செயற்பாடுகளும் எழுச்சிபெற்றன. அநீதி, ஆணவம், அதிகாரவர்க்கம், ஆளும் வர்க்கம் வீழ்ச்சியடைந்தது. நீதியின் படி வாழ்வோர், தாழ்ச்சியுடையோர், நலிந்தோர் எழுச்சி பெற்றனர். பாவிகள், பெண்கள், ஒதுக்கப்பட்டோர் தலை நிமிர்ந்து வாழத்தொடங்கினர். சீரான சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற இலட்சியம் முளையிலேயே இயேசுவில் இருந்ததை சிமியோன் உணர்ந்து முன்னுரைக்கிறார். புதிய சமுதாயம் உருவாக எழுச்சி தேவை. நல்ல [illegible] நானிலத்தில் இருந்தால் அவர்கள் மூலம் எழுச்சி பெறும் புதிய சமுதாயம் உருவாகும்.

இயேசுவின் அன்னை மரியாள், தந்தை சூசை ஆகியோர் கொண்ட அக்குடும்பத்தைத் திருக்குடும்பம் என அழைக்கிறோம். ஒருவர் மற்றவரைப் புரிந்து கொண்டு நல்ல உறவில் வாழ்ந்த எடுத்துக்காட்டான குடும்பமே அவர்களது குடும்பமாகும்.

அவர்கள் குடும்பம் பல வகைகளில் நம் குடும்பங்களைப் போன்றதே. அவர்கள் பொருளாதாரத்தில் பின்தங்கியிருந்தார்கள். சாதாரண பற்றாக்குறைப் பிரச்சினை அவர்களுக்கும் இருந்தது. அவர்கள் சிறப்பாகத் தேர்வு செய்யப்பட்டவர்கள் என்றாலும் கடவுள் விருப்பம் அவ்விதமாகவே இருந்தது. புனிதமான அக்குடும்பத்தில் குழந்தை இயேசு மூன்று முக்கிய வாழ்க்கை நிலைகளான இறை ஞானத்திலும், வயதிலும், அருளிலும் நல்ல வளர்ச்சி பெற்றார். அந்த மூன்று பகுதிகளுமே நம் குடும்பங்களும் அவ்வாறு இருக்கின்றனவா என ஆய்வதற்கு உதவியாக இருக்கின்றன.

குடும்பம் என்பது ஒரு கோயில். குழந்தைகளின் இறைப்பற்றுக்கும் ஆன்மீக வளர்ச்சிக்கும் குடும்பமே பொறுப்பு. திருச்சபை குழந்தைகளுக்கு மறைக் கல்வியைக் கற்றுக் கொடுத்தாலும் பெற்றோரே நல்ல பண்பாடுகளில் கடவுள் நம்பிக்கையை ஊட்டி வளர்க்க வேண்டும். செபங்கள் மற்றும் விவிலியத்தின் அரிய மதிப்பீடுகளுடன் குடும்பமாக செபிப்பதற்கும் குழந்தைகளுக்குப் பெற்றோர்கள் கற்றுக் கொடுக்க வேண்டும். குழந்தைகளின் வளரும் பருவத்தில் சமயக் கல்விக்கு நாம் கால் அவகாசம் தரவேண்டும்.

ஒரு குடும்பம் அழிவை நோக்கிச் செல்லபலவித காரணங்கள் இருக்கின்றன. இன்றைய சூழ்நிலைகள் பல குடும்பங்களில் ஏறபடக் கூடிய சாதாரண பிரச்சினைகள் மிகைப்படுத்தப்பட்டு குடும்பங்கள் சிதைந்து போகும் சூழ்நிலை ஏற்படுவதைப் பார்க்கிறோம். இந்நிலையில் மறைந்த திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் 'குடும்பத்தின் முக்கியத்துவத்தை சமுதாயத்திற்கு அறிவித்திட அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். அதுவே சமுதாயத்திற்கு செய்யப்படும் சிறப்பான பணி" என்று கூறியுள்ளார். சமுதாயம் முன்னேற இயேசுவின் திருக்குடும்பம் ஓர் அருமையான சாட்சியாகும்.




ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

குடும்பத்தில் உள்ள எல்லோரும் ஒருவர் ஒருவரோடு அன்பிலும் சமாதானத்திலும் வாழ வேண்டும். அளவிலாத அன்பையும் பாசத்தையும் தொடர்ந்து வழங்கவேண்டும். குடும்பம் என்பது பூலோக வான்வீடாக அமைதல் வேண்டும். வருகின்ற புத்தாண்டில் புத்துணர்வோடும் புதுப் பொலிவோடும் நாம் எடுக்கவுள்ள உறுதி மொழிகளில் நம் குடும்பங்கள் இயேசு வாழ்ந்த திருக்குடும்பம் போன்று ஞானத்திலும், உடல் நலத்திலும், இறைவனின் அன்பிலும் அருளிலும் வளர உறுதி எடுப்போம். குடும்பம் பல கலைகளின் கல்விக் கூடமாக அமைய இறை அருள் வேண்டுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுமித் அபார சதம்**

# இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் வலுவான நிலையில் ஆஸி



அவுஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்டீவன் சுமித்தின் அபாரமான சதம் மூலம் இந்திய அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் அவுஸ்திரேலிய அணி வலுவான நிலையிலுள்ளது.

இந்தியா-அவுஸ்திரேலியா அணிகள் மோதும் 3 ஆவது டெஸ்ட் போட்டி மெல்பேர்ன் மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

முதலில் விளையாடிய அவுஸ்திரேலியா நேற்றுமுன தினம் ஆட்டத்தின் முடிவில் 5 விக்கெட் இழபபுக்கு 259 ஓட்டங்கள் எடுத்து இருந்தது. கப்டன் ஸ்டீவன் சுமித் 72 ஓட்டங்களும், விக்கெட் கீப்பர் ஹாடின் 23 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழக்காமல் இருந்தனர்.

நேற்று 2 ஆவது நாள் ஆட்டம் நடந்தது. அவுஸ்திரேலிய அணி தொடர்ந்து விளையாடியது. இந்த தொடரில் மோசமாக ஆடி வந்த ஹாடின் இந்த டெஸ்டில் சிறப்பாக விளையாடி தனது 18 ஆவது அரை சதத்தை பதிவு செய்தார். 97 ஆவது ஓவரில் அவுஸ்திரேலியா 300 ஓட்டங்களை தொட்டது.

மறுமுனையில் இருந்த கப்டன் சுமித் மிகவும் அபாரமாக விளையாடி சதம் அடித்தார். 191 பந்துகளில் 9 பவுண்டரி, 1 சிக்சருடன் 100 ஓட்டங்களை எடுத்தார். அவர் தொடர்ந்து 3 ஆவது சதத்தை அடித்து முத்திரை பதித்தார்.

ஹாடின் 55 ஓட்டத்தில் முகமது ஷமி பந்தில் ஆட்டம் இழந்தார். அப்போது ஓட்ட எண்ணிக்கை 326ஆகஇருந்தது. 6 ஆவது விக்கெட்டுக்கு இந்த ஜோடி 110 ஓட்டங்கள் எடுத்தது. அடுத்து வந்த மிச்சேல் ஜான்சனும் தனது பங்குக்கு 28 ஓட்டங்கள் எடுத்து அணிக்கு வலு சேர்த்தார்.

8 ஆவது விக்கெட்டான சுமித்-ஹாரீஸ் ஜோடி தொடர்ந்து ஓட்டங்களை குவித்தது. கடந்தடெஸ்டைபோலவேகடைசி நேர விக்கெட்டுகளை கைப்பற்ற முடியாமல் இந்திய பந்துவீச்சாளர்கள் திணறினார்கள். 121 ஆவது ஓவரில் அவுஸ்திரேலியா 400 ஓட்டங்களை குவித்தது.


வேகப்பந்து வீரரான ஹாரிஸ் 75 பந்துகளில் 7 பவுண் டரியுடன் 50 ஓட்டங்களை எடுத்தார் இது அவருக்கு 3 ஆவது அரை சதம் ஆகும். இதேபோல சுமித் அதிரடியாக விளையாடி 150 ஓட்டங்களை குவித்தார். 273 பந்துகளில் 10 பவுண டரி, 1 சிக்சருடன் அவர் இந்த ஓட்டங்களை எடுத்தார். இந்த ஜோடியை பிரிக்க இயலாமல் இந்திய பந்துவச்சாளர்கள் திணறினார்கள்.

அஸ்வின் ஒரு வழியாக இந்த ஜோடியை பிரித்தார். ஹாரிஸ் 74 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். அப்போது ஓட்ட எண்ணிக்கை 482 ஆக இருந்தது. 8ஆவது விக்கெட் ஜோடி 106 ஓட்டங்கள் எடுத்தது.


அடுத்து வந்த லயன் 11 ஓட்டங்களில்வெளியேறினார். அதிரடியான ஆட்டத்தால் சுமித் இரட்டை சதம் அடிப்பார் என்று எதிர்பார்க்கபட்டது. ஆனால்192 ஓட்டங்கள் குவித்து ஆட்டம் இழந்தார். 305 பந்துகளில் (15 பவுண் டரி, 2 சிக்சர்) அவர் இந்த ஓட்டங்களை எடுத்தார். அவரது அவுட்டோடு அவுஸ்திரேலியாவின் இன்னிங்ஸ் முடிந்தது. அவுஸ்திரேலியா 142.3 ஓவரில 530 ஓட்டங்கள் குவித்து 'ஓல் அவுட்' ஆனது. முகமது ஷமி 4 விக்கெட்டும், உமேஷ் யாதவ், அஸ்வின் தலா 3 விக்கெட்டும் கைப்பற்றினார்கள்.

பின்னர் இந்திய அணி முதல் இன்னிங்சை விளையாடியது. ஷிகார் தவானும், முரளி விஜய்யும் தொடக்க வீரர்களாக ஆடினார்கள்

தொடக்க ஜோடி நிதானத்துடன் ஆடியது. ஆனால் தவான் நிலைத்து நிற்கவில்லை. 28 ஓட்டங்கள் ஹாரிஸ் பந்தில் ஆட்டம் இழந்தார். அப்போது ஓட் 55 ஆக இருந்தது. 2 ஆவது விக்கெட்டுக்கு முரளி விஜய்யுடன் புஜாரா ஜோடி சேர்ந்தார். விஜய் சிறப்பாக விளையாடி அரை சதம் அடித்தார். 35 ஆவது ஓவரில் இந்தியா 100 ஓட்டங்களை தொட்டது. நேற்றைய ஆட்ட நேர முடிவில் இந்தியா ஒரு விக்கெட் இழப்புக்கு 108 ஓட்டங்கள் எடுத்து இருந்தது. முரளி விஜய் 55 ஓட்டங்களுடனும், புஜாரா 25 ஓட்டங்களுடனும் ஆடடம் இழக்காமலுள்ளனர். போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும் (க)







ஏழாலை முத்தமிழ் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற சுன்னாகம் பொலிஸாரின் நடமாடும் சேவையின் இறுதிநாள் நிகழ்வில் வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸார் அதிபர் பூஜித ஜெயசுந்தர கரப்பந்தாட்ட போட்டியில் 2 ஆம் இடத்தினை பெற்ற ஏழாலை கலைமகள் விளையாட்டுக் கழகத்திற்கு வெற்றிக்கிண்ணம் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மக்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.



## அனல் பறக்கும் பந்துவீச்சு; திணறியது இலங்கைச் சிங்கங்கள்

நியூசிலாந்து அணியின் அனல் பறக்கும் பந்து வீச்சின் மூலம் இலங்கை அணிக்கெதிரான முதல் டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் முடிவில் நியூசிலாந்து அணி வலுவான நிலையிலுள்ளது.

நியூசிலாந்து-இலங்கை அணிகள் மோதும் முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கிறிஸ்ட்சர்ச் நகரில் நடைபெற்று வருகிறது. முதலில் விளையாடிய நியூசிலாந்து நேற்றுமுன்தினம் ஆட்டத்தின் முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 429 ஓட்டங்கள் எடுத்து இருந்தது. கப்டன் மேக்குல்லம் அதிரடியாக விளை யாடி 134 பந்துகளில் 18 பவுண்டரி, 11 சிக்சருடன் 195 ஓட்டங்கள் குவித்தார். நேற்று 2 ஆவது நாள் ஆட்டம் நடந்தது. மேலும் 12 ஓட்டங்கள் எடுப்பதற்குள் நியூசிலா ந்து எஞ்சிய 3 விக்கெட்டை இழந்தது. அந்த அணி 441 ஓட்டங்கள் குவிதது 'ஓல் அவுட்' ஆனது.

பின்னர் இலங்கை அணி விளையாடியது. நியூசிலாந்து வீரர்களின் அனல் பறக்கும் பந்து வீச்சால் அந்த அணி திணறியது. இலங்கை அணி 42.4 ஓவரில் 138 ஓட்டங்களால் சுருண்டது. இதனால் 'பாலோஆன்' ஆனது.

கப்டன் மத்யூஸ் அதிகபட்சமாக 50ஓட்டங்கள் எடுத்தார. போல்ட், வாக்னர் தலா 3 விக்கெட்டும், சவுத்தி, நீசம் தலா 2 விக்கெட்டும் கைப்பற்றினார்கள்.

இலங்கை அணி தொடர்ந்து 2 ஆவது இன்னிங்சை விளையாடியது. நேற்று 2 ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 84 ஓட்டங்கள் எடுத்தது. கருணாரத்னே 49 ஓட்டங்களுடனும், சில்வா 33 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும். (க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோசமான...

வெள்ளம் மற்றும் மண்சரிவு அபாயம் காரணமாக 10 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிடுகின்றது.

எண்பதாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி கூறினார்.

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரண உதவிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

சீரற்ற வானிலையால் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களால் இதுவரை 24 பேர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் சிலர் காணாமல் போயுள்ளனர்.

இதுதவிர மண்சரிவு அபாயம் அடையாளம் காணப்பட்டுள்ள பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கு அதுகுறித்து தெளிவுபடுத்துவதற்கும், கூடுதல் அவதானம் நிலவுகின்ற பகுதிகளில் இருந்து மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

சீரற்ற வானிலைக் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளில் தொடர்ந்தும் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் மக்களின் இயல்பு வாழ்க்கை தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

[illegible]த்தளம் மாவட்டத்தில் உள்ள நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால் ஏழு பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியாவிலும் மழை சற்று ஓய்ந்துள்ள போதிலும் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

வெள்ளம் காரணமாக திருகோணமலை மட்டக்களப்பு பிரதான வீதியில் போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளது.

இதேவேளை மன்னார்- யாழ்ப்பாணத்திற்கான பிரதான வீதியில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையத்தின் மன்னார் மாவட்ட உதவிப் புணிப்பாளர் மொஹமட் ரியாஸ் தெரிவிக்கின்றார்.

பதுளை மாவட்டத்தில் கடும் மழைக் [illegible]ணமாக பல தோட்டப் பகுதிகளிலுள்ள மக்கள் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள தாழமுக்கமானது நாட்டிற்கு கிழக்காக நிலைகொண்டுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன் காரணமாக நாட்டின் சில பகுதிகளில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி பதிவாகக் கூடும் என திணைக்களத்தின் வானிலை அதிகாரி மொஹமட் சாலிஹீன் தெரிவிக்கின்றார்.

இதேவேளை, மண்மேடு சரிவு காரணமாக தடைப்பட்டிருந்த நுவரெலியா நகருக்குள் பிரவேசிக்கும் சகல வீதிகளும் தற்போது வழமைக்கு திரும்பியுள்ளதாக மாவட்ட செயலாளர் டி.பீ.ஜீ. குமாரசிறி தெரிவிக்கின்றார்.

எனினும், நுவரெலியா- இராகலை வதுமுல்ல -தியனில்ல வீதி ஊடான வாகனப் போக்குவரத்து இன்னும் வழமைக்குத் திரும்பவில்லை.

இந்த வீதியில் தொடர்ந்தும் மண்சரிவு அபாயம் நிலவியுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் அறிவித்துள்ளதாக நுவரெலியா மாவட்ட செயலாளர் கூறினார்.

மழை வெள்ளத்தினால் பொலநறுவை மாவட்டத்தில் 5,641 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக பொலநறுவை மேலதிக மாவட்ட [illegible]லாளர் பபாசீலி ஜயலத் குறிப்பிட்டார். (எ-11)

# இராணுவத்தை...

நான் உருவாக்கும் புதிய அரசியல் தேசிய பாதுகாப்புச் சபையை பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். வடக்கில் இராணுவத்தை அகற்றுவதற்கு நான் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இடமளிக் கப்போவதில்லை.

யுத்தத்தை வெற்றிகொண்ட இராணுவ வீரர்கள், முப்படை தளபதிகள் வெளிநாடுகளில் தூதர்களாக செயற்படுகின்றனர். எனது புதிய அரசில் யுத்த வெற்றியை எதிர கொண்ட தளபதிகளை மீளநாட்டிற்கு அழைத்து தேசிய பாதுகாப்புச் சபையை நான் பலப்படுத்துவேன். இந்த நாட்டை பிளவுபடுத்த விடமாட்டோம். எனக்கு எதிராக முன்வைக்கப்படும் போலியான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். வெலிகம பகுதியில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்திலேயே அவர் இதனைக் தெரிவித்துள்ளார். (எ-11)

# யாரை ஆதரிப்பது...

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோநோதராதலிங்கம், சிவசக்தி ஆனந்தன், வடக்கு சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடமாகாணசபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், ம.தியாகராஜா, இ. இந்திரராஜா, புளொட் அமைப்பின் மத்திய குழு உறுப்பினர் சந்திரகுலசிங்கம், சுத்தானாந்தா இந்து இளைஞர் சங்க தலைவரும் தமிழரசுக் கட்சி மத்தியகுழு உறுப்பினருமான ந.சேனாதிராஜா, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உபதலைவர் து.ரவி உள்ளிட்ட பலர் நேற்றுக் கூடி ஆராய்ந்துள்ளனர்.

இந்த கூட்டத்தில், வன்னி தேர்தல் தொகுதிக்கென நியமிக்கப்பட்ட தமிழரசுக் கட்சியின் மத்தியகுழு உறுப்பினர் ந.சேனாதிராஜா தலைமையில் இடம்பெறவுள்ள பிரசார நடவடிக்கைகளை கூட்டமைப்பு தீவிரமாக மேற்கொள்ளும் என்று தீர்மானித்துள்ளது எனத் தெரியவருகிறது. (எ-11)

# மு.காவின்...

யில், புதிதாக மாவட்ட அரச அதிபர் ஒருவரை நியமிக்க விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று நேற்று நள்ளிரவு வெளியிடப்படலாம் என்ற எதிர்பார்ப்புடன் மு.கா. நேற்று கூட்டத்தை முடிவுசெய்து வெளியேறியது என்றும், இந்த முடிவு சாதகமாக அமையும் பட்சத்தில் மகிந்தவுக்கு மு.கா.ஆதரவு வழங்கும் என்றும், அவ்வாறு இல்லையெனில் நடுநிலையான முடிவையே கட்சி எடுக்கும் என்றும் அந்தக் கட்சியின் முக்கிய உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். எனினும் மு.கா. முடிவை அறிவித்தபின்னர் அந்தக் கட்சியின் தலைவர்கள் சிலர் மைத்திரியின் பக்கம் சாய்ந்துகொள்வர்,என்றும் தெரியவருகிறது. (எ-11)

# யாழ்.இந்து...

மாணவனே தேசிய ரீதியில் முதலிடத்தைப் பெற்றவராவார்.

உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் மாத்தறை சுஜாதா கல்லூரியின் ஹிருனி உதார முதல் இடத்தில் சித்தியெய்தியுள்ளனர்.

கலைப் பிரிவில் கொழும்பு விசாகாவின் ஷாவினி நெத்சலா பத்திரன, பொது பாட விதானத்தில் மியூஸியஸ் வித்தியாலயத்தின் நிபுணி டயஸ் நாகவத்த, வர்த்தகப் பிரிவில் காலி தெற்கு மகளிர் வித்தியாலயத்தின் யு ஜி. பியூமி தனஞ்செ ஆகியோர் தேசிய ரீதியில் முதல் இடம்பெற்றுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் உயிரியல் பிரிவில் சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன் முகுந்தன் தர்சிகன் 3ஏ சித்திபெற்று முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

வணிகப் பிரிவில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவி பாலசுந்தரம் கௌசனா 3ஏ சித்திபெற்று முதலிடத்தையும் பெற்றுள்ளார்.

யாழ்.இந்து மாணவன் செல்வன்.எம். சோபிதன் பொதுப் பிரிவில் (ICT) ABC பெறுபேறினை பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தினையும் தேசிய மட்டத்தில் 4ஆம் இடத்தினையும் பெற்றுக் கொண்டார்.

கிளிநொச்சி [illegible] கல்லூரி மாணவி வர்த்தகப் [illegible] மாவட்ட ரீதியில் முதலிடத்தை பெற்றுள்ளார். ரி.தயந்திகா (3ஏ) என்ற மாணவியே முதலிடத்தை பெற்றுள்ளார்.

கிளி/மத்திய கல்லூரி மாணவன் கு.கதீஸ் (3ஏ) முதலாம் இடத்தை பெற்றுள்ளார். அத்துடன் விஞ்ஞான பிரிவில் மாவட்ட நிலையில் முதலாமிடத்தை இதே கல்லூரி மாணவர் இராமமூர்த்தி ஜனத் (3ஏ) பெற்றுள்ளார்.

இதேவேளை யாழ்.இந்துக் கல்லூரியில் 23 மாணவர்கள் 3ஏ சித்திபெற்றுள்ளனர். ஹாட்லிக் கல்லூரியில் 10 மாணவர்கள் 3ஏ சித்திபெற்றுள்ளனர், அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் 5 மாணவர்கள் 3ஏ சித்தி பெற்றுள்ளனர். (எ-11)

# க.பொ.த உயர்தர பெறுபேறுகள்

**யாழ்.இந்துக் கல்லூரி:-**

**3ஏ பெற்றோர் மொத்தம்-23**

**கணிதம்-** பி.டாருகீசன், எம்.சுதர்சன், என்.பத்மபிரியன், ரி.யதுர்சன், எஸ்.கேதாரன், எம்.துமிலன், வி.வாகீசன், கே.பவளஜன், கே.உமாசுதன், பி.குணவரன், ஆர்.நிரோஜன், ஏ.திருவேந்தன், எஸ்.சிவானுஜன், வி.யர்சிகன், கே.பிரதாபன், எம்.பிரகாஸ், ரி.அருணன், வி.டிலாற்றன், பி.சங்கீர்த்தன்

**உயிரியல்-** கே.கௌசிகாந் ,ஜி.விசாகபவன்

**கலை-**எஸ். பாதுஜன்

**வர்த்தகம்-**பி. சுயந்தன்

**ஹாட்லி கல்லூரி -பருத்தித்துறை**

**கணிதப் பிரிவு:-**

புவனேந்திரன் வைகுந்தன் (3ஏ)-மாவட்ட நிலை-2, செல்வகுமார் அனுஷன் (3ஏ), கணேஸ்வரன் கதிரன் (3ஏ), ஆனந்தமூர்த்தி சிவாகரன் (3ஏ), சிற்சபேசன் சுலக்ஷன் (3ஏ), புவனேந்திரன் சுரன் (3ஏ).

**உயிரியல் பிரிவு:-**

குலசிங்கம் மாலோகன் (3ஏ) மாவட்ட நிலை-2, தனபாலசிங்கம் கோகுலன் (3ஏ),

**வர்த்தகப் பிரிவு:-**

செல்வராசா கிருஷ்ணகுமார் (3ஏ), யோகேந்திரன் அரிகரன் (3ஏ)

**அருணோதயக் கல்லூரி:-**

**விஞ்ஞானப்பிரிவு**

கே.கௌசியன் 3A, கே.சோபனா 3A

**கணிதபிரிவு**

இ.அனுசன் 2AB, க.கோபிதா 2AB, சி.சசிக்குமார் B2C

**வர்த்தகப்பிரிவு:-**

வி.மதுசாளினி 2AB ,த.சுகந்தினி A2B

**கலைப்பிரிவு:-**

சி.குவைசியா 3A, பா.லவணன் 3A, சமகிதா 3A, ம.ரோசானி 2A, இ.தர்சன் 2AB, செ.கஜானி A2B,ஜெ. கௌதமி A2B,கு.டிலக்சனா A2B, கி.ஜெயதாஸ் ABC, வி.சிந்துஜன் ABS,பா. கஜீபனா 3B,ம.நிக்சனா 3B. (எ-11)

# மரண அறிவித்தல்

## திருமதி சுந்தரம்பிள்ளை ஞானப்பூங்கோதை

(ஓய்வுபெற்ற நெசவு மேற்பார்வையாளர்)



கணேஸ்வரம் அளவெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரம்பிள்ளை ஞானப்பூங்கோதை அவர்கள் 27.12.2014 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமசாமி, இராசலட்சுமி ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஜெயராசசேகரம், செண்பகவரதர்சேனாதிராசா, பாலியஅருணாதேவி மற்றும் துருபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ரகுராகவன் (ஆசிரியர்-கிளி/புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயம், கிளிநொச்சி), தர்சினி (இலங்கைப் போக்குவரத்துச் சபை-லிகிதர்), தமயந்தி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுகந்தினி (ஆசிரியர்-ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்), ஈஸ்வரன் (சமுர்த்தி உத்தியோகத்தர்), தியாகேசன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் கஜிதன், கவிசன், அஸ்மிதா, ஜாசினி ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.12.2014) முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் சொல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-சு.ரகுராகவன்
(ஆசிரியர், கிளி/புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயம்) மகன்
தொடர்புகளுக்கு:-0778453450

(சி-9630)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்திரி ஜனா...

தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், 30 வருடகாலமாக இலங்கையில் இடம்பெற்ற கொடூர யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் மூலம், கொண்டு வரப்படவேண்டிய சமாதானம் நாட்டில் நிலைநாட்டப்படவில்லை. கடந்த மூன்று வருட காலமாக சிறுபான்மை மக்களை இலக்குவைத்து பேரினவாத சக்திகளால் முன்னெடுத்துவரும் இன வாத செயற்பாடுகளினால் முஸ்லிம்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகினர்.

இச் செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மகிந்த ராஜபக்ஷ அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. பாராமுகமாக இருந்தது. இதன விளைவாக அளுத்கம பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் முஸ்லிம்களுக்குப் பெரும் இழப்புகள் ஏற்பட்டன.

இது குறித்து மகிந்த ராஜபக்ஷ கவலை கூடத்தெரிவிக்கவில்லை. இனிமேல் இவ்வாறான நடவடிக்கைகள் ஒருபோதும் இடம்பெறக் கூடாது என்பதற்காக பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாக வாக்குறுதி வழங்கியுள்ளார் என்றார். (எ-11)

## பாப்பாண்டவ...

விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஜனவரி மாதம் 13-ம் திகதி பாப்பாண்டவர் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார்.

பாப்பாண்டவரின் இலங்கை விஜயத்தின் போது பாதுகாப்பு கடமைகளுக்காக 23 ஆயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

ஐந்து பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் மற்றும் 17 சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் இந்தக் குழுவில் அங்கம் வகிக்க உள்ளனர்.

விசேட மோட்டார் வாகனத்தில் பாப்பாண்டவர் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து பௌத்தாலோக்க மாவத்தையில் அமைந்துள்ள வத்திக்கான் இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்பட உள்ளார். பாதையின் இரு மருங்கிலும் மக்கள் பாப்பாண்டவரை கண்டு தரிசிக்க சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பாப்பாண்டவரின் இலங்கை விஜயம் உறுதியாகியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. தேர்தல்கள் நடைபெற்றாலும் பாப்பாண்டவர் இலங்கைக்கு விஜயம் செய்வார் என தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

## சீரற்ற கால...

மாலை நேரங்களில் இடி, மின்னல் தாக்குதல்களினால் ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் மக்களுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது..

சீரற்ற காலநிலை காரணமாக நாட்டின் சகல பகுதிகளிலும் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## 155 அரசியல்வாதிகள்...

மைத்திரிபால சிறிசேனவுடன் 111 பேர் இணைந்து கொண்டுள்ளதுடன், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் 44 பேர் இணைந்து கொண்டுள்ளனர்.

அமைச்சர்களான ராஜித சேனாரட்ன, நவீன் திஸாநாயக்க, துமிந்த திஸாநாயக்க, ரிசாத் பதியூதீன், சம்பிக்க ரணவக்க, பிரதி அமைச்சர் எம்.கே.டி.எஸ். குணவர்தன உள்ளிட்ட 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து கொண்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, ஜனநாயகக் கட்சியின் பிரதித் தலைவர் ஜயந்தகெட்டகொட உள்ளிட்ட இரண்டு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் கட்சியில் இணைந்து கொண்டுள்ளனர். (எ-11)


### விற்பனைக்கு

பழைய குளிர்சாதனப் பெட்டி (Fridge), T.V (LED 48 அங்குலம்), மின்சாரத் திருகுவலை (தேங்காய் திருகுவலை), Shabari Motor Bike போன்றன விற்பனைக்கு உண்டு. (8482)

தொடர்புகளுக்கு : 0779530496

### DCM

யாழ்நகர், சுன்னாகம்

A/L 2017

கலை, வர்த்தக, தொழில்நுட்ப பிரிவுகள்

(C-9629)

ஆரம்பம்
ஜனவரி 3 : 8.00 A.M

### தேவை

எமது பட்டயக்கணக்காளர் நிறுவனத்திற்கு கணக்கியல் உதவியாளர்கள் தேவை.

**கணக்கியல் உதவியாளர் :** A/L வர்த்தகப் பிரிவில் சித்தியடைந்தோர். நாளாந்த படியாக 300 ரூபாய் வழங்கப்படும்.

**மற்றும் உணவு, தேவைப்படின் தங்குமிட வசதியும் வழங்கப்படும். நேரில் வரவும்**

தொடர்பு :140, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி. (பெற்றோல் செற் முன்பாக) 021 222 2478 0779530496 (8882)

### NEC

இரு இடத்திலும் பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

A/L 2017 கலை, வர்த்தக, கணித, உயிரியல், தொழில்நுட்ப பிரிவுகள்

ஆரம்பம்: 03.01.2015 சனி காலை 9.00 மணி

புதிய அனுமதிகளை இன்று முதல் பெற்றுக்கொள்ளலாம்.

(C-9628)

### ECONOMICS HALL

உயர்தரமாக்குவதே எம் உயர்தரக்கற்கை

A/L 2017

ஆரம்பம் 03.01.2015
காலை 8.00மணி

| பொருளியல் | கணக்கீடு | வணிகக்கல்வி |
|---|---|---|
| உதயன் | AP.பகீரதன் | யசோதரன் |

இல 108, நாவலர் றோட், யாழ்ப்பாணம். கிளை: ஸ்ரான்லி றோட்,

(8884)

### பதிவுக்கு முந்துங்கள் கடைசித் திகதி 04.01.2015

கோபுர தரிசனம் கோடி புண்ணியம்

**தென்னிந்திய தெய்வ தரிசனம்**

( கோயில்கள் சுற்றுலாத்தலங்கள் உள்ளடக்கம் )

ஐம்பூதஸ்தலங்கள் , ஆறுபடைவீடு, நவக்கிரக கோயில்கள் சிதம்பரம், சீர்காழி, மதுரைமீனாட்சி, உச்சிப்பிள்ளையார், ஸ்ரீரங்கம் , திருப்பதி, உட்பட 40 இற்கும் மேற்பட்ட கோயில்களையும் மற்றும் சுற்றுலாத்தலங்களையும் இந்த பயணத்தின் போது பார்வையிடலாம்.



**தரிசனம் : 15 நாட்கள் புறப்படும் திகதி : 18.01.2015**

இரு வழி விமான கட்டணம் (Return Air Ticket all Taxes) உயர்தரத்திலான மூன்று நேர சைவ உணவு, காலை, மாலை தேநீர் மற்றும் குளிர்பானம், சுத்தமான குடிநீர், குளியலறை இணைந்த தங்குமிட வசதி (Attched Bathroom) முழுசுற்றுலாவுக்கும் குளிரூட்டப்பட்ட வாகனம், திருப்பதியில் VIP வரிசையில் சென்று சுவாமி தரிசனம் செய்ய ஏற்பாடு செய்யப்படும். இரு வழி விமான நிலையத்திற்கான கட்டணம். Airport Transport up & Down

சென்னையில் பொருட்கள் கொள்வனவு செய்ய ஒரு நாள் ஒதுக்கப்படும்

ik tourism T.P: 077 10 10 104

கருணாகரப்பிள்ளையார் கோயில் வீதி, (இளந்தாரி கோயிலடி) இணுவில் கிழக்கு, இணுவில்

(சி-9620)

### மாபெரும் புத்தக கண்காட்சியும் மலிவு விற்பனையும்

பாலர் முதல் பாடசாலை உயர்வகுப்பு வரை உள்ள மாணவர்களின் கல்வித் தேவையை பூர்த்தி செய்ய.

2015 ஆம் ஆண்டுக்கான புதிய பாடத்திட்டங்கள் உள்ளடங்கலாக்கப்பட்ட பாடப்புத்தகங்கள், பயிற்சிப்புத்தகங்கள், மற்றும் அப்பியாசக் கொப்பிகள், எழுதுகருவிகள், காகிதாதிகள் பொருட்களையும் அனைத்து இந்திய வெளியீடுகளையும் பெற்றுக்கொள்ளலாம். அனைத்து புத்தகங்களுக்கும் 20%, பாடசாலை உபகரணங்களுக்கு 10%, அப்பியாசக் கொப்பிகளுக்கு 30 - 40% விசேட விலைக் கழிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

காலம்:-29.12.2014 முதல் 15.02.2015 வரை

நேரம்:- காலை 8.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை

**யாழ்.புத்தகசாலை**

305, 307, 309 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(ஞானம்ஸ் ஹோட்டல் அருகாமையில்)

(8840)

தொடர்புகளுக்கு:-0778349507, 0214545552








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.